தர்மசக்கரம்







ACC-NO-38683











குரோதன ௵ கார்த்திகை ௴ சக்கரம் 34 ஆரம் 11

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

திருப்பராய்த்துறை-639 115 திருச்சி ஜில்லா

சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

பொருளாதாரத் துறையில் எந்நிலையில் உள்ளவர்களுக்கும் தர்ம சக்கரம் கிடைக்கவேண்டும் என்கிற நோக்கத்துடன் சகாய சந்தா, சாதாரண சந்தா, டிபாசிட் சந்தா, சர்க்கார் நூல் நிலையங்களுக்கு இலவசமாக அனுப்புதல் ஆகிய முறைகளை நடைமுறையில் வைத்துள்ளோம்.

இன்றைக்குச் சமுதாயத்தில் மக்களுக்கு மனதைத் திருத்தி அமைக்கும் கருத்துக்கள் வழங்கப்படுவது அவசியமாகிறது. மக்கள் மனதிலுள்ள நல்லுணர்வுகளைத் தூண்டி விடவும், மக்களைப் பக்தி வழியில் நடாத்திச் செல்வதற்கும் தர்ம சக்கரம் மக்களில் பல பேருக்குக் கிடைக்க வேண்டும் என்று கருதுகிறோம். தர்ம சக்கர சந்தாதாரர்களின் எண்ணிக்கை அதிகமாகின்றவளவும், தர்ம சக்கரத்தைப் படிக்கின்றவர்களுடைய தொகை அதிகரிக்கின்றளவும் மக்கள் மனதில் நல்ல திருப்பம் உண்டாகும்.

தர்ம சக்கரம் சந்தாதாரர்கள் புதிய சந்தாதாரர்களைச் சேர்ப்பதற்கும், ஆண்டுச் சந்தா முடிவுறும் சந்தாதாரர்களை மீண்டும் புதுப்பிப்பதற்கும் முயல்வார்களானால் அது ஒரு சிறந்த ஞானயக்ஞ கைங்கர்யமாகும். புதிய சந்தாதாரர்களை அறிமுகப்படுத்தி அவர்களையும் சந்தாதாரர்களாகப் பதிவு செய்து கொண்டால் தொடர்ந்து இதழ்களைப் பெற வசதியாக இருக்கும்.

தர்ம சக்கரம் சந்தாதாரர்கள் ஒவ்வொருவரும் குறைந்த பக்ஷம் மூன்று புதிய சந்தாதாரர்களையாவது தர்ம சக்கரத்துக்குச் சேர்த்துத் தருவது என்று உறுதி செய்து கொண்டு செயல்படுவார்களானால் தர்ம சக்கர சந்தாதாரர்களின் எண்ணிக்கை மிக சுலபமாக உயர்ந்துவிடும். எவ்வளவுக்கெவ்வளவு புதிய சந்தாதாரர்களைச் சேர்க்கிறீர்களோ அவ்வளவுக்கவ்வளவு ஆன்மிகத் துறையில் நீங்கள் நற்பணி செய்தவர்களாகிறீர்கள். சந்தாதாரர்களின் விலாசங்களை எழுதிச் சந்தாத் தொகையையும் அனுப்பி வைத்தால் அவர்களைச் சந்தாதாரர்களாகப் பதிவு செய்துகொண்டு மாதா மாதம் முறையாக அவர்களுக்குத் தர்ம சக்கரம் அனுப்பி வைக்கப்படும். தர்ம சக்கரம் சந்தா சேர்க்கும் பணியில் அதிக ஊக்கம் காட்டுமாறு சந்தாதாரர்கள் வேண்டிக் கொள்ளப் படுகிறார்கள்.

தர்ம சக்கரத்தில் வரும் விஷயங்கள் நிரந்தரமான தத்துவ ஆராய்ச்சிகளாக இருக்கின்றன. எப்பொழுது வேண்டுமென்றாலும் திரும்பவும் வாசிக்கக்கூடிய ஒரு நூலாக இது அமைந்துள்ளது. ஆகவே சந்தாதாரர்கள் ஓர் ஆண்டின் பன்னிரண்டு தர்ம சக்கர இதழ்களையும் பொருளடக்கத்துடன் பைண்டு செய்து வைத்துக்கொண்டால் அது நல்லதொரு புத்தகமாக அமையும். நாம் படிப்பதற்கும், மற்றவர்களுக்குப் படிக்கத் தருவதற்கும் பைண்டு செய்த நூல் நன்கு பயன்படும். விரைவில் உங்கள் புதிய சந்தாதாரர்களை அறிமுகப்படுத்தக் கோருகின்றோம்.

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

திருப்பராய்த்துறை-639 115

திருச்சி ஜில்லா

தர்ம சக்கரம்

மாத சஞ்சிகை

சக்கரம் 34	குரோதன ஹூ கார்த்திகை மீ	ஆரம் 11

பொருளடக்கம்

வருட சந்தா:	உள்நாடு	ரூ. 15-00	வெளிநாடு	ரூ. 45-00
தனி இதழ்	,,	ரூ. 1-50	,,	ரூ. 4-00

அந்தர்யோக விவரங்கள்

மதுரையில் 18—11—85 திங்கட்கிழமை

இடம்: சிம்மக்கல் சமீபம் ஸ்ரீ சாரதா ஸமிதி, 1, c, மடம் சந்து லக்ஷ்மீநாராயணபுரம் அக்ரஹாரம்

நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

உணவு வசதி: பகல் உணவிற்கு ரூ. 3-00 செலுத்தி நேரில் சீட்டுப்பெற்றுக்கொள்ளவும்.

சேலம் ஜில்லா—ஓமலூரில் 24—11—85 ஞாயிற்றுக்கிழமை

இடம்: குப்புசாமி செட்டியார் ஆரம்பப்பள்ளி

நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

திருநெல்வேலி ஜில்லா—ஏரலில் 24—11—85 ஞாயிற்றுக்கிழமை

இடம்: அருள்மிகு சிவன் கோவில்

நேரம்: காலை 10-00 மணி முதல் மாலை 4-30 ம்ணி வரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி திவ்யானந்தர்

சேலம் ஜில்லா—மேச்சேரியில் 28—11—85 வியாழக்கிழமை

இடம்: சன்மார்க்க சங்கம்

நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி துருவானந்தர்

அந்தர்யோக விவரங்கள் [தொடர்ச்சி]

கோவை ஜில்லா—சித்திரச்சாவடியில் 1—12—85 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ ராமகிருஷ்ண-விவேகானந்த ஆச்ரமம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி ஸதானந்தர்
உணவு வசதி: பகல் உணவிற்கு ரூ. 2-00 மாலைச் சிற்றுண்டிக்கு ரூ. 1-50 நேரில் செலுத்தவும்

பெரியார் ஜில்லா—ஈரோட்டில் 1—12—85 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஈரோடு மஞ்சள் வியாபாரிகள் சங்கம், பார்க் ரோடு
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

திருநெல்வேலி ஜில்லா—அம்பாசமுத்திரத்தில் 1—12—85 ஞாயிறு

இடம்: அருள்மிகு அகஸ்தியர் திருக்கோவில்
நேரம்: காலை 9-30 மணிமுதல் 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி திவ்யானந்தர்

தென்ஆற்காடு ஜில்லா—அவலூர்ப்பேட்டையில் 7—12—85 சனி

இடம்: அகத்தீஸ்வரர் ஆலயம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

வடஆற்காடு ஜில்லா—ஆரணியில் 8—12—85 ஞாயிற்றுக்கிழமை

இடம்: அருள்மிகு வேதபுரீஸ்வரர் திருக்கோவில், கொசப்பாளையம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

திருநெல்வேலி ஜில்லா—சேரன்மகாதேவியில் 8—12—85 ஞாயிறு

இடம்: பாரத்வாஜ ஆச்ரமம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி ஸதானந்தர்
உணவு வசதி: பகல் உணவிற்கு ரூ. 2-00 மாலைச் சிற்றுண்டிக்கு ரூ. 1-50 நேரில் செலுத்தவும்

பெரியார் ஜில்லா—அம்மாப்பேட்டையில் 14—12—85 சனிக்கிழமை

இடம்: ஸ்ரீ ராமகிருஷ்ண ஞானயோக தபோவனம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணி வரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

திருநெல்வேலி ஜில்லா—தூத்துக்குடியில் 15—12—85 ஞாயிறு

இடம்: சச்சிதானந்த சபை சிவன் கோவில் தெரு
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி துருவானந்தர்

திருநெல்வேலி ஜில்லா—பெருங்குளத்தில் 15—12—85 ஞாயிறு

இடம்: அருள்மிகு கைலாசநாதர் திருக்கோவில்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி திவ்யானந்தர்

प्रज्ञानं ब्रह्म

தர்ம சக்கரம்

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்(கு) அல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.

சக்கரம் 34	குரோதன ஹூ கார்த்திகை மீ	ஆரம் 11

பிரார்த்தனை

ओं तच्छंयोरावृणीमहे । गातुं यज्ञाय गातुंयज्ञपतये दैवीस्वस्तिरस्तु नः
स्वस्तिर्मानुषेभ्यः । ऊर्ध्वं जिगातु भेषजम् शन्नो अस्तु
द्विपदे शं चतुष्पदे ॥ — पुरुषसूक्तम्

ஓம் தச்சம் யோராவ்ருணிமஹே। காதும் யக்ஞாய
காதும் யக்ஞபதயே। தைவிஸ்வஸ்திரஸ்து நः
ஸ்வஸ்திர் மானுஷேப்ய:। ஊர்த்வம் ஜிகாது
பேஷஜம்। சன்னோ அஸ்து த்விபதே சம் சதுஷ்பதே॥

—புருஷஸூக்தம்

ஓம் நமது நலத்துக்காகவென்று நாம் பிரார்த்திப்போமாக. வேள்வியைப் புகழ்ந்து பாடுவோமாக. வேள்வி வேட்பவனைப் புகழ்ந்து பாடுவோமாக. கடவுள் நமக்கு அருள் புரிவாராக. மக்களுக்கு நலன் உண்டாகுக. பயிர் பச்சை செழித்து வளர்க. நமக்கு ஆக்கம் உண்டாகுக. ஆடு மாடுகளுக்கு ஆக்கம்உண்டாகுக.

வேண்டும் வேண்டும் மெய் அடியார் உள்ளே விரும்பி எனை அருளால்
ஆண்டாய் அடியேன் இடர்களைந்த அமுதே அரு மா மணி முத்தே
தூண்டா விளக்கின் சுடர் அனையாய் தொண்டனேற்கும் உண்டாம்கொல்
வேண்டாது ஒன்றும் வேண்டாது மிக்க அன்பே மேவுதலே.

—திருவாசகம்

அருள் விருந்து

பேச்சினும் மிக்கது பண்பு.

மதச் சார்பற்ற அரசியல் வாழ்வு குப்பைக்கு நிகராம்.

நல்வாழ்வு வாழ்பவனுடைய பெருமை ஒப்புயர்வற்றது.

சொல் அழகினும் மிக்கது சீலம் நிறைந்த நல்வாழ்க்கையின் அழகு.

நல்வாழ்வுவாழ்கின்றவனுடைய திரிகரணங்களும் தூய்மைநிறைந்துள்ளன.

தன் மதமே ஒப்புயர்வற்றது என்று எண்ணுகிறவன் ஒரு விதப் பைத்தியக் காரன்.

வாழ்வில் சோதனையை அறியாதிருப்பவன் தன்னையே அறிந்துகொள்ளாதவனாகிறான்.

நாம் விரும்பியதை எல்லாம் சாதிக்கமுடியாது. ஆதலால் திருப்தி அடைந்து இருப்பதே முறை.

துன்பப்படுகின்றவனுக்கு அத்துன்பத்தைத் துடைத்துத் தள்ள உற்ற உபாயம் உழைப்பேயாம்.

பரஞானம் பெற்ற ஒருவனுக்குக் கலைஞானங்களெல்லாம் சிறு பிள்ளைகளின் வெறும் விளையாட்டுக்கு நிகராகின்றன.

பரம சாதுக்களைத் துன்புறுத்துபவன் தன் வினையின் விளைவினின்று ஒரு பொழுதும் தப்பித்துக்கொள்ள முடியாது.

தெய்விகம் தன்னிடத்தே இருப்பதால் அதை அறிந்துகொள்ளுகிறவன் ஒரு பொழுதும் அதினின்று பிசகமாட்டான்.

அகங்காரம் மனிதன் படும் துன்பங்கள் அனைத்துக்கும் மூலகாரணம். பின்பு தூய அன்போ அவனை ஆனந்தத்தில் நிலைத்திருக்கச் செய்கிறது.

கலைஞன் ஒருவன் பூர்ண கும்பத்தைத் தன் தலையின்மீது வைத்துக்கொண்டு பக்கத்திலிருப்பவர்கள் புரிகின்ற ஆடல் பாடல் அனைத்துக்கும் பொருத்தமாக ஆடுகிறான். ஒரு சொட்டுத் தண்ணீரும் அவன் தலையிலிருக்கும் கும்பத்தினின்று விழுகிறதில்லை. இதினின்று உண்மையொன்று வெளியாகிறது. தன் சொருபத்தைப் பரத்தின்கண் உறுதியாக நிலைத்திருக்கச் செய்கிறவன் எத்தொழிலைச் செய்தாலும் அதனால் அவன் நிஜசொருபம் கெட்டுப்போவதில்லை.

பரமஹம்சர் புகட்டிய

பெருநெறி விளக்கம்

பரமஹம்சதேவர் பக்தர்களுடன் உரையாடிக்கொண்டிருக்கின்றார். சாரதாவும், மகேந்திரரும் அக்கூட்டத்தில் இருக்கின்றனர். பரமஹம்சர் மகேந்திரரைப் பார்த்து "இளைஞர்களின் ஜாபிதா ஒன்றை ஆயத்தப்படுத்துவாயாக" என்று கூறியபொழுது மகேந்திரரும், மற்றப் பக்தர்களும் உரக்கச் சிரிக்கின்றனர்.

சாரதா: "நான் மணம் செய்துகொள்ள வேண்டுமென்று என்னுடைய உறவினர்கள் விரும்புகின்றார்கள். மகேந்திரர் என்னைப் பல முறை கல்யாண விஷயமாகத் திட்டி இருக்கின்றார்."

பரமஹம்சர்: "நீ ஏன் மணம் புரிந்து கொள்ளவேண்டும்? (மகேந்திரரைப் பார்த்து) சாரதா இப்பொழுது நல்ல மனநிலையில் இருக்கின்றான். முன்பெல்லாம் அவன் பார்வையில் தெளிவு இல்லை. இப்பொழுது அவன் மகிழ்ச்சியுடன் தென்படுகின்றான்."

பின்னர் பரமஹம்சர் மற்றொரு பக்தரிடம் பகர்ந்ததாவது: "நீங்கள் பூரணனை அழைத்து வரமுடியுமா?"

அவ்வமயம் நரேந்திரர் அங்கு வந்து சேர்ந்தார். ஸ்ரீ ராமகிருஷ்ணர் பக்தர் ஒருவரிடம் நரேந்திரனுக்கு உண்ணச் சில பட்சணங்கள் கொடுக்கும்படி கூறினார். நரேந்திரனைக் கண்டதும் அவர் பெருமகிழ்வு அடைந்தார். நரேந்திரனுக்குப் பட்சணம் தரும்பொழுது நாராயணனுக்கு அமுது படைப்பதாகவே அவர் உணர்ந்தார். இப்பொழுது அவர் அந்த எண்ணத்துடனே அன்புடன் நரேந்திரனைத் தடவிக் கொடுத்தார்.

சிறிது நேரத்திற்குப் பின் கோபால்மா அவ்வறைக்கு வந்தார். அவர் கோபாலனிடம் பக்தி செலுத்தி வந்தார். அவருக்குப் பல தெய்வக் காட்சிகளும் ஏற்பட்டு வந்தன. ஸ்ரீ ராமகிருஷ்ணர் அம்மாதை காமார்ஹாட்டியிலிருந்து அழைத்து வர ஒருவரை அனுப்பி வைக்கும்படி பலராமரிடம் கூறியிருந்தார். அந்த அம்மையார் அறைக்குள் வந்ததும் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார். அவர் ஸ்ரீ ராமகிருஷ்ணர் முன் நெற்றி தரையில் படும்படி கீழே விழ்ந்து வணங்கினார்.

பரமஹம்சர்: "நீ என்ன செய்கின்றாய்? நீ என்னைக் கோபாலன் என்று அழைக்கின்றாய். பின் ஏன் வணக்கம் செலுத்துகின்றாய்? இப்பொழுது அறைக்குள் சென்று எனக்கு உணவு தயாரிப்பாயாக. கடுகு முதலிய வாசனைப் பொருட்களைப் போட்டுத் தாளிக்கும் பொழுது இங்கிருந்தே நான் அந்த வாசனையை நுகரவேண்டும்." (எல்லாரும் நகைக்கின்றனர்.)

கோபால்மா: "இந்த வீட்டில் உள்ளவர்கள் என்னைப்பற்றி என்ன நினைப்பார்கள்?"

அவர் அந்த அறையை விட்டுப் போவதற்கு முன்பு நரேந்திரனிடம் அன்புததும்பும் குரலில் கூறியதாவது: "குழந்தாய், நான் லட்சியத்தை அடைந்துவிட்டேனா அல்லது இன்னமும் வெகு தூரம் செல்லவேண்டுமா என்பது தெரியவில்லையே?"

அன்று ரதோற்சவ நாளாகும். ஆகையால் குடும்பத் தெய்வத்திற்கு வழிபாடுகள் செய்வதில் சிறிது தாமதமாயிற்று. வழிபாடு முடிந்ததும் அக்குடும்பத்தினர் ஸ்ரீ ராமகிருஷ்ணரை உணவு அருந்தும்படி கேட்டுக்கொண்டனர். உணவு அருந்தும் கூடத்துக்குப் பரமஹம்சர் சென்றார். பக்திமதிகள் அவரைக் காண்பதற்கு ஆவலுடன் காத்திருந்தார்கள்.

ஸ்ரீ ராமகிருஷ்ணருக்குப் பக்தைகள் அநேகர் இருந்தனர். அவர்களைப் பற்றி அவர் பக்தர்களிடம் ஒன்றும் பேசமாட்டார். பக்தர்களாக இருப்பினும் ஆண்கள் பெண்பாலர்களிடம் பழகும் பொழுது எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்று கூறுவார். நெருங்கிப் பழகினால் நெறி வழுவிப் போக நேரிடலாம் என்று அவர் எச்சரிக்கை செய்வார். சில பக்தர்களுக்கு அவர் பகர்ந்துள்ளதாவது: "பெண் ஒருத்தி பக்தியினால் தரையில் உருளும் பொழுதுகூட நீ அவளுக்குப் பக்கத்தில் போகக் கூடாது." பரமஹம்சர் 'ஆண்களும், பெண்களும் தனித்து வாழவேண்டும்; அப்

பொழுதுதான் அவர்கள் சாதனையில் முன்னேற்றம் அடைவார்கள்' என்று பகர்வார். பெண்பாலர்களும் 'கோபாலா' என்று சொல்லிக்கொண்டு ஆண்களிடம் மிகவும் நெருங்கிப் பழகலாகாது. அதிகமாக நெருங்கிப் பழகினுல் மனம் கீழ்நிலைக்குச் சென்று அவ்வுறவு முறையில் ஆபத்து நேர்ந்து விடலாம் என்பது பரமஹம்சரின் கருத்தாகும்.

பரமஹம்சர் உணவு முடித்தான பிறகு பக்தர்களுடன் வரவேற்பறையில் அமர்ந்திருந்தார். அப்பொழுது பகல் ஒரு மணி இருக்கும். பக்தர் ஒருவர் அவர் வீட்டிலிருந்து பூரணனை அழைத்து வந்தார். 'பூரணன் வந்துவிட்டான்' என்று பூரிப்புடன் பரமஹம்சர் பகர்ந்தார். நரேந்திரர், இளையநரேன், ஹரிபாதன் இன்னும் மற்ற பக்தர்கள் பரமஹம்சரிடம் உரையாடிக்கொண்டிருந்தனர்.

இளையநரேன்: "ஐயனே, நமக்கு இச்சா சுதந்தரம் உண்டா?"

பரமஹம்சர்: முதலில் 'நான்' என்பது எது என்பதை அறிந்துகொள். நான் என்பதை ஆராயும்பொழுது கடவுள் வெளிப்படுகின்றுர். நான் யந்திரம். இறைவன் யந்த்ரீ. கடவுள்தான் கர்த்தா. உன்னைக் கர்த்தாவாகக் கருதாது உலகத்தில் கடமைகளைச் செய்து வா. யாண்டும் கடவுளைக் கர்த்தாவாகவும், உன்னை அவருடைய கையில் உள்ள கருவியாகவும் நினைத்துக்கொள்.

"மனிதன் பல உபாதிகளை உண்டாக்கிக் கொள்கின்றுன். உபாதிகள் இருக்கும்வரையில் அக்ஞானம் அகலாது. 'நான் ஒரு கல்விமான்; ஒரு ஞானி; செல்வந்தன்; மரியாதைக்குரியவன்; தலைவன், தந்தை, ஆசிரியன்' என்று எண்ணுவதெல்லாம் அக்ஞானத்திலிருந்து உதித்தவைகளாகும். 'இறைவா, நான் கருவி. இந்தக் கருவியைப் பயன்படுத்தும் கர்த்தா நீ' என்று உணர்வது ஞானமாகும். ஞானம் வந்தால் உபாதிகள் எல்லாம் அழிந்து பட்டுப் போகின்றன. மரக்கட்டை முழுதும் எரிந்து போய்விடுகிறபொழுது ஓசையோ, உஷ்ணமோ இருப்பதில்லை. உபாதிகள் எல்லாம் ஒழிந்துபோய்விட்டால் சாந்தம் நிலவுகிறது. (நரேந்திரனைப் பார்த்து) நரேன், நீ கொஞ்சம் பாடுவாயாக."

நரேந்திரர்: "எனக்கு வேலைகள் பல இருக்கின்றன. நான் வீட்டுக்குப் போயாக வேண்டும்."

பரமஹம்சர்: "ஆம், குழந்தாய்! நீ சொல்லுவது சரிதான். நாங்கள் சொல்வதை நீ ஏன் கேட்கவேண்டும்? பணக்காரர்களுடைய சொல்லுக்குத்தான் மதிப்பு உண்டு. ஏழைகளின் சொல்லை யார் கேட்பார்கள்? (எல்லாரும் சிரிக்கின்றனர்.) குகனுடைய தோட்டத்தில் அமைந்திருக்கும் வீட்டுக்கு நீ அடிக்கடி வருகின்ருய் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். 'நரேன் எங்கே? அவன் இன்றைக்கு இங்கு வரவில்லையா?' என்று நான் கேட்கும்பொழுதெல்லாம் நீ குகனிடம் போய்விட்டதாகக் கூறுகிருர்கள். உன்னைப்பற்றி நான் இவ்வாறு பேசவேண்டியதில்லை. ஆனல் உன்னுடைய பேச்சு வலுவில் என்னை இவ்வாறு பேசும்படி செய்கிறது."

நரேன் சில நிமிஷங்கள் அமைதியாக இருந்தார். பிறகு அவர் பகர்ந்ததாவது: "இசைக் கருவிகள் ஒன்றும் இல்லை. இசைக்கருவிகள் இல்லாது நான் பாடலாமா?"

பரமஹம்சர்: "குழந்தாய்! இதோ எங்களிடம் இருப்பதை உன்னிடம் தருகின்றோம். அது உனக்குப் பொருத்தமாக இருக்குமானல் நீ பாடலாம். பலராம்தான் இவைகளையெல்லாம் ஏற்பாடு செய்துள்ளார் என்பதை நீ தெரிந்துகொள்."

பலராம் என்னிடம் கூறியதாவது: "தயவு செய்து படகில் கல்கத்தா வந்து சேருங்கள். தேவையென்ருல் வண்டி அமர்த்திக்கொள்ளுங்கள்." (எல்லாரும் சிரிக்கின்றனர்.)

"அவர் இன்றைக்கு நம் அனைவருக்கும் விருந்து அளித்திருக்கிருர். இன்று மாலை நம்மை நடனமும் ஆடச்செய்வார். (எல்லாரும் நகைக்கின்றனர்). ஒரு நாள் இங்கிருந்து தக்ஷிணேசுவரம் செல்லுவதற்கு அவர் ஒரு வாடகை வண்டி அமர்த்தினர். வாடகை பன்னிரண்டு அணுக்கள் என்று கூறினர். நான் அவரிடம் கேட்டதாவது: "இங்கிருந்து தக்ஷிணேசுவரம் போவதற்குப் பன்னிரண்டு அணு போதுமா?' 'அதுவே அதிகம்' என்று அவர் கூறினர். தக்ஷிணேசுவரம் அடைவதற்குள் அந்த வண்டியின் ஒரு பக்கம் அச்சு முறிந்து

விட்டது. (எல்லாரும் நகைத்தனர்) மேலும் குதிரையும் அடிக்கடி நின்று நின்று சென்றது. அது நின்ற பொழுதெல்லாம் வண்டிக்காரன் அதைச் சவுக்கால் அடித்தான். அடி விழுந்தால் கொஞ்சதூரம் ஓடும். (யாவரும் நகைத்தனர்.) இன்று மாலை நிகழ்ச்சியில் ராம் மிருதங்கம் வாசிக்க நாம் எல்லாரும் நடனமாடவேண்டும். ஆனால் ராமுவுக்குத் தாளமே தெரியாது. (எல்லாரும் சிரிக்கின்றனர்.) இதுதான் பலராமின் கருத்தாகும்: "ஆடுங்கள், பாடுங்கள், எப்படியாவது சந்தோஷமாக இருங்கள்." (யாவரும் மீண்டும் சிரிக்கின்றனர்.)

அப்பொழுது இதர பக்தர்களும் வந்துசேர்ந்தார்கள். தூரத்தில் இருந்து மகேந்திர முகர்ஜி பரமஹம்சருக்கு வணக்கம் செலுத்தினர். பரமஹம்சரும் அவருக்கு வணக்கம் செலுத்தினர். பிறகு மகேந்திரருக்கு முஸல்மான் போன்று சலாம் செய்தார். தம் பக்கத்திலிருந்த வாலிப பக்தரிடம் பரமஹம்சர் கூறியதாவது: "அவருக்கு நான் சலாம் போட்டதை நீ ஏன் சொல்லவில்லை? நான் சலாம் செய்தது அவருக்குத் தெரிந்தால் அவர் அதை மிகவும் பாராட்டுவார்." (எல்லாரும் நகைத்தனர்.)

அநேக பக்தர்கள் தங்கள் மனைவிமார்களுடன் வந்திருந்தார்கள். இன்னும் மற்றச் சொந்தக்காரர்களுடனும் வந்திருந்தார்கள். அவர்கள் அனைவரும் பரமஹம்சருக்கு வணக்கம் செலுத்தவும், அவர் ரதத்துக்குமுன் நடனமாடுவதைப் பார்க்கவும் விரும்பினர்கள். ராம், கிரீஷ் இன்னும் மற்றப் பக்தர்களும் ஒவ்வொருவராக அங்கு வந்து கூடினர்கள். இளைஞர்கள் பலர் ஆங்கு வீற்றிருந்தனர். நரேந்திரரும் ஆங்கு இருந்தார். அது ஒரு நல்ல சத்சங்கமாக இருந்தது. பக்தர்கள் அனைவரும் பரமஹம்சருடன் இருப்பதில் பரமானந்தமுற்றிருந்தனர்.

நரேந்திரர் பாடலானர். அவர் பாடிய பாடலின் கருத்தாவது: "பேரானந்தம் ஏற்படும் நாள் என்று வரும்? என் உள்ளத்தில் பேரன்பு எழுவது எப்பொழுது? ஹரியின் நாமத்தை நான் சொல்லும்பொழுது என் கண்களில் கட்டில் அடங்காத நீர் பெருக்கெடுக்கும் நாள் எந்நாளோ? என் விருப்பம் என்று நிறைவேறுமோ? என் மனது தூயதாகும் நாள் எந்நாளோ? பிருந்தாவனத்திலுள்ள புனிதம் நிறைந்த தோப்புகளுக்குள் நான் சென்று என்னைப் புனிதப்படுத்திக்கொள்ளும் நாள் எந்நாளோ? உலகப் பற்றுக்கள் என்னைவிட்டு என்று அகலுமோ? என்னிடமுள்ள அஞ்ஞானம் அகன்று ஞானக்காட்சி என்று அமையுமோ? ஊன் சரீரத்தைத் தூய ஞான சரீரமாக மாற்றும் ஸ்பரிசவேதிக் கல் என்று எனக்கு அகப்படுமோ? அந்த ஸ்பரிசவேதிக் கல்லைத் தொட்டு ஞான உடல் பெறும் வித்தையை நான் என்று கற்றுக்கொள்வேனே? இவ்வுலகைக் கடவுளாகக் காணும் காட்சியை என்று பெறுவேனே? பக்தி என்னும் பாதையில் என்று உருளுவேனே? ஜாதி, கடமை, கட்டுப்பாடு ஆகிய எண்ணங்களை எல்லாம் என்று விட்டொழிப்பேனே? அச்சம், வெட்கம், மரபு, கவலை, தற்பெருமை இவைகளை விட்டு என்று விலகுவேனே?"

"பக்தர்களின் திருவடியிலிருந்து வீழ்ந்த புழுதியை எடுத்து நான் என் மேனியில் பூசிக்கொள்வேன். தியாகம் என்னும் மூட்டையை என் தோளில் தொங்கவிட்டுக் கொள்வேன். யமுனை நதியின் நீரை இரண்டு கைகளாலும் அள்ளிப் பருகி வாழ்க்கையைப் புதுப்பித்துக் கொள்வேன். பக்தியில் பயித்தியம் பிடித்தவனுவேன். ஆனந்தத்தால் அழுவேன்; சிரிப்பேன். சச்சிதானந்தம் என்னும் பேரானந்தக் கடலில் நீந்தி விளையாடுவேன். இறைவனின் பேரன்பைப் பருகுவேன். அப்பேரன்பை நான் பருகியது போன்று மற்றவர்களையும் பருகச் செய்வேன். ஹரியின் திருவடிகளில் என்றென்றும் நான்விளையாடிக் கொண்டிருப்பேன்."

நரேந்திரன் மீண்டும் பாடியதாவது: "தாயே! அடர்ந்த இருள் செறிந்த வனத்தில் உன்னுடைய உருவமற்ற அழகு பிரகாசிக்கின்றது. ஆகையால் இருள் நிறைந்த மலைக்குகையுள் உம்மை யோகிகள் தியானிக்கின்றனர்."

பலராம் கீர்த்தனை பாடுவதற்குச் சங்கீத வித்வான் வைஷ்ணவசரணை ஏற்பாடு செய்திருந்தார். வைஷ்ணவசரன் பாடிய பாடலின் கருத்தாவது: "ஓ! நாவே, துர்க்காதேவியின் நாமத்தை எப்பொழுதும் ஜபிப்பாயாக. துர்க்காதேவியைத் தவிர உன்னைத் துயரத்திலிருந்து காப்பாற்றுபவர் யார்?"

எந்நாள் கண்ணி

(தாயுமானவர் இயற்றியது)

14-21. வாடாதே நானுவாய் மாயாதே எம்கோவை
நாடாதே நாடி நலம் பெறுவது எந்நாளோ.

பயிர்கள் நீர் இல்லாவிட்டால் வாடுகின்றன. போகிகள் போகப் பொருள் இல்லாவிட்டால் வாடுகின்றனர். காதலன் காதலி இல்லாவிட்டால் வாடுகின்றான். பக்தன் பகவான் இல்லாவிட்டால் வாடுகின்றான். ஞானி ஞானம் இல்லாவிட்டால் வாடுகின்றான். வாட்டம் என்பது மனது பரிதவிக்கின்ற நிலையைக் குறிக்கின்றது. போகத்தை முன்னிட்டுப் பரிதவிக்கின்ற நிலை ஒவ்வாது.பரத்தைக் குறித்துப் பரிதவிக்கின்ற நிலைதான் வேண்டப்படுவது. பொதுவாக மக்கள் போகத்தை முன்னிட்டுப் பரிதவிக்கின்றார்களே ஒழிய பரத்தை முன்னிட்டுப் பரிதவிப்பதில்லை. உலக மக்கள் போன்று போகப் பொருள்களைக் குறித்து என் உள்ளம் பரதவிக்கின்ற நிலையை அடையக்கூடாது என்பதை 'வாடாதே' என்ற சொல்லால் தாயுமானவர் குறிப்பிடுகின்றார்.

செல்வம், பேர், புகழ், பட்டம், பதவி, லௌகிகக் கல்வி முதலியவை பலவகையான போகத்தைத் தரும் பொருள்களாகின்றன. ஆண்களுக்கு நாரியர் போகமும், நாரியர்களுக்கு ஆடவர் போகமும் மயக்கத்தை விளைவிக்கின்றன. மனது காமம் என்னும் மயக்கத்தில் மூழ்கும் பொழுது கலக்கம் அடைகின்றது. அப்பொழுது மனதிலுள்ள தெளிவுநிலை மறந்து மயக்கநிலை உண்டாகின்றது. மனதுக்கு மயக்கத்தை உண்டுபண்ணும் பலவிதமான உலக போகங்களுள் மனிதனுடைய மனமானது அழுந்திக் கெட்டுப்போகாமல் இருக்கவேண்டுமென்று தாயுமானவர் இறைவனைப் பிரார்த்திக்கின்றார். 'நானுவாய் மாயாதே' என்ற சொற்றொடர்கள் இக்கருத்தை விளக்குகின்றன.

நம் வாழ்க்கைக்கு வழிகாட்டும் தலைவர் ஒருவர் நமக்குத் தேவை. அத்தலைவரிடம் நம்மை ஒப்படைத்து விட்டால் அவர் நம்மை நல்வழியில் இட்டுச் செல்வார். நமக்கு ஒப்பற்ற தலைவராக விளங்குபவர் இறைவன் ஆகின்றார். அருள்தாகம் உண்டாகும் பொழுது உள்ளம் இறைவனை நாடிச் செல்கின்றது. போகப் பொருளில் நாட்டம் கொண்டிருக்கும் உள்ளம் இறைநாட்டம் கொள்வதில்லை. போகப் பொருளினிடத்து நாட்டம் கொள்ளாது இறைவா, அருள்தாகம்கொண்டு உன்னிடத்து நாட்டம் கொள்வேனாக.

கேடு தருவதையே நலம் தருவது என்று எண்ணுவது அக்ஞானிகளின் போக்கு. போகத்தை நாடுபவர்கள் நலம் தருவது எது என்பதைக் கண்டு பிடிக்க முடியாது. அவர்கள் நாடுகின்ற நாட்டம் மனதை மாசுபடுத்திக் கொண்டே இருக்கும். மனதில் அருள்தாகம் உண்டாகும் பொழுது நாம் நம்மை அறியாது நலத்தை நாடிப்போகின்றோம்.கடவுள் நாட்டம் கொண்டிருப்பதும் நலத்தை நாடிப் போவதும் ஒன்றே. 'மயக்கத்தைத் தரும் போகவாழ்வில் ஈடுபடாது நலத்தைத் தரும் பாரமார்த்திகம் என்னும் பெருவாழ்வில் அருள்தாகம் கொண்டு தம் உள்ளம் நாட்டம் கொள்வது எந்நாளோ' என்று தாயுமானவர் இக்கண்ணியில் இறைவனிடம் விண்ணப்பிக்கின்றார்.

14-22. ஆடலையே காட்டி எனது ஆடல் ஒழித்து
[ஆண்டான்பொன்
தாள் தலைமேல் சூடித் தழைக்குநாள்
[எந்நாளோ.

பரம்பொருள் அசைகின்ற நிலையில் பிரபஞ்சமாக வடிவெடுக்கின்றது. பிரபஞ்சத்திலுள்ள பொருள்களெல்லாம் அசைந்து கொண்டே இருக்கின்றன. அசைகின்ற நிலையில் உச்சநிலையில் இருப்பது நடராஜமூர்த்தியின் நர்த்தனமாகும். மனம் அசைவதால் சஞ்சலம் உண்டாகிறது. மனதானது நடராஜமூர்த்தியை நோக்கி அசைதல்வேண்டும். நடராஜமூர்த்தி ஒருகையில் மானை ஏந்தியுள்ளார். அம்மான் அவருடைய முகவிலாசத்தைப் பார்த்துக் கொண்டே இருக்கிறது. மான்போன்று அலையும் மனதைத் தம்மிடம் திருப்புமாறு அவர் அக்காட்சியின்மூலம் நமக்குப் புகட்டுகின்றார். பாம்பு படமெடுத்து ஆடும்பொழுது அது நமக்குத் தீங்கு விளைவிக்கும். ஆனால் மகுடிக்கு வசப்பட்டு ஆடுகின்ற பாம்பு பாம்பாட்டிக்குத் தீங்கு விளைவிப்பதில்லை. அங்ங

னம் பிரபஞ்சத்தை நோக்கி அசைகின்ற மனது நமக்கு ஆசை என்னும் தீங்கை விளைவிக்கின்றது.• ஆனல் நடராஜருடைய நர்த்தனத்துக்கு வசப்பட்டு அசையும் மனது தீங்கு எதையும் விளைவிப்பதில்லை. பிரபஞ்சத்தை நோக்கி அசையும் மனது உலகப்பற்று உடையதாக மாறுகிறது. இறைவனை நோக்கி அசையும் மனது இறைப்பற்று உடையதாக மாறுகிறது. தெய்வப்பற்று வளர்ந்து வரவர உலகப்பற்று குறைந்துபோகும். இறைவன் நம் உள்ளத்தைக்கவர்ந்து இழுப்பானுகில் அது உலகப்பற்றைத் தாண்டி இறைவனுல் ஆட்கொள்ளப்படுகிறது. 'பற்றற்ருன் பற்றினைப் பற்றுவதே, உலகப்பற்றை ஒழிப்பதற்கு உபாயமாகும்.

கையால் தூணை உறுதியாகப் பிடித்துக் கொண்டிருக்கின்ற குழந்தை எவ்வளவு வேகமாகச் சுற்றினுலும் கீழே விழுந்துவிடாது. தூணைப் பிடித்திருக்கும் பிடியை விட்டுவிடுமானுல் அது கீழேவிழுந்து விடும். தூணை உறுதியாகப் பிடித்திருக்கும் வரையில் அது கவலையில்லாது சுற்றிக்கொண்டிருக்கலாம். இறைவனுடைய திருவடியை உறுதியாகப் பிடித்துக் கொண்டிருக்கின்ற மனம் உலக விஷயங்களில் அமுந்திப் போவதில்லை. இறைவன் திருவடியை விட்டுவிடுமானுல் அது விரைவில் உலகப்பற்றில் அழுந்திப் போய்விடும். உலகப் பற்றில் அழுந்திப்போகாதபடி உன் திருவடியை உறுதியாகப் பற்றிக்கொண்டு வாழ்வில் மேலோங்கி வருகின்ற நாள் விரைவில் தமக்கு வந்து வாய்க்கவேண்டுமென்று தாயுமானவர் இக்கண்ணியில் இறைவனிடம் விண்ணப்பித்துக்கொள்கின்ருர்.

14-23. மேலொடுகீழ் இல்லாத வித்தகனுர் தம்முடனே
பாலொடுநீர் போல்கலந்து பண்புறுவது
[எந்நாளோ.

உயர்வென்றும் தாழ்வென்றும் உலக நிலையில் உண்டு. பாரமார்த்திக நிலையில் தாழ்வுக்கே இடமில்லை. அந்நிலையே உயர்வற உயர்நலம் என்று பேசப்படுகிறது. உலக வாழ்க்கையில் சிலர் உயர்ந்த நிலையில் இருக்கிருர்களென்றும் சிலர் தாழ்ந்த நிலையில் இருக்கிருர்களென்றும் பேசப்படுகின்றனர். ஆனல் பாரமார்த்திக நிலையை எட்டியவர்கள் அனைவரும் உயர்ந்தவர்களே ஆகின்ருர்கள். கடலை அடைகின்ற நீர், கடல் மயமாகி விடுகின்றது. புனிதம் நிறைந்த கங்கை, கடலில் கலந்த பிறகு அது கடல் மயமாகி விடுகிறது. காலால் தீண்டுவதற்கும் தகுதியற்ற சாக்கடை நீர், கடலில் கலந்தால் கடல் மயமாகிவிடுகிறது. கடலில் கலந்த பிறகு சாக்கடையையும் கங்கையையும் வெவ்வேருகக் கருதுவதில்லை. ஈசா, உம்மை அடைந்த அனைவரும் உயர்வு தாழ்வுக்கு அப்பாலுள்ள உமது மயம் ஆகிவிடுகின்றனர்.

உலகத்திலுள்ள நல்லவர்களோடு நாம் சேர்ந்தால் நாம் நல்லவர்களாகமாறி அமைகின்ருேம். உலகத்தில் உள்ள தீயவர்களோடு நாம் சேர்ந்தால் நாம் தீயவர்களாக மாறி விடுகின்ருேம். ஆகவே நல்லவர்களைத் தேர்ந்து எடுத்து அவர்களோடு சேரவேண்டும். இறைவன் நன்றுடையான், தீயதில்லான் ஆகின்ருர். இறைவனைச் சேர்கின்ற நாம் முற்றும் நலமே வடிவெடுத்தவர்களாகிவிடுகின்ருேம். பாலோடு சேர்கின்ற நீர், பாலின் நிறத்தை எடுத்துக் கொள்வது போன்று இறைவா, உம்மோடு சேர்ந்து உமதுமயம் ஆகவேண்டுமென்று தாயுமானவர் இறைவனைப் பிரார்த்திக்கின்ருர். தூய்மையும் புனிதமும் நிறைந்த தெய்வப் பண்பில் கலந்து திளைத்திருக்கும் நாள் வாழ்வாங்கு வாழ்கின்ற நாளாகும். உலக இயல்பில் ஊறி இருக்கும் மனது நம்மை உலகோடு பிணைப்பதற்கே முயல்கிறது. தெய்வப் பண்பை மனதில் வளர்த்தால் அது தெய்வத்தோடு நம்மைப் பிணைத்து வைக்கும். உயர்வு தாழ்வு இல்லாது ஞானசொருபமாக விளங்கும் இறைவனேடு கலந்து தெய்வப்பண்பைப் பெறுகின்ற நாள் எந்நாளோ என்று தாயுமானவர் இறைவனிடம் இக்கண்ணியில் வினவுகின்ருர்.

பெரியோர்கள் யாவரும் கீழுள்ளவர்களை மேல் நிலைக்கு எடுத்துச் செல்வதற்கே முயல்கின்றனர். பரத்தினிடத்து மனதைச் செலுத்துபவர்கள் தங்களிடத்திலுள்ள கீழ்மையை அகற்றி மேன்மையை அடைவதோடு தங்களைச் சார்கின்றவர்களையும் மேல் நிலைக்கு எடுத்துச் செல்கின்றனர். கீழ்மையை மனதில் வாங்காதிருக்குமளவு நம்மை நாம் உயர்த்திக்கொள்ளமுடியும்.

விவேகானந்தர் கடிதத்தில் கூறியருளிய கருத்து-22

சசிமகராஜுக்குச் சுவாமி விவேகானந்தர் அமெரிக்காவிலிருந்து எழுதிய கடிதத்தின் கருத்துக்களின் தொடர்ச்சி:

அக்ஷயன் எழுதிய நூலைப் படித்தேன். அவனுக்கு என் இதயம் கலந்த அன்பைக் கூறவும். அவன் எழுதுகோலில் ஸ்ரீ ராமகிருஷ்ணரே எழுந்தருளியிருப்பதைக் காண்கிறேன். அக்ஷயனுக்கு எனது ஆசி. அவன் எழுதிய நூல்களில் உள்ள விஷயங்கள் யாவும் பொருத்தமானவையே. நான் அந்நூலைப் படித்தபொழுது எனக்கு உண்டான மகிழ்ச்சியைச் சொல்லால் விளக்கமுடியாது. அந்தப் புத்தகம் மக்களிடையே பரவுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அனைவரும் செய்யுங்கள். கிராமம் கிராமமாகச் சென்று அக்ஷயனைப் பிரசாரம் செய்யச் சொல்லுங்கள். இராமகிருஷ்ணருடைய உபதேசங்களைக் கிராமம் தோறும் பரவச் செய்யுங்கள். அதைவிட அரும்பணி வேறு என்ன உள்ளது? அக்ஷயனுடைய புஸ்தகமும், அக்ஷயனும் பொதுமக்களை உணர்ச்சி பெற எழச் செய்வார்களாக. அக்ஷயனுடைய நாவில் இறைவன் அமர்ந்திருப்பாராக. அக்ஷயனுடைய விசுவாசமும் பக்தியும் பலன் கொடுப்பதாகுக.

கீழ்வரும் கருத்துக்களையும் அடுத்த பதிப்பில் அக்ஷயனுடைய நூலில் சேர்ப்பதற்கு ஏற்பாடு செய்யுங்கள்.

1. வேதங்களும், வேதாந்தங்களும், அவதார புருஷர்களும் சென்ற காலங்களில் எல்லாம் என்ன கூறினர்களோ அவையாவற்றையும் ஸ்ரீ ராமகிருஷ்ணர் தம் வாழ்வில் வாழ்ந்து காட்டி விட்டார்.

2. ஸ்ரீராமகிருஷ்ணருடைய வாழ்க்கையை அறிந்துகொள்ளாது வேத வேதாந்தங்களைத் தெளிவாக அறிந்துகொள்ளமுடியாது. வேத வேதாந்தங்களுக்கு அவருடைய வாழ்க்கையே விளக்கமாக அமைந்து உள்ளது.

3. ஸ்ரீராமகிருஷ்ணர் என்று பிறந்தாரோ அன்றே சத்திய யுகம் தோன்றிவிட்டது. எல்லாரும் இறைவனுடைய அன்புக்குப் பாத்திரமாகிவிட்டார்கள். ஆண், பெண் என்ற வேற்றுமை, பணக்காரன், ஏழை என்ற வேற்றுமை, பிராம்மணன், சண்டாளன் என்ற வேற்றுமை ஆகிய அனைத்து வேற்றுமைகளையும் அடியோடு அவருடைய வாழ்க்கை அழித்துத் தள்ளிவிட்டது. இந்தச் சத்திய யுகத்தில் ராமகிருஷ்ணருடைய பேரன்பு என்னும் அலை அனைவரையும் ஒன்றுபடுத்தியிருக்கிறது. இவ் விஷயங்களை விளக்கி அக்ஷயனை அவனுடைய நடையில் எழுதச் சொல்லுங்கள்.

ஸ்ரீ ராமகிருஷ்ணரை யார் வழிபடுகின்றார்களோ அவர் தம்மை மேலானவராக மாற்றி அமைத்துக்கொள்வார். அவருடைய வாழ்க்கையில் தாய்மைமுதன்மை வகிக்கிறது. பெண்பாலர்களையும், பாமர மக்களையும் உய்விக்க வந்த மகான் என்று அவரைச் சொல்லலாம். ஒவ்வொருவீட்டிலும் அவருடைய வழிபாட்டை அக்ஷயன் புகுத்தட்டும். பிராமணன், சண்டாளன், ஆண், பெண் ஆகிய அனைவருக்கும் அவரை வழிபடுவதற்கு உரிமையுண்டு. அவரைப் பக்தியுடன் வழிபடுபவர்கள் ஆசீர்வதிக்கப்படுகிறார்கள்.

இந்தியாவில் இரண்டு பெரிய கேடுகள் இருக்கின்றன. பெண்பாலர்களை இழிவுபடுத்திப் பேசுவதும், ஜாதிக் கொடுமை என்னும் கட்டுப்பாட்டின் மூலம் பாமரமக்களை ஒடுக்குவதும்அவ்விரண்டுகேடுகளாகும்.ராமகிருஷ்ணருடைய வாழ்வு அவ்விரண்டு கேடுகளையும் அழித்துத் தள்ளியுள்ளது. அவ்விரண்டு கேடுகளையும் சமுதாயத்திலிருந்து அகற்றுவதற்கு இராமகிருஷ்ணர் காட்டித்தந்த வழி முறையை மக்களுக்குப் புரியும்படி விளக்கி எழுதவேண்டும். இச்சீரியசெயலில்அக்ஷயன் ஈடுபடட்டும். எதைப்பற்றியும் அவன் கவலைப்பட வேண்டியதில்லை. இறைவன் அவன் பக்கம் இருப்பார். பரமஹம்சர் அவனுடன் இருக்கிறார். சாரதா தேவியார் அவனுடன் இருக்கிறார். நாம் அவனுடன் இருக்கிறோம். எனவே அவன் ஊக்கத்துடனும் உற்சாகத்துடனும் இறைபணியில் ஈடுபடுவானாக. அகங்காரமில்லாது தூய மனதுடன் செய்யும் திருப்பணி இறைவன் பணியாகும். அப்பணி யாண்டும் வெற்றியையே தரும். அப்பணி யாவர்க்கும் நலத்தையே தரும்.

ஸத் ஸம்பாஷணை

கேள்வி: (481) கடவுள் எல்லாச் சக்தியும் பொருந்தியவர். அவருக்கு வாகனம் எதற்காக?

கடவுள் சர்வவியாபி என்றும், சர்வக்ஞன் என்றும், சர்வசக்திமான் என்றும் அழைக்கப் படுகின்றார். எங்கும் நிறைந்துள்ள கடவுளுக் குக் கோயில் கட்டி அதில் எழுந்தருளச் செய்து வழிபடுகின்றோம். எல்லாவற்றையும் அறிந்துள்ள அவரிடம் நம் குறைகளை எடுத் துச் சொல்கின்றோம். நம் குறைகளை எடுத் துச் சொல்லித்தான் அவர் அறியவேண்டியது அவசியமில்லை. சர்வ வல்லமை படைத்த கட வுளுக்கு ஆயுதங்களைத் தந்திருக்கின்றோம். அவருடைய மஹிமைகளை அறிந்துகொள்வதற் குப் புறத்தே ஒரு வடிவம் வைத்து அதன் மூலம் அறிய நாம் முயல்கின்றோம். அங்ஙனம் இறைவனுக்கு வாகனங்கள் அமைத்து அவ் வாகனங்கள் மூலமாக இறைவனுடைய சில மஹிமைகளை அறிந்துகொள்ள முயல்கின்றோம்.

விநாயகப் பெருமானுக்கு மூஞ்சுறு வாகன மாக அமைந்திருக்கிறது. மூஞ்சுறு வடிவத்தில் சிறியதாயினும் பூமியைத் துளைத்துச் செல்லும் சக்தி வாய்ந்தது. எதனையும் ஊடுருவி ஆராய்ந்து பார்ப்பது அறிவின் செயலாகும். விநாயகப்பெருமான் அறிவுத் தெய்வமாகின் றார். எனவே, அவருக்கு மூஞ்சுறு வாகனமாக அமைந்திருக்கிறது. சிவபெருமானுடைய தலை மைத் தகைமைக்கும், பொறுப்புக்கும், அமைதிக் கும் ஏற்ப அவருக்கு ரிஷபம் வாகனமாக அமைந்திருக்கிறது. அம்பிகையின் பராக்கிர மத்துக்கு ஏற்ப அவளுக்குச் சிங்கம் வாகனமாக அமைந்திருக்கின்றது. இங்ஙனம் ஒவ்வொரு தெய்வத்துக்கும் அமைந்திருக்கின்ற வாகனம் இறைவன் உயிர்களுக்கு அந்தர்யாமியாயிருந்து அவைகளை ஆட்டுவிக்கின்றான் என்ற உட் கருத்தை விளக்குகின்றது. பாம்பு, பறவை, மிருகம், சிறிய உயிர், பெரிய உயிர் ஆகியவை களை இறைவனுக்கு வாகனமாக அமைத்திருப் பதன்மூலம் உயிர்கள் எல்லாம் அவருக்கு வாகனம் என்ற கருத்து விளக்கப்படுகிறது. இறைவன்தான் உயிர்களை எல்லாம் இயக்கி வருகின்றான். வாகனங்கள் உயிர் களுக்குச் சின்னமாகின்றன. அவற்றை இயக்கு கின்ற தெய்வம் பரமாத்மாவை விளக்குகின்றார். பரமாத்மா உயிர்களை இயக்கி வருகின்றார் என்ற உண்மை தெய்வத்துக்கு வாகனம் அமைப்பதன்மூலம் விளக்கப்படுகிறது.

கேள்வி: (482) மனிதன் எப்பொழுது தெய்வ மாகலாம்?

சிற்றுயிர்கள் என்றும் பேருயிர்கள் என்றும் சொல்லுமிடத்து மனிதனுக்குக் கீழுள்ள உயிர்கள் யாவும் சிற்றுயிர்களாகின்றன. மனி தன் பேருயிர் ஆகின்றான். இனி, மனிதன் தெய்வ நிலையை எட்டியாக வேண்டும்.

தெய்வத்துக்கும் மனிதனுக்குமுள்ள வேறு பாட்டைச் சுவாமி விவேகானந்தர் விளக்கி இருக்கின்றார். தெய்வத்தினிடத்தில் குறை வந்தால் அவர் மனிதனாகின்றார். அதாவது குறைநிலையிலுள்ள தெய்வம் மனிதன். மனித னிடத்து நிறைநிலைவந்தால் அவன் தெய்வ மாகின்றான். அதாவது நிறைமனிதன் தெய்வ மாகின்றான்.

மனிதனிடத்துள்ள குறைதான் ஆசையாக வடிவெடுக்கிறது. ஆசை பூர்த்தியானால் அவன் நிராசை நிலைக்குச் செல்கின்றான். ஆசையுள்ள வனை மனிதன் என்றும், நிராசையில் இருக்கும் மனிதனைத் தெய்வம் என்றும் கூறலாம். ஆசை தான் விருப்பு வெறுப்பாக வடிவெடுக்கின்றது. ஒரு பொருளை வேண்டுமென்று விரும்புவதும் வேண்டாமென்று வெறுப்பதும் மனிதனிடத் துள்ள குறையாகும். இன்பம் தரும் விஷயங் களை வேண்டுமென்று விரும்புதலும், துன்பம் தரும் விஷயங்களை வேண்டாமென்று விலக்கு வதும் மனிதனுடைய இயல்பாகும். வேண்டு தல், வேண்டாமை இலாதவன் இறைவன்.

மனிதன் தன்னிடத்துள்ள ஆசைகளை எல் லாம் பூர்த்தி செய்து நிராசை நிலையை அடை வானானால் அவன் தெய்வமாகலாம். மனிதன் இன்பத்துக்கு உரியது தன்னிடத்தில் இல்லை என்றும், இன்பத்துக்கு உரிய பொருள் வெளி யுலகில் தனக்குப் புறம்பே அமைந்திருக்கிற தென்றும் எண்ணுகின்ற வரையில் அவன் ஆசையைப் பூர்த்திபண்ண முடியாது. தன் னிடத்தில் பேரானந்தப் பெருநிலை இருக்கிற தென்று அறிந்து மனதை உள்முகமாகத்

திருப்பும்பொழுது தன்னிடத்தே இன்பத்தைக் காண்கின்றான். அப்பொழுது விஷயங்களில் அவனுக்கு மனம் செல்வதில்லை. "கற்கண்டு கட்டியைச் சுவைத்தவன் கருப்பட்டியைச் சுவைக்க விரும்புவானா?" என்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் கேட்கின்றார். தன்னிடத்திலுள்ள ஆன்மிகச் சுகத்தை அறிந்தவன் விஷய சுகத்தில் மனதைச் செலுத்தமாட்டான். மனதை உள்முகமாகத் திருப்பி உள்ளே இருக்கின்ற பிரமானந்தத்தை அனுபவிக்கின்றபொழுதுதான் மனிதன் தெய்வமாகின்றான்.

கேள்வி: (483) மனிதனைப் படைத்தவர் கடவுள் எனில் கடவுளைப் படைத்தவர் யார்?

உள்ள பொருள் ஒன்றுதான். அதைக் கடவுள் என்று அழைக்கின்றோம். உயிர் வகைகளாக வடிவெடுத்திருப்பவரும் கடவுள்தாம். அவர் பல வடிவங்களாகத் தம்மைத் தோற்றுவித்துக்கொள்வது அவருடைய விளையாட்டு. வடிவங்கள் எல்லாம் அழிந்தான பிறகு அவர் தாம் எஞ்சி இருக்கின்றார். களிமண்ணைக் கொண்டு பல வடிவங்களை உடைய பாத்திரங்களைச் செய்கின்றோம். பாத்திரங்களின் வடிவங்களை அழித்துவிட்டால் களிமண்தான் எஞ்சி இருக்கும்.

கடவுள் எடுத்துக் கொண்டுள்ள வடிவங்களைச் சிருஷ்டி என்கின்றோம். மனிதன் தன் மனதைப் பண்படுத்திக்கொண்டே வந்தால் மனம் உயர்நிலைக்குச் செல்கின்றது. பண்பட்ட மனது உண்மைப் பொருளை உணர்கிறது. தங்கள் உள்ளத்துக்கு விளங்கிய உண்மைகளைச் சொல்லால் விளக்கும்பொழுது அந்தச் சொற்களுக்குத்தான் மந்திரங்கள் என்று பெயர். அம்மந்திரங்களுக்கு ஏற்ற வடிவங்கள் தெய்வவடிவங்களாகின்றன. பண்படாத மனது உலகைக் காண்கின்றது. பண்பட்ட தூய மனது கடவுளைக் காண்கின்றது. உலகப்பற்றுள்ள மனது உலகைக் காண்கிறது. மனதற்ற பரிசுத்த நிலையில் நாமே தெய்வமாகி விடுகின்றோம். நம்மைத் தெய்வத்துக்குப் புறம்பாக நினைக்கும்பொழுது நம் மனத்தின் மூலம் காண்கின்ற காட்சிகள் அனைத்தும் மனதின் சிருஷ்டியே ஆகும். மனதின் கீழான நிலையில் உலகக்காட்சியும், மனதின் தூய, உயர்ந்தநிலையில் கடவுள் காட்சியும் ஏற்படுகின்றன. கடவுள் தோன்றுவதுமில்லை, அழிவதுமில்லை. அவர் இருந்தபடியாண்டும் இருந்து வருகிறார்.

விவேகானந்தர் ஸ்ரீ ராமகிருஷ்ணரை "நீங்கள் கடவுளைக் கண்டதுண்டா?" என்ற கேள்வியைக் கேட்டார். ஸ்ரீ ராமகிருஷ்ணர் அதற்குத் தந்த பதிலாவது: "நான் கடவுளைக் காண்கின்றேன்; அவரோடு பேசுகின்றேன். நீ உன் ஊனக்கண் கொண்டு என்னைத் தெளிவாகக் காண்கின்றாய். அதில் உனக்கு ஐயம் இல்லை. நான் அகக்கண் கொண்டு, நீ ஊனக் கண்ணால் என்னைக் காண்பதைக் காட்டிலும் தெளிந்த நிலையில் கடவுளைக் காண்கிறேன். உனக்கும் நான்காட்டமுடியும்." இங்ஙனம் கூறி அவருடைய நெஞ்சைத் தொட்டார். விவேகானந்தருடைய உள்ளம் அதீதநிலைக்குச் சென்றது. அப்பொழுது அவர் கடவுள் காட்சி எத்தகையது என்பதை உணர்ந்தார். எனவே கடவுள்தாம் யாவுமாக இருக்கின்றார்.

கேள்வி: (484) ஒருவன் எப்போது ஞானி யாவான்?

இக்கேள்வியானது வெளிச்சம் எப்பொழுது உண்டாகும் என்று கேட்பதை ஒத்து இருக்கிறது. இருள் நீங்கினால் வெளிச்சம் வரும். அதுபோன்று அஞ்ஞானம் நீங்கினால் ஞானம் வரும். அஞ்ஞானி சரீரத்தைத் தன்மயமாக உணர்கின்றான். ஞானியோ ஆத்ம சொரூபத்தைத் தன்மயமாக உணர்கின்றான். சரீர உணர்வைக் கடந்து சொரூபத்தை உணரும் பொழுது ஒருவன் ஞானியாகின்றான்.

சத்சித் ஆனந்தம்தான் சொரூபம் ஆகும். சொரூபத்தைப்பற்றி நினைக்கும்பொழுது மனது சதா ஆனந்தத்தில் இருக்கிறது. ஆகையால்தான் 'ஞானிக்கு இல்லை இன்பமும் துன்பமும்' என்ற கோட்பாடு வந்தது. சரீரத்தைப்பற்றி நினைக்கும்பொழுது மனதில் காம சம்பந்தமான உணர்வு ஏற்படுகிறது. அவ்வுணர்வு சொரூபத்தை மறைத்து மனதைக் கீழ்நிலைக்கு எடுத்துச் செல்கிறது. சிற்றின்பத்திலிருந்து மனதை விலக்கி எடுத்துச் சொரூபத்தில் வைப்பதே ஞானம் பெறுவதற்கு உபாயமாகும். பிரம்மச்சரியம் என்னும் மகா விரதத்தைக் கடைப்பிடிப்பவர் ஞான நிலைக்குப் போகின்றார்.

ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம்

197. प्रजापतिः ப்ரஜாபதி: பிரஜைகளுக் குத் தலைவர்.

உலகைத் தோற்றுவித்தவர் பிரம்மா ஆகின்றார். பிரம்மாவைத் தோற்றுவித்தவர் விஷ்ணு ஆகின்றார். எனவே விஷ்ணு தோன்றிய அனைத்துக்கும் மூலப்பொருள் ஆகின்றார். உயிர்களைக் காப்பதில் அவர் கண்ணுங் கருத்துமாக இருக்கின்றார். தலைவனாவதற் குத் தகைமை வேண்டும். அண்டமனைத்துக் கும் தந்தையாகவிருப்பதோடு அண்டமனைத் துக்கும் தலைவனாக இருப்பவரும் விஷ்ணு வாகின்றார். சரியான தலைவன் அமைந்துவிட் டால் அத்தலைவனுக்குக் கீழ் இருப்பவர்கள் கவலையற்று இருப்பார்கள். எல்லாம் ஒழுங் காகவும் நடைபெறும். அண்டமுழுவதும் ஓர் ஒழுங்குப்பாட்டுக்கு உட்பட்டு இருக்கிறதென் றால் அது விஷ்ணுவினுடைய செயலாகும். ''அதர்மத்தை அழித்துத் தர்மத்தைக் காப் பதற்கு யுகந்தோறும் பிறப்பெடுப்பேன்''என்று கீதையில் கிருஷ்ணன் பகர்ந்துள்ளார். தர்மத் தைக்காப்பதும் உயிர்களைத் தர்மவழியில்நடாத் துவதும் விஷ்ணுவினுடையசெயலாகும்.பிரஜை களுக்குத் தலைவனாகவிருந்து பிரஜைகளைத் தர்ம வழியில் நடாத்திவருவதால் மஹாவிஷ்ணு பிரஜாபதி என்று அழைக்கப்படுகின்றார்.

198. अमृत्युः அம்ருத்யு:—அழிவில்லாதவர்.

மரணத்தைக் கண்டு எல்லா உயிர்களும் அஞ்சுகின்றன. உலகப்பற்று உள்ளவர்களுக்கு மரணம் அச்சத்தைத் தருகின்றது. உரு எடுத்த அனைத்தும் உருக்குலைந்து போகும் என்பதை உலகப்பற்று உள்ளவர்கள் அறிவதில்லை. வஸ்துவுக்கு என்றைக்கும் அழிவில்லை. வஸ்து எடுத்த வடிவம் சிதைந்து போகிறது. வஸ்து எடுத்துள்ள வடிவத்துக்கு வரும் அழிவை வஸ்துவுக்கே வந்த அழிவாக எண்ணி அறிவிலி கள் அஞ்சுகின்றனர். தேகாத்ம புத்தி தேகத் தோடு நம்மைப் பிணைத்து வைக்கிறது. தேகத் தோடு நம்மைப் பிணைத்து வைத்துக்கொண்டு திண்டாடுகின்ற நாம் தேகத்துக்கு வரும் அழிவை நமக்கு வந்ததாக உணர்கின்றோம். தேகாத்மபுத்தியை வெல்லுகின்றவளவு மர ணத்தை வெல்லுகின்றோம். தேகத்தை நம் மயமாக உணர்கின்ற உணர்வு சுலபத்தில் அழி வதில்லை. அந்த உணர்வு அழியும்வரையில் தேகத்துக்கு வரும் அழிவை நமக்கே வந்ததாக உணர்ந்துகொண்டுதானிருப்போம்.

ஆத்ம போதம் தலையெடுக்கும்பொழுது தேகத்தைவிட்டு விலகி ஆத்மசொரூபம் நாம் என்பதை உணர்கின்றோம். ஆத்ம சொரு பத்தை உணர்ந்தான பிறகு சரீரம் இருப் பதைக் குறித்தோ இல்லாது போவதைக் குறித்தோ நாம் கவலைப்படுவதில்லை. மஹா விஷ்ணு அழியாத ஆத்ம சொரூபமாகின்றார். அவர் யாண்டும் இருந்தபடி இருக்கின்றார். அவரை மனதில் வைத்து வழிபடுபவர்களுக்கு அழியாத்தன்மை எத்தகையது என்பதை அவர் உணர்த்துகிறார். அழியாப் பெருநிலை யில் இருக்கும் மஹாவிஷ்ணுவை வழிபடுதல் வேண்டும். சொரூபத்தை உணர்ந்தவர்கள் 'யானேதும் பிறப்பு அஞ்சேன் இறப்பு அதற்கு என் கடவேன்' என்கின்றனர். பிறப்பைப் பற்றியோ இறப்பைப்பற்றியோ ஞானிகள் அஞ்சுவதில்லை. விண்ணுலகிலும் மண்ணுல கிலும் பதவிகள் எதையும் அவர்கள் விரும்புவ தில்லை. பெருமானின் திருவடிகள் ஒன்றையே அவர்கள் யாண்டும் வேண்டி நிற்கின்றனர்.

உடல் வாழ்வை விரும்புகிற உயிர்கள் எல் லாம் மரணத்துக்கு அஞ்சுகின்றன. நிலையற்ற வைகளை ஒதுக்கி நிலைபேறு உடையதை நாடு வது அறிவுடையோர் செயல். அவர்கள் கமலக் கண்ணனை வழுத்திச் சொரூபத்தில் யாண்டும் நிலைபெற்று இருக்கின்றனர். மரணத்துக்கும் அவர்களுக்கும் வெகுதூரம். மரணமிலாப் பெரு வாழ்வு ஆகிய ஆன்மீக வாழ்வை நமக்கு மஹா விஷ்ணு தருகிறார். ஆகையால் அவரை நாம் வழுத்துதல் வேண்டும். மஹாவிஷ்ணு இருக் கும் அழிவற்ற நிலையை நாமும் அடைவதற்கு அவரை வழுத்துவோமாக.

199. सर्वदृक् ஸர்வத்ருக் — அனைத்தையும் பார்ப்பவர்.

உலக மக்களின் கண்ணுக்குப் படாது நாம் செயல்புரிந்துவிடலாம். ஆனால் தெய்வத்துக் குத் தெரியாது நாம் எச்செயலையும் செய்து விடமுடியாது. புறத்தே நிகழ்கின்ற செயல்

களையும் நம் அகத்தே நிகழ்கின்றசெயல்களையும் அவர் இடைவிடாது கண்காணித்து வருகின்ருர். நம் மனதில் நிகழ்கின்ற செயலைப் பிறர் யாரும் கண்டுபிடித்துவிட முடியாது. நம் மனதின் ஆழ்பகுதியில் நிகழ்கின்ற செயல் நமக்கே தெரிவதில்லை. ஆனல் இறைவன் நம்முடைய அனைத்துச் செயல்களையும் கண்காணித்து வருகின்ருர்.

பக்தனைப் போன்று பாசாங்கு பண்ணுகின்றவன் யார்? உண்மையான பக்தன் யார்? என்பதை இறைவன் நன்கு அறிகின்ருர். வெளி ஆடம்பரத்தினல் இறைவனை மகிழ்விக்க முடியாது. உண்மையான தூய அன்பின்மூலமே அவரை மகிழ்விக்கமுடியும். நேர்மையான சிந்தனை, நேர்மையான சொல், நேர்மையான செயல் இவற்றை இறைவன் பாராட்டுகின்ருர். சிந்தனை, சொல், செயல் ஆகிய மூன்றிலும் நேர்மையைக் கடைப்பிடித்து வருகின்ருேமா என்பதை அவர் யாண்டும் கண்காணித்து வருகிருர். அவருக்குத் தெரியாது நாம் எந்தச் செயலையும் செய்துவிடமுடியாது. அதை நாம் நன்கு உணர்ந்து ஆடம்பர வாழ்க்கையையும், படாடோப வாழ்க்கையையும், பாசாங்கு வாழ்க்கையையும் புறக்கணித்துவிட்டு இறைவனுக்கு விருப்பமான நேர்மையான வாழ்க்கையைக் கடைப்பிடிப்போமானல் அவர் அருளுக்கு நாம் பாத்திரமாகின்ருேம். நம்மை யாண்டும் கண்காணித்து வருகின்ற பரமபுருஷன் ஒருவன் உள்ளான் என்று கேட்டினின்றும் கீழ்மையினின்றும் விலகி இருப்போமாக. நம்மை யாண்டும் கண்காணித்து வருகின்ற அந்தப் பரமபுருஷனை வழிபடுவோமாக.

200. सिंहः சிம்ஹ:— சிம்மவடிவினன்.

வீரமும் கம்பீரமும் தேவை. கேடு மிக வலிவுடையது. கேட்டை ஒழிப்பதற்கு வீரியம் தேவைப்படுகிறது. இரண்யகசிபுவை ஒழிப்பதற்கு மஹாவிஷ்ணு நரசிம்ம வடிவெடுத்தார். அரக்க சுபாவமும் மிருக சுபாவமும் ஒன்று. மிருகங்கள் அனைத்துக்கும் அரசனக இருப்பது சிம்மம் ஆகின்றது. சிம்மம் வீரியத்திலும் பராக்கிரமத்திலும் உயர்ந்தது. எல்லா மிருகங்களையும் அது அடக்கி ஆளும் சக்தி வாய்ந்தது. நரவடிவத்தில் மிருக சுபாவத்திலிருந்த இரண்யகசிபுவை அழிப்பதற்கு நரசிம்மமாக மஹாவிஷ்ணு அவதாரம் எடுத்தார். நரசிம்ம வடிவத்தை உபாசித்து நாமும் வீரியம் படைத்தவர்களாவோமாக. அப்பொழுதுதான் புறத்திலுள்ள கேட்டையும், அகத்திலுள்ள அரக்க சுபாவத்தையும் நாம் அழிக்க முடியும்.

கேட்டை ஒழிப்பதற்குப் பலஹீனம் பயன்படாது. பலஹீனமுடையவர்களைக் கெட்டவர்கள் தாக்கிக்கொண்டே இருப்பார்கள். பலஹீனத்தால் ஆத்ம சொருபத்தை அறிய முடியாது. கேட்டைத் தகர்த்தால் ஒழிய சொருப நிலைக்குப் போக முடியாது. கேட்டை ஒழிப்பதற்கேற்ற வல்லமை படைத்தவர்களாக நாம் இருக்கவேண்டுமென்பதை நரசிம்ம அவதாரம் எடுத்து மஹாவிஷ்ணு நமக்குப் புகட்டுகின்ருர். பக்தன் ஒருவன் நல்லவனக இருக்க வேண்டும். அதே சமயத்தில் அவன் வல்லவனகவும் இருக்கவேண்டும். நல்லவனகவும் வல்லவனகவும் இருப்பவனுக்கு நரசிம்ம அவதாரத்தின் தத்துவம் விளங்கும். நல்லவனகவும் வல்லவனகவுமிருப்பவனே 'சிம்ஹ' என்னும் திருமால் நாமத்தின் உட்பொருளை அறிபவனவான்.

201. सन्धाता சந்தாதா — கர்ம பலனைக் கூட்டுவிப்பவர்.

அவரவர்கள் செய்த கர்மத்தை அவரவர்கள் தாம் அனுபவித்தாக வேண்டும். கர்மம் செய்தவன் அதன் பலனை அனுபவித்தாக வேண்டும் என்பது கர்மத்தின் நியதி. குழந்தை ஒன்று நெருப்பில் கை வைத்து ஒரு தடவை சுடு வாங்கிவிட்டால் பிறகு நெருப்பில் அது கைவைக்காது. தீயில் கை வைத்ததன் பலனகத் தீயின் தன்மையை அது அறிந்து கொண்டது. ஈசன் நம்மைக் கர்மபலனில் சேர்த்து வைப்பதன் மூலமாகக் கர்மத்தினின்றும் நம்மை விலக்கி வைக்கின்ருர். கர்மபலனில் பற்று வைப்பதுதான் நம்முடைய இன்ப துன்பத்துக்குக் காரணம். கர்ம பலனில் பற்று வைப்பதுதான் உலகத்தில் கட்டுண்டு இருப்பதற்குக் காரணம் என்பதை நாம் அறிகின்ருேம். ஈசன் நம்மைக் கர்ம பலனில் இணைத்து வைப்பதனல்தான் இப்பாடத்தை நாம் அறிகின்ருேம். அதன் பிறகு கர்மபலனில் பற்றுவைக்காது இருந்து கர்மா அதீதத்துக்குப் போகின்ருேம்.

பத்ராசல ராமதாசர் சரிதம்

(328 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அரசனுடைய மந்திரிகள் கோபன்ன ஒரு மகாபுருஷரும் சிறந்த பக்தரும் ஆவார் என்பதை அறிந்திருந்தார்கள். அவர் தங்களைக் குறித்துப் பாடினால் தங்களுக்கு நலன் வந்து வாய்க்கும் என்று நினைத்துக் கோபன்னவைப் பார்த்துக் கேட்டதாவது: " தியாகியே! சென்றதைக் குறித்து நினைத்துச் சஞ்சலப்பட வேண்டாம். எங்கள் குலத்தைச் சிலாகித்து உன் திருவாயால் பாடல் ஒன்று பாடும். நாங்கள் உன் விஷயத்தில் தலையிட்டு அரசனிடம் வேண்டியதைக் கூறி உனக்கு வந்த ஆபத்தினின்றும் உன்னைக் காப்பாற்றுகின்றோம்.'' அதற்குக் கோபன்ன கூறியதாவது: "உங்கள் குலம் ஞானிகளாலும், தியாகிகளாலும், யோகிகளாலும், வேத வல்லுநர்களாலும் ஏற்கனவே மகிமை அடைந்திருக்கிறது. உங்கள் முன்னோரின் புகழ் உங்கள் குலத்தைப் பிரகாசப்படுத்திக்கொண்டிருக்கிறது. ஸ்ரீ ராமப் பிரபுவைப் பாடும் நாவால் மனிதனைப் பாடலாகாது என்பது என் கொள்கை.'' இதைக் கேட்டதும் மந்திரிகள் கோபித்துக் 'கோபன்னவை ராஜ சபைக்கு அழைத்து வாருங்கள்' என்று உத்தரவு இட்டுச் சென்றனர். கோபன்ன தானீஷாவிடம் அழைத்துச் செல்லப்பட்டார்.

அரசன்: ''கோபன்ன, நீ உயர் குடியில் தோன்றியவனாக இருக்கின்றாய். சாஸ்திரங்களைச் செம்மையாகப் படித்திருக்கின்றாய். தெய்வபக்தி உடையவனாகவுமிருக்கின்றாய். செய்யத்தக்கது எது, செய்யத்தகாதது எது என்பதையும் அறிந்துள்ளாய். நீ உண்மையானவன் என்று நான் எண்ணி இருந்தேன். என்னை நீ ஏமாற்றி விட்டாய். உன்னுடைய ராஜ விசுவாசம் என்ன ஆயிற்று? எனக்குச் செலுத்த வேண்டிய கிஸ்திப் பணம் எங்கே?''

கோபன்ன: "வேந்தே, பத்ராசல ராமபிரானின் திருக்கோயில் பாழடைந்திருப்பதைக் கண்டதும் அதைத் திருத்தி அமைக்க வேண்டுமென்ற எண்ணம் எழுந்தது. அதைத் திருத்தி அமைக்க என்ன செலவாகும் என்று கணக்கிட்டுப் பார்க்கையில் ஆறு லக்ஷம் வராகன் தேவைப்படும் என்பது தெரிய வந்தது. பொக்கிஷத்திலிருந்த பொன்னைக் கணக்குப் பார்த்ததில் ஆறு லக்ஷம் வராகன் இருந்தது. தெய்வத்தின் சங்கல்பம் நம்முடைய எண்ணமாகத் தோன்றியிருக்கிறது என்று அறிந்து அக்கோயில் திருப்பணியில் ஈடுபட்டேன். உமக்கும் அது திருப்தி அளிக்கும் என்று எண்ணினேன். உமது அனுமதி பெறுது அச்செயலில் ஈடுபட்டது குற்றமாகும். அக்குற்றத்தைத் தாங்கள் மன்னிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.''

அரசன்: ''என் அனுமதியின்றி உன் இஷ்டப்படி கிஸ்திப் பணத்தைக் கையாண்டது துரோகச் செயலாகும். மேலும் நீ சர்க்காருக்குக் கடன்காரனாகின்றாய். இதற்கு நீ என்ன சமாதானம் கூறப்போகின்றாய்?''

கோபன்ன: " அரசே, குடிகளினுடைய நலனே தங்களுடைய நலனாகும். பொது நலனுக்காகத்தான் அப்பொருளைச் செலவழித்தேன். சூது, கள், விபசாரம் இவற்றிற்காக யார் செலவழித்தாலும் அவர் குற்றவாளி ஆகின்றார். நானோ அத்தகைய செலவு எதுவும் செய்யவில்லை. குடிகளுக்காகத் தாங்கள் செய்யவேண்டிய காரியத்தை உங்களுடைய பிரதிநிதியாக நான் செய்தேன். குடிகளின் பணத்தைக் கொண்டு குடிகளுக்கு நன்மை செய்துள்ளேன். எனவே தாங்கள் இச் செயலை ஆமோதிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.''

அரசன்: " என் முன் சிறிதும் பயமின்றி நியாயம் பேசுகின்றாய். நீ சம்பாதித்த பணத்தை உன் விருப்பப்படி நீ செலவு செய்யலாம். அதை யாரும் கேட்கப்போவதில்லை. அரசாங்கத்துக்கு உரிய பணத்தை நீ எப்படி உன் இஷ்டம்போல் செலவழிக்கலாம்? நீ அரசாங்கத்துக்குச் சேரவேண்டிய ஆறு லக்ஷம்வராகனையும் கட்டிவிடவேண்டும்.''

கோபன்ன: "அரசே, நான் சம்பாதிக்கும் பொருளும், தங்களுக்கு உரியது எனப்படுவதும் எல்லாம் பகவானுக்கு உரியவை. அவனுக்கு உரியதை அவனுக்காகச் செலவழித்தேன். எனவே தாங்கள் என் செயலை முற்றிலும் ஆமோதிக்க வேண்டும்.''

அரசன்: "சர்க்கார் அனுமதியின்றிச் சர்க்கார் பணத்தை நீ செலவழித்திருக்கக்கூடாது. எனக்குக் கோபத்தை உண்டாக்காதே. சர்க்காருக்குச் சேரவேண்டிய ஆறுலக்ஷம்பொன்னையும் நீ கட்டித்தான் ஆக வேண்டும்."

கோபன்னு: "அரசே, பணம் உங்களுடையது என்று நீங்கள் நினைத்தால் அதை நான் நல்ல காரியத்துக்கே செலவழித்திருக்கின்றேன். பத்ராசல ராமபிரான் சாமானியமான மூர்த்தி அன்று. பகவான் அங்கு வந்து பள்ளி கொண்டு உள்ளார். பத்ராசலக் கோயிலின் பக்கத்தில் கோதாவரி என்னும் புண்ணிய நதி ஓடுவது அக்கோயிலுக்கு மேலும் சிறப்பைத் தந்து கொண்டு இருக்கிறது. கோயிலைத் திருத்தி அமைத்துள்ள நிலையை அங்கு வரும் பக்தர்கள் கண்டு பரமானந்தம் அடைவார்கள். இப்புண்ணிய காரியத்துக்குப் பொருள் கொடுத்த புண்ணியவான் யாரோ என்று புகழ்வார்களானல் அப்புகழ் உமக்கே உரியதாகும். ஆதலால் இன்னும் நற்காரியம் செய்வதற்கு உதவியாக இருந்து பகவான் அருளுக்குப் பாத்திரமாவீர்களாக."

கோபன்னுவின் மொழிகளைக் கேட்டு அரசன் மகிழ்வெய்தினன். ஆனல் சிறிது நேரத்துக்குப் பின் அரசன் சிந்திக்கலானன். கோபன்னு செய்தது நற்காரியம் எனினும் இவனை மன்னித்து விட்டுவிட்டால் இவனைப் பின்பற்றி மற்றவர்களும் கிஸ்திப் பணத்தைத் தம் இஷ்டம்போல் கையாண்டு விடுவார்கள். அது அரசாங்கத்துக்கு ஆபத்தாக விளைந்து விடும். இங்ஙனம் நினைத்து "ஆறுலக்ஷம் வராகனை இவன் கட்டும் வரையில் இவனைக் காவலில் வையுங்கள்" என்று அரசன் தீர்ப்பளித்தான்.

கோபன்னுவைச் சிப்பாய்கள் தெருக்கள் வழியாகச் சிறைக்கு அழைத்துச் சென்றார்கள். அப்பொழுது கோபன்னு கைகூப்பியவாறு "ராமா, நீ பட்டகஷ்டம்தான் என்னே! நீ பட்டகஷ்டத்தில் ஆயிரத்தில் ஒரு பங்குகூட நான் அனுபவிக்கவில்லை. அரச கோலத்தில் இருக்கவேண்டியவன் நீ; ஆனல் மரவுரி தரித்துப் பிச்சைக்காரர் போன்று நீயும் உன் மனைவியும், உன் தம்பியும் அயோத்தி நகரின் தெருவழியாகக் காட்டுக்குப் போனீர்கள். மழைக்கும், வெயிலுக்கும் கூடப் பாதுகாப்பு இல்லாத காட்டுக்கு நீ சென்றாய். நானோ மழைக்கும் வெயிலுக்கும் பாதுகாப்புத் தரும் சிறைக்குச் செல்கின்றேன். கல், முள் நிறைந்த வழி உனக்கு அமைந்தது. நானோ நகர் தெருவில் போய்க்கொண்டிருக்கின்றேன். உனக்கு அப்பொழுது எவ்வளவு துன்பம் உண்டாகி இருக்கும் என்பதை நினைத்து நான் இப்பொழுது துன்பப்படுகின்றேன். என்னைக் காப்பது உன்னுடைய பாரம்" என்று கூறிக் கொண்டே சென்றார்.

கோபன்னுவைத் தெருவழியாகச் சிப்பாய்கள் அழைத்துச் செல்வதைப் பார்த்தவர்கள் பலவாருகப் பேசிக்கொண்டார்கள். 'சர்க்கார் பணத்தைக் கையாள்பவருக்கு இந்தக் கதிதான் உண்டாகும்' என்றான் ஒருவன். "இவன் ஓர் உருத்திராக்ஷப் பூனை. கிஸ்திப் பணத்தை ஆலயம் கட்டுகிறேன் என்று இவனே சாப்பிட்டு விட்டான்" என்றான் மற்றொருவன்.

"அறிவிலிகளே! வாய்க்கு வந்ததை உளறுகிறீர்கள். இவர் யார் என்று நினைத்தீர்கள்? பத்ராசலராமபிரானின் பக்தராவார். பக்தரை நிந்திப்பது தேவ நிந்தனையிலும் கேடு உடையது ஆகும். நாட்டு மக்கள் உய்யும் பொருட்டு இம் மகான் அரிய காரியம் செய்துள்ளார். இதை உணராத அரசன் இவரைப் பாராட்டுதற்குப் பதிலாகக் காவலில் வைத்திருக்கின்ருன். இதனல் அரசனுக்கு என்ன கேடு சம்பவிக்கப் போகிறதோ? இதை உணர்த்துதற்கு அரசன் பக்கம் யாரும் இல்லையா? அரசன் தவறுவானகில் மந்திரிகள் அவனை நல்வழிப்படுத்தக் கடமைப்பட்டிருக்கின்றனர். அங்ஙனம் செய்ய மந்திரிகள் தவறிவிட்டார்கள்" என்று ஓர் அறிஞர் கூறி தப்பு அபிப்பிராயம் கொண்டிருந்த மக்களைத் திருத்தி அமைத்தார். பத்திராசல ராமதாசரின் மகிமையை முன்பே உணர்ந்திருந்த ஹைதராபாத் நகர மக்கள் அவரைத் தரிசிக்க அவர் சென்ற தெருக்களிலெல்லாம் கூட்டம் கூட்டமாகக் கூடிவிட்டனர். "இவ்வுத்தமரை நல்ல நிலையில் தரிசிக்கும் பாக்கியம் இல்லையே! கேடு வாய்ந்த ஹைதராபாத் நகரே! உன் அகத்தில் இந்த மகான் கைதியாக இருக்கப் போகின்றார். உன்னை அழிப்பதற்கு ஏன் இன்னும் இடி விழவில்லை? கொடிய வெள்ளம்

ஏன் உன்னை அடித்துக்கொண்டு போகலாகாது?'' என்று கூறி மக்கள் மனம் நொந்து அழுதனர்.

கோபன்ன சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு ஆங்கு ஓர் அறையில் வைக்கப்பட்டார். சிறையில் அவருக்குத்தரப்பட்ட பொருள்கள் துர்நாற்றமும், துன்பத்தைத் தருவனவாகவும் இருந்தன. அவருக்குச் சிறைக் காவலாளி உப்பு மிகுந்த உணவைக் கொடுத்து உண்ணச் செய்தான். அப்பொழுது கோபன்னவுக்கு ராமபிரான் காட்டில் பட்ட கஷ்டமே ஞாபகத்துக்கு வந்தது. தமக்கு அமைந்த அனைத்துச் சூழ்நிலையையும் ராமபிரான் திருவுளம் என்று எண்ணி அமைதியுற்றிருந்தார். சிறையைக் கோயிலாக மாற்றினர். அரசன் தந்த தண்டனை கோபன்னவின் உடலை மட்டும் கட்டுப்படுத்தியது. ஆனல் கோபன்ன பக்தியில் உயர்ந்து வந்தார்.

ஒருவாரம் கழித்து 'அரசன் கோபன்ன எந்நிலையில் இருக்கிருன்?' என்று சிறை அதிகாரிகளைக் கேட்டான். ''பிரபு, கோபன்ன சிறையில் துன்பங்கள் எல்லாவற்றையும் பொறுத்துக் கொள்கின்ருர். ராமா, ராமா என்று உச்சரித்த வண்ணம் அவர் எதையும் பொருள்படுத்தாதவராக இருக்கின்ருர்'' என்று சிறை அதிகாரிகள் கூறினர்கள். ''நீங்கள் எது வேண்டுமென்ருலும் செய்து கோபன்னவிடமிருந்துகிஸ்திப்பணத்தைவசூலியுங்கள்''என்று அரசன் உத்தரவிட்டான். ''பொது மக்கள் முன்னிலையில் முக்கோணத்தில் கட்டி முப்பத்தைந்து கசை அடிகள் கொடுங்கள்'' என்று அரசனிடம் உத்தரவுபெற்ற அதிகாரி ஆணை பிறப்பித்தான். அந்த ஆணையை ஏந்திச் சிறை அதிகாரி சிப்பாய்களோடு சென்று கோபன்ன இருந்த அறையைத் திறந்து அவரை வெளியே அழைத்து வந்தார். அவர் கையிலும் காலிலும் விலங்குகளைப் பூட்டினர்.

அவருக்கு முன்குதிரைப்படைசென்றது. குதிரைப் படைக்குப் பின் உருவிய வாளும், சூலமும்,கோடரியும்,வேலும் உடைய காலாட்படை சென்றது. அப்படைக்குப் பின் கோபன்னவின் இருமருங்கிலும் மும்மூன்று தடியர்கள் கூரிய கத்தியைத் தாங்கியவராய்ச் சென்றனர். இத்துணைப் பந்தோபஸ்தோடு கோபன்ன அழைத்துச் செல்லப்பட்டார். இவருக்கு விதிக்கப்பட்ட தண்டனையும் தெரிவிக்கப்பட்டது.

அப்பொழுது கோபன்ன கூறியதாவது: ''பக்தர்கள் சகாயா! எல்லாம் உன்னுடைய விளையாட்டு. ஓர் ஆன்மாவுக்கு இவ்வளவுபெரிய சைன்னியமா? இவ்வளவு ஆயுதங்களா? இவ்வளவு ஜாக்ரதையான பந்தோபஸ்தா? மனிதனுடைய மடமைதான் என்னே! ஆயுதமில்லாத என்னை நடத்திச் செல்வதற்கு ஒருவன் போதாதா? குறித்த இடத்திற்குத் தண்டனை ஏற்றுக்கொள்ளச் செல் என்று கூறினல் நானே அவ்விடத்துக்குச் சென்று விடுவேன். நான் ஓடிப்போய்விடுவேன் என்ற எண்ணம் அவர்களுக்கு இருக்குமானல் என்னைப் பிடித்துவிட முடியாதா? ஒருவனைப் பெரிய சைன்யம் காக்கிறதென்ருல் அந்தச் சைன்யத்துக்கு அது இழுக்கு ஆகாதா?எனக்கு இவர்கள் பெரிய மதிப்புத் தந்திருக்கிருர்கள். ஆயுதமில்லாத ஒரு மனிதனை இவ்வளவு பெரிய சைன்யம் பாதுகாக்கிறதென்ருல் இவனிடம் ஏதோ சக்தி இருக்கிறதென்றல்லவா உலக மக்கள் சொல்வார்கள். ரகுநாதா! நீதான் எனக்குப் பெருமை தந்திருக்கின்ருய். ஆன்ம சக்தியின் மேன்மையையும் நீ உணர்த்துகின்ருய். ஆன்மசக்தியின் முன் அரசாங்கம் என்ன செய்ய முடியும்? ஆன்ம சக்தியை எதிர்த்து வெல்லுவது அரிது. மேலும் எனக்கு முப்பத்தைந்து கசை அடி தரப்போகின்ருர்கள். இச் சரீரத்தால் அதைச் சகிக்க முடியுமா? இந்தச் சரீரம் என்ன கல்லா, மண்ணு? இந்தச் சரீரம் துன்பத்தை உணரத்தானே செய்யும். கேசவா! நான் உன்னை நம்பி இருக்கின்றேன். உனக்குப் பணி செய்வதால் இப்போது அவர்கள் கொடுக்கின்ற கசை அடிகளை நான் சந்தோஷமாக ஏற்றுக்கொள்ளவேண்டும். அடியைப் பொறுக்க மாட்டாது கதறுவேனகில் எனக்கும் என் தலைவனகிய உனக்கும் அது இழிவைத் தரும்.இவர்கள் அடிக்கு என் உடல் இரும்பாக இருக்கத் திருவருள்புரி. மேலும் இவர்கள் என்னை அடிக்கும்போது இவர்கள் கை நோகுமன்ருே! என்னல் இவர்கள் அந்தத் துன்பத்தை அடையலாமா? இவர்களோ அரசன் ஆணைக்குக் கீழ்ப் படிந்து நடப்பவர்கள். எனவே இவர்களையும் நீ மன்னிப்பாயாக. மனிதப் பிறவி எவ்வளவு

பலஹீனமாய் இருக்கிறது. சிறிய அவஸ்தையையும் பொறுக்க முடியாத நிலையில் இருக்கின்றது. மனிதன் தன் பலஹீனத்தை உணராது என்னென்ன அட்டகாசம் புரிகின்றான். கருணைக்கடலே! நீ எல்லாம் அறிந்தவன். நீ எனக்கு அபயம் கொடுக்கும் நேரத்தை நன்கு அறிவாய். நீ எனக்கு வேண்டியதைச் செய்யக் காத்துக் கொண்டிருக்கின்றாய். நீ இருக்கும் போது எனக்கு என்ன குறை?'' இங்ஙனம் மனிதனுடைய அறியாமைக்கு வருந்தியும், மனித உடலின் பலஹீனத் தன்மையை நினைந்தும், தமக்கு இன்னல் செய்பவர்களை மன்னிக்குமாறு கடவுளை வேண்டியும், தம்மைத் தெய்வத்தினிடம் ஒப்படைத்தும் ரகுராமரைத் துதித்த வண்ணம் தண்டனை விதிக்கப்படும் இடத்திற்குச் சிப்பாய்களோடு சென்றுகொண்டிருந்தார்.

அவருக்கு இரு பக்கங்களிலும் சென்றுகொண்டிருந்த சிப்பாய்களில் ஒருவன் அவரைப் பார்த்து "என்ன! திருட்டு விழி விழிக்கின்றாய்? ஏமாந்தால் ஓடிவிடலாம் என்று எண்ணுகின்றாயா? அப்படி ஓட ஆரம்பிப்பாயானால் முட்டி உடைந்துவிடும். நவாப்பின் கிஸ்திப்பணத்தை எடுத்து உன்னைக் கோயில் கட்டச் சொன்னது யார்? கோயில் கட்டினாயா? நீயே தின்று ஏப்பம் விட்டாயா? அரசாங்கத்தில் உனக்கு நல்ல உத்தியோகம் கிடைத்தால் அதைச் சரியாக நிர்வகித்து நற்பெயர் எடுக்காது நம்பிக்கைத் துரோகம் செய்யலாமா? வீண் அவஸ்தைகளுக்கு உள்ளாகாது உனக்குச் சொத்து ஏதாவது இருந்தால் அதை விற்று அரசாங்கக் கடனைத் தீர்த்துவிடு" என்று இழிவாகப் பேசிக்கொண்டே போனான். மற்றொருவன் "அண்ணே! இவனை லேசாக நினைத்துவிடாதே. இவனுக்குக் கொடுக்கும் தண்டனைகளை எல்லாம் பொருள்படுத்தாது இருக்கின்றான்" என்று கூறினான். மற்றொரு நல்ல மனம் படைத்தவன் "அறிவிலிகளே! இவர் ஒப்பற்ற பக்தர். இவரை வாயில் வந்தபடி வைது பாப மூட்டையைச் சேர்த்துக் கொள்ளாதீர்கள். இவர் செய்தது எல்லாம் நியாயமே. நீங்கள் ஏன் இவர் விஷயத்தில் தலையிடுகின்றீர்கள்? தெய்வத்தைப் பழித்தாலும் ஒருவேளை மன்னிப்புப்பெறலாம். பெரியோரைப் பழித்து மீளமுடியாது. அரசாங்க உத்தியோகத்தில் இருக்கிறோம் என்று நீங்கள் செருக்குக் கொண்டிருக்கிறீர்கள், நாவடக்கமாய்ச் சொல்லுங்கள். உங்களுக்குரிய கடமையைச் செய்யுங்கள். இவரைப் பற்றி நீங்கள் எதுவும் பேசக்கூடாது'' என்று அவர்களை இழித்துக் கூறியதன்பேரில் துஷ்டத்தனம் வாய்ந்த காவலாளிகள் வாய்பேசாது அவரை அழைத்துச் சென்றார்கள். யார் எது கூறினாலும் அதைப் பொருள்படுத்தாது கோபன்னா ராமச் சிந்தனையிலேயே சென்றார்.

கோபன்னாவுக்கு அளிக்கப்பட்ட தண்டனை தண்டோராமூலம் மக்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. மக்கள் கண்கலங்கி வருந்தினார்கள். சிப்பாய்கள் கோபன்னாவை ஒரு பெரிய மைதானத்துக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கு ஒரு முக்கோணம் நாட்டி இருந்தது. முக்கோணத்தைச் சுற்றிலும் சிப்பாய்கள் நிறுத்தப்பட்டிருந்தனர். மூன்று நாட்கள் நன்றாக ஊற வைத்திருந்த பத்துப் பிரம்புகள் ஒரு ஜவானிடம் கொடுக்கப்பட்டன. கோபன்னா முக்கோணத்துக்குப் பக்கத்தில் கொண்டுபோகப் பட்டார். அங்கிருந்த அதிகாரி அவருடைய ஆடைகளை எல்லாம் களைந்தார். அவரை முக்கோணத்தில் ஏற்றும்படி உத்தரவு இட்டார். சிப்பாய்கள் கோபன்னாவை முக்கோணத்தில் ஏற்றினார்கள். 'ஸ்ரீ ராமச்சந்திரமூர்த்திக்கு ஜே' என்று கூறிக்கொண்டு கோபன்னா முக்கோணத்தில் ஏறினார். கசையடி கொடுக்க ஆரம்பித்தனர். 'ராமா, ராமா' என்று கோபன்னா கூறினார். இக்காட்சியைக் காணவேண்டாமென்று சிலர் போய்விட்டனர். சிலர் கண்ணீர்விட்டு அழுதனர். ராமபிரான் கோபன்னாவின் கசையடியை ஏற்றார். அடிப்பவனுடைய பிரம்பு ஒடிந்து விழுந்துகொண்டிருந்தது. கோபன்னாவுக்கோ எந்த வேதனையும் ஏற்படவில்லை. முப்பத்தைந்து கசையடிகள் முடிவதற்குள் பத்துப் பிரம்புகள் ஒடிந்தன. கோபன்னாவுக்குச் சிறிதும் வலி ஏற்படவில்லை. அவரைக் கட்டியிருந்த கட்டுக்களை அவிழ்த்தார்கள். முக்கோணத்தை விட்டுக் கீழே இறக்கினார்கள். 'ஸ்ரீ ராமச்சந்திரமூர்த்திக்கு ஜே' என்று கூறிக்கொண்டே முக்கோணத்தை விட்டுக் கோபன்னா இறங்கினார். சிப்பாய்கள் அவரை அங்கிருந்து காவல் கூடத்துக்கு அழைத்துச் சென்றார்கள்.

(தொடரும்)

ஸ்ரீமத் பாகவதம்

(சுவாமி ஸதானந்தர்)

தேவே, மகரிஷி வேதவியாசரிடமிருந்து நான்கு வர்ணத்தாரும் செய்யவேண்டிய கடமை, அவர்களுக்கு இருக்கவேண்டிய குண நலன் ஆகியவைகளைப்பற்றி நான் வேண்டிய வாறு கேட்டிருக்கிறேன். அவைகளைப்பற்றி நான் திருப்தியடைந்திருக்கிறேன். அவைகள் சாதாரண உலக இன்பங்களை மட்டுமே நல்க வல்லவைகள். அவைகளைப்பற்றி இனி நான் ஏதும் கேட்கவே விரும்பவில்லை. தேவே, என் பிரபு என் ஆண்டவன் ஸ்ரீகிருஷ்ணரது மகிமை கள், லீலைகளைப் பற்றியே கேட்க விரும்பு கிறேன். என் ஆண்டவனைப் பற்றிய செய்தி எனக்குக் கர்ணாமிர்தமாக இருக்கிறது. அதில் எனக்குப் போதும் என்றநிலை உண்டாக வில்லை. மேலும் கேட்கவே விரும்புகிறேன். ஆகவே தேவே, என் ஆண்டவன் ஸ்ரீகிருஷ்ண னின் பெருமை, லீலைகளைப்பற்றி சொல்லுங்கள்.

முனிசிரேஷ்டரே தங்களைப் போன்றே பெரு நிலை அடைந்த மேலான முனிவர்களின் திருக் கூட்டத்தில் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவைப்பற்றி நடைபெற்ற சம்வாதத்தைக் கேட்ட பிறகு அதை மேலும் கேட்கவேண்டும் என்கிற ஆவலே அதிகரிக்கிறது. அந்தச் சம்வாதத்தைக் கேட்டால் உலகப்பற்றுத் தேய்ந்து தெய்வப் பற்று அதிகரிக்கிறது. அவரில் கலந்து விட, ஆட்படத் தூண்டுகிறது. தங்கள் நண்பர் வேத வியாசர் கடவுளின் ஒப்பற்ற மகிமைகளை நினைக்க, பாட அந்தஸ்மரணையில் இருப்ப தற்காகவே மஹாபாரதத்தில் அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்று உறுதிப் பொருள்கள்– புருஷார்த்தங்கள் பற்றிச் சொல்லியுள்ளார். அத்துடன் சேர்த்து சாதாரண வாழ்க்கைச் சம்பவங்களும். காம, மோஹ விஷயங்களும் சொல்லப்பட்டுள்ளன. அதன் மூலம் சாதாரண உலக மக்களின் மனம் கடவுள் விஷயங்களுக்கு இழுக்கப்படுகிறது. கடவுள்-சத்விஷயங்களில் ஈடுபாடு ஏற்பட்டால் அவர்களுடைய அறிவு, மனம் தெளிவடைகிறது. சாதாரண உலகவிவகா ரங்களில் சலிப்புத் தட்டுகிறது. அதற்கு அடுத்த படியாக அவர்கள் பக்தி தீவிரமடைகிறது. பக்திவெள்ளம் பெருகப்பெருக அவர்களுடைய உலகத் துன்ப துயரங்கள் எல்லாம் மறைந்து விடுகின்றன. மனது அதைப் பொருள்படுத்து வதே இல்லை. சத்விஷயங்களில், கடவுள் விஷயங்களில் ஈடுபாடு இல்லாதவர்களுக்கு மஹாபாரதத்தின் உட்பொருள் விளங்காது. அவர்களைக் குறித்து நல்லவர்கள் அனுதாபப் படவேண்டியதுதான். அத்தகையவர்களைக் குறித்து நானும் வருந்துகிறேன். காலம் கடந்து கொண்டே இருக்கிறது. கடந்து போன ஒவ் வொரு க்ஷணமும் நம் ஆயுளைக் குறைத்து விட் டது. உலகப் பற்றுடையவனின் மனோ, வாக்கு, காயங்களின் செயல்கள் எல்லாம் வீணான வையே, விழலுக்கு இறைத்த நீரே, பிரயோ ஜனமற்றவையே ஆகும். இப்படிப்பட்ட பரிதா பகரமான நிலையில் உள்ளவர்களைத் குறித்துப் பேரிரக்கம் கொண்ட முனிவரே, ஸ்ரீ ஹரியின் லீலாவினோதங்களை எல்லாம் சொல்லி அருள் விராக. தேனீ மலர்களிலிருந்து மதுவை, தேனை சேகரிப்பது போன்று நமது புராணம், வேதம் சாஸ்திரங்களிலிருந்து அவைகளின் உட் பொருளை நன்கு கிரஹித்து அவைகளைத் தன் மயம் ஆக்கி இருக்கிறீர்கள். என் ஆண்டவன் மானுட வடிவெடுத்து அதிஆச்சரியமான காரி யங்களை நல்லவர்களை, தர்மத்தைக் காக்கச் செய்துள்ளார். எந்தப் பொருள் மும்மூர்த்தி களாக வடிவெடுத்து சிருஷ்டி-ஸ்திதி-ஸம்ஹா ரம் ஆகிய முத்தொழிலைச் செய்து வருகிறாரோ அவரது மகிமை, பெருமை, கீர்த்தி, விபூதிகளை எல்லாம் தேவே பகர்ந்தருளுவீராக.

சுகதேவர் சொன்னார்: அரசனே! இங்ஙனம் கேட்கப்பட்ட அந்த உத்தமமான முனி சிரேஷ்டர் மைத்ரேயர் விதுரரிடம் பேரன்பும் பெருமதிப்பும் கொண்டார். பிறகு இங்ஙனம் சொன்னார்: அன்பான விதுரா, உனக்கு எல்லா மங்களங்களும் உண்டாகட்டும். மானுட வர்க்கத்துக்கு நலம்தரும் விஷயத்தைப் பற்றிக் கேட்டதனால் மனிதர்களுக்கும் நன்மை செய் துள்ளாய். எனக்கும் நன்மை செய்துள்ளாய், கடவுளைத் தவிர பேசுவதற்கு வேறு நல்ல விஷ யம் என்ன இருக்கிறது! நீயோ அசாதாரண மான கீர்த்தியும் ராஜ குடும்பம், பொதுமக்கள்

இவர்களிடம் பெருமதிப்பும் பெற்று விளங்கு கின்ருய். நீ என்றும் விஷ்ணுவினிடத்துப் பரம பக்தனுய் இருந்துவருகிருய். ஆ! நீ, மிகப் புனித மான, பெருமை மிக்க வேத வியாசரின் வீரியத் திலிருந்து தோன்றி வந்துள்ளாய். ஆகையால் நீ இவ்வளவு பெரிய ஆழ்ந்த கிருஷ்ண பக்த னுய் இருப்பதில் ஆச்சரியம் ஏதுமில்லே. நீ உண்மையில் யமதர்மராஜன்—மரணக் கடவுள். பெரிய ரிஷியாகிய மாண்டவ்யர் சாபத்தி ஞல் நீ விசித்திர வீரியனுல் தன் மனைவியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட வேலேக்கார மாதுவுக் கும், உத்தம வேதவியாசருக்கும் மகவாகப் பிறந்தாய். நீ பரம பக்தனுய் இருப்பதால் என் பிரவு,பகவானுலேயே மெய்ஞ்ஞானம் புகட்டப் பட்டிருக்கிருய். தன் பூலோக லீலேயை முடித் துக் கொண்டு வைகுண்டத்துக்குப் போகும் தருணத்தில் என் பிரபு உனக்கு மீண்டும் அந்த ஞானத்தை ஞாபக மூட்டும்படியாக எனக்குக் கட்டளே இட்டிருக்கிருர். உத்தம நண்பா, என் பிரபுவின் பெருமைமிக்க பூலோக லீலேகளே முழுவதும் உனக்குச் சொல்கிறேன். அவைகள் முழுவதும் தர்மத்துக்கு விளக்கம். அவை பரம்பொருளின் சக்தி, ஆற்றல், மகி மையை விளக்குகின்றன. அவர் அவைகளே விளையாட்டாகச் செய்தார். ஆண்டவனின் லீலா விநோதங்கள் அவரது யோகமாயை எனப்படுகின்றன. ஆண்டவனின் பூலோக லீலேகள் முத்தொழில் அல்லது பஞ்ச கிருத்தி யங்கள் எனப்படுகின்றன.

சிருஷ்டிக்கு முன்பு இப்பிரபஞ்சம் பரமாத்மா வடிவில் அவரிடத்து மறைந்து இருந்தது. யார் தாமே ஜீவாத்மாக்களாக வடிவெடுத் திருக்கிருரோ, யார் ஜீவகோடிகளுக்குத் தாயும் தந்தையும், நாதனும், பிரபுவும், ஆண்டவனும் ஆகிருரோ அத்தகைய பரம பிதா-பரமாத்மா விடத்து அல்லாது அது வேறு எங்கு இருக்க முடியும்? அப்போது-அந்நிலேயில் பரமாத்மா பலவாக-பிரபஞ்சமாக அனேக கோடி உயிர் வகைகளாக வடிவெடுக்கவில்லே, தோன்ற வில்லே. அவரது இச்சாசக்தி-மாயை-சுபாவம்- பரமாத்மாவிடத்து. வெளிப்படாமல், செயல் படாமல் அடங்கியிருந்தது. விதையில் செடி மறைந்திருப்பது போன்றும் குழந்தையில் பெரிய மனிதன் மறைந்திருப்பது போன்றும் இப்பிரபஞ்சம் ஆண்டவனிடத்தில் மறைந்திருந் தது. அந்நிலேயில் ஆண்டவனைத் தவிர காண் போன்—காணப்படுபொருள் என்கிற இருமை இல்லே. காணுதல் என்கிற செயல் இல்லே. அவர் ஏகமாய் தன்னில்தானுய் இருந்தார். அவரைத் தவிரப் பார்ப்பதற்கு வேறு பொருள் இல்லே. அங்ஙனம் அவர் ஏகனுய் இருக்கத் திருவுளம் கொண்டு அந்நிலேயில் இருந்தார். பிறகு அவர் தம்மைச் சுற்றிலும் பார்த்தார். அவர் ஒன்றையும் பார்க்க இயலவில்லே. ஏனென்ருல் அவர் அப்போது ஏகனுய்த் தன்னில்தானுய் இருந்தார். அப்போது அவர் தாமும் இல்லாதது போன்று, ஒரே சூன்யமாய் உணர்ந்தார். ஏனென்ருல் அவரது பிரக்ஞை— பேர் உணர்வு—போதம் அவருக்குத் தெளிவாக இருந்தும், சர்வ விழிப்பு நிலேயில் இருந்தும் அவரது சக்திகள் அனைத்தும் அப்போது அவ ரிடத்து ஒடுங்கியிருந்தன. அனைத்தையும் அறிதல், அனைத்தையும் உணர்தல், அனைத்தை யும் பார்த்தல் ஆகிய சர்வக்ஞத்துவம் வாய்ந்த வர் பரமாத்மா. அவரது இந்தச் சக்திக்கு— மனது, அறிவு புறத்தே செல்லுதல், ஆராய்தல், வேறு பொருளே நாடுதல்—மாயை என்று பெயர். அந்த மாயை காரண காரியம் வர்த்த மானம் மயமானது. கடவுள் அருளுக்குப் பாத்திரமான விதுரனே! இந்த மாயா சக்தியி ஞல்தான் பிரபு அண்டங்களே எல்லாம் சிருஷ்டிக்கிருர். இந்த மாயை முக்குண மய மானது, முக்குணத்தால் ஆனது, இந்த முக் குணங்களுக்கு இடையில் கால வேகத்தால் சமநிலே மாறும்போது எல்லாவற்றுக்கும் அதீத மானவரான பரமாத்மா, உயர்வற உயர்நிலே யில் உள்ளவரான பரமாத்மா தம்மிடத் திருந்தே தம் அம்சங்கள் கொண்டதான விராட் புருஷனைத் தோற்றுவித்தார். இன்னும் விரிவு, பலவாக ஆதல் தோன்ருத நிலேயி லிருந்து காலவிருத்தியால்—கால வேகத்தால் மகத் தத்துவம் (இப்பிரபஞ்சத்தின் தொகை அறிவு) தோன்றியது. அறிதல், ஆராய்தல், யூகித்தல், உணர்தல், அன்பு ஆகிய கூறுகள் இதனிடத்து அடங்கியுள்ளன. இந்த மகத் தத்துவமே பிரபஞ்சத்தைத் தோற்றுவிக்கிறது, பிரபஞ்சமாக வடிவெடுக்கிறது. பிரபஞ்சத் துக்கு ஆதாரமாக இருப்பது இந்தத் தத்துவம்.

சூக்ஷ்ம ரூபத்தில் பிரபஞ்சம் இப் புருஷரிடத்தில் இருக்கிறது. முக்குணங்கள், காலம், மகத் இவைகளுடன்கூடிய இப்புருஷர் பரமாத்மா திருஷ்டி—பார்வைபட்டு இப்பிரபஞ்சத்தைச் சிருஷ்டிக்கும் எண்ணம் கொள்கிறார்; ஒரு மாற்றம், எழுச்சி கொள்கிறார். இந்த மகத் தத்துவத்திலிருந்து அஹம்—அகங்கார தத்துவம் தோன்றுகிறது. அஹங்கார தத்துவத்திலிருந்து பஞ்ச ஸ்தூல பூதங்கள், ஐந்து ஞானேந்திரியங்கள், ஐந்து கர்மேந்திரியங்கள், மனது ஆகியவைகள் தோன்றுகின்றன. அகங்காரமானது வைகாரிகஅதாவது சாத்விகம்,ராஜசம், தாமஸிகம் என மூன்று வகையாக இருக்கிறது. சாத்விக அகங்காரத்திலிருந்து மனதும் இந்திரியங்களுக்கு அதிதேவதைகளாக இருக்கும் தெய்வங்களும் தோன்றி வருகின்றன. ராஜச அகங்காரத்திலிருந்து ஞானேந்திரியங்களும் கர்மேந்திரியங்களும் தோன்றுகின்றன. தாமஸ அகங்காரத்திலிருந்து மற்ற சூக்ஷ்ம பூதங்களுக்குக் காரணமான சப்தம் தோன்றியது. ஆகாயத்துக்குக் காரணம் சப்தம். அதன் சர்வ வியாபகத் தன்மையினால் ஆகாயம் என்றும் கடவுளை விளக்குவதற்கு நல்ல உதாரணமாய் விளங்கி வருகிறது. அதன் பிறகு ஸ்பர்ச உணர்ச்சி—காற்று, நிறம்—வெளிச்சம்—காட்சி—அக்னி, சுவை—ஜலம், மணம்—பிருதிவி இங்ஙனம் உலகின் ஐந்து கூறுகள்—வகைகள் அவற்றிற்குரிய பூதங்கள் தோன்றின. கடவுளின் அருள் பெற்ற விதுரனே! இந்த வரிசைக் கிரமத்தில் பின்னால் தோன்றிய பூதங்களில் முன்னால் தோன்றிய பூதங்களின் தன்மைகள் அடங்கியுள்ளன. ஏனென்றால் தன் தோற்றத்துக்குக் காரணமாயுள்ள பூதங்களின் குணங்களையும் தன் தனிக் குணத்தோடு சேர்த்துக் கொள்கிறது, பெறுகிறது. மகத் தத்துவம், மற்ற இந்திரியங்களுக்கு உள்ள அதிதேவதைகள், காலம்-மாயை-ஜீவன் அதாவது ஓயாது மாறிக்கொண்டிருத்தல்-பகிர்முகதிருஷ்டி-பிரக்ஞை அல்லது ஜீவபோதம் ஆகிய குணங்களைக் கொண்டிருக்கின்றன. இந்தத் தேவதைகள் பகவான் விஷ்ணுவின் அம்சம். அவரிடத்திருந்து வந்த பொறி, அல்லது கதிர் போன்றவர்கள். அவர்கள் தங்கள் பணிகளை முறையே நிறைவேற்ற, செய்ய இயலாதபோது அவர்கள் பகவானைக் கைகூப்பித் தொழுது விண்ணப்பிக்கின்றனர்.

தேவர்கள் இங்ஙனம் பிரார்த்திருக்கிறார்கள்:—எங்கள் பிரபுவே! ஆண்டவனே, தங்கள் தாமரைத் திருவடிகளைச் சரண் அடைகிறோம், தொழுகிறோம். தங்களைத் தொழுதார்க்கு ஒரு நாளும் துன்பமில்லை. சூரிய வெய்யிலின் கடுமையைக் குடை ஒன்று தடுப்பது போன்று தங்களின் அருள் துயருற்றவர்களின் துயரங்களையெல்லாம் போக்கிவிடுகிறது. ஜகந்நாதா, விஸ்வநாதா, இவ்வுலகின் ஜீவர்கள் மூன்று விதத் துன்பங்களால் பீடிக்கப்பட்டவர்களாக உள்ளார்கள். அத்தகையவர்களுக்குத் தங்களையல்லால் சாந்தி, துயரங்களிலிருந்து விமோசனம் வேறு யாரால், எப்படி அமைய முடியும். ஆகையால் பிரபோ! தங்கள் திருவடிகளில் தஞ்சம் அடைகிறோம். முனிவர்கள் ஏகாந்தத்தில் இருந்துகொண்டு சாதனம்செய்து,தவம்செய்து யாருடைய புனிதமான தெய்வீகமான, அருள் நிறைந்த திருவடிகளைத் தேடுகிறார்களோ, தியானிக்கிறார்களோ அந்தத் திருவடிகளை நாங்கள் தஞ்சமடைகிறோம். சப்த புண்ணிய நதிகளில் தலையானதான, புனிதமான, பாபநாசினியான கங்கா தீர்த்தம் தங்களது திருவடிகளிலிருந்து பிரவகிக்கிறது. பறவைகள் நல்ல இடத்தில் கட்டின தங்கள் கூடுகளில் பாதுகாப்பாக க்ஷேமமாக வாழ்வது போன்று நாங்கள் தங்கள் திருவடிகளை அடைக்கலம் புகுந்துள்ளோம். தங்கள் தாமரைத் திருவடிகளை யோகிகள் மனதில் பக்தியுடனும், பணிவு, மரியாதை, போற்றுதலுடனும் தியானம் பண்ணி ஹிருதய சுத்தியடைகிறார்கள், பற்று ஆசைகளைத் துடைத்து விடுகிறார்கள்; அவர்களது விவேக வைராக்கியம் வலுவடைகிறது. மனதை நன்கு அடக்க முடிகிறது, அதன் மூலம் பக்தியும் ஆழமும் தீவிரமும் அடைகிறது. அத்தகைய அருள்கழல்களை நாங்கள் சரணடைகிறோம். பிரபோ! ஸ்ருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம் ஆகிய லீலைகளைச் செய்வதற்கன்றோ பூமியில் அவதரிக்கிறீர்கள். அநித்தியம், அசுகமான இவ்வுலகில் தங்களை நினைப்பவர்களுக்கு, வழிபடுகிறவர்களுக்கு அபயம் அளிக்கும் பரந்தாமா தங்களைத் தவிர எங்களுக்குப் புகலிடம், கதி,வேறு ஏது, தங்களைத் தஞ்சமடைகிறோம்.

ஸ்ரீ யோக வாசிஷ்டம்

(திரு V. S. நரசிம்மன்)

5. कालवैभवम् காலத்தின் பெருமை

ஸ்ரீ ராமன் விவேகத்தால் தாம் அறிந்த உண்மைகளையும், நிலையற்ற பொருள்களின் இழிவையும் பற்றித் தொடர்ந்து கூறுகின்றார்:

"உலகில் எவரேனும் சிலருக்கு, எப்பொழுதேனும் சில சமயங்களில் சுகம் என்ற அனுபவம் கிட்டும். ஆனால் நூல்கண்டை எலியானது அழிப்பதுபோல் 'காலம்' அத்தகைய இன்பங்களையும் அழிக்கின்றது. ('நிகழின்பப் பொருள்கள் எலாம் புரையுறும் எலியால் நூல் போல் காலனால் பொன்றுமன்றே'.)

"எவ்வளவு பெரிய மனிதனாயினும் அவனுடைய இன்பத்தை இறைவன் கணப்பொழுதும் காப்பது இல்லை. உலகம் முழுவதையும் ஒரு கவளமாக எடுத்து விழுங்கிவிட்டுக் காலம் ஒப்பற்ற பரம்பொருளாகவே திகழ்கின்றது. (அகிலமும் விழுங்கித் தானே அகிலமாய் நிற்குமன்றே.)

"முனிவரே, காலா காலத்தில் உலக விருத்திகள் அனைத்தும் இங்ஙனம் அழிவுறும்போது, சம்சாரத்தில் கட்டுண்ட என் போன்றவர்களின் கதி யாது? இதை எண்ணும்போது மனம் தளர்வுறுகின்றது; மயங்குகின்றது; சந்தோஷம் என்பது எட்டச் சென்று விடுகின்றது; வீரம் அழிந்து கோழைத்தனமே எஞ்சுகின்றது; அசைவற்றது எனக் கருதப்படும் துருவ நட்சத்திரம்கூட காலத்தினால் மாறுபடுகின்றது. உரியகாலத்தில் தேவர்களுமே அழிவார்கள் என்றால் என்போன்றவர்களுக்கு என்ன நம்பிக்கை உள்ளது? மலையே பொடிப்பொடியாக நொறுங்கும்போது, மானிடனின் நிலை என்ன? கடல் நீர் வற்றி விடுகின்றது; நட்சத்திரங்களும் எரிந்து போகின்றன; ஞானிகளும் அழிவுறுகின்றனர்; என்போன்றவர்க்கு நம்பிக்கை எங்கிருந்து வரும்? பிரம்மா, விஷ்ணு, ருத்திரன் ஆகிய மும்மூர்த்திகளே தனித் தன்மையை இழந்து விடுவார்களானால் என் போன்றோருக்கு என்ன நம்பிக்கை உள்ளது?

ஒரு கணத்தில் தொல்லைகள் பெருகுகின்றன; மற்றொரு கணத்தில் நலம் தரும் விளைவுகள் ஏற்படுகின்றன; கணத்திலே பிறப்பு, கணத்திலே இறப்பு! முனிவரே, எதுதான் இவ்வுலக வாழ்க்கையில் நிலையாக உள்ளது?

"இவ்வாறு உலக வாழ்வில் உள்ள தோஷங்கள் என்ற காட்டு நெருப்பால் எனது மனம் தகர்க்கப்படுகின்றது. மெய்ப்பொருளைப்பற்றிய உண்மைகளை உணர்ந்துள்ளதால் என் மனம் திண்மை பெற்றுள்ளது. எனவே, தண்ணீர் நிறைந்த தடாகத்தில் கானல் நீர் தோன்றாதது போன்று, எனதுள்ளத்தே இச்சை என்னும் பொருளற்ற உணர்வு எழுவதில்லை. ('அனைய குற்றங்களாம் காட்டு எரியினால் அறவும் வெந்த நினைவில் நீரில் கானல்போல் நெடிய போகங்கள் தோன்றா')

"நான் மரணம் அடையவும் விரும்பவில்லை; உயிர் வாழ்வதற்கும் விரும்புவதில்லை. எந்த விதத் தாபமும் இல்லாது இப்போது இருப்பது போலவே எப்பொழுதும் இருக்கின்றேன். (வினையுறு மரணம், வாழ்நாள் இரண்டையும் விரும்புகில்லேன், இனையதோர் இடருமின்றி இருந்தவாறு இருக்கின்றேனால்).

"துக்கமற்ற நிலையைச் சாதுக்கள் எவ்வாறு அடைந்தனர் என்ற நெறியை நீர் அறிந்திருக்கின்றீர். எனது மயக்கம் தீர அதை உபதேசியுங்கள்.

அப்படிப்பட்ட மேலாம் மார்க்கத்தைத் தாங்கள் அறியாவிட்டாலோ, அல்லது அப்படியொரு வழியே இல்லையென்றாலோ, அல்லது எனது சுய முயற்சியால் மேலான சாந்தத்தை நான் அடைய முடியவில்லை என்றாலோ எனக்கு மரணத்தை எதிர்நோக்கி இருப்பதைத் தவிர வேறு எந்தவழியும் இல்லை. எல்லா ஆசைகளையும் உதறித் தள்ளி, ஆணவத்தை அகற்றிய நான் வரையப்பட்ட சித்திரம் போன்று மௌனமாக இருப்பேன்." (இனி யாக்கை நழுவுவது அன்றி யொன்று நயக்கிலன்—மவுனியாகி எழுதும் ஓவியம் போல் காமம், கோபம், பற்று இன்றி இருப்பேன்.")

இங்ஙனம் தனது உள்ளத்தில் இருந்த தாபத்தை வெளிக்காட்டி, ஸ்ரீ இராமர் அமைதியாக இருந்தார். விவேகமும், வைராக்கியமும் கிளர்ந்து எழுகின்ற மனதில் இத்தகைய ஐயங்

கள் தோன்றுவது இயல்பே. நல்ல பரிபக்குவ மடைந்த சீடனிடம்தான் இப்படிப்பட்ட எழுச்சி மிகு எண்ணங்கள் தோன்றும். இத்தகைய தகுதி நிறைந்த சீடன் கிடைக்கும் பொழுது தான், குரு மகிழ்ச்சி அடைந்து நல்லுபதேசம் செய்கின்றார். ஆத்ம வித்தையைப் பற்றிக் கேட்கும் சீடனே, விளக்கமாக விடையளிக் கும் தகுதி வாய்ந்த குருவோ வாய்ப்பது மிக அரிது. "வக்தா, ச்ரோதா ச துர்லப:" "ஆச் சர்யோ வக்தா, குசலா ஆச்சர்யோ ஞாதா குசலானுசிஷ்ட:" என்று உபநிஷத் இக் கருத்தை வலியுறுத்துகின்றது.

6. उपदेशोपक्रमः — உபதேச துவக்கம்

விஸ்வாமித்திரர் ஸ்ரீ ராமனை நோக்கி அன் புடன் பேசினார்: "ராமா, நீ அறிய வேண்டி யவை எவையும் இனி இல்லை. உன்னுடைய சூக்ஷ்ம புத்தியினால் நல்லமுறையில் அனைத்தை யும் உணர்ந்திருக்கின்றாய். கூறப்போனால் வேத வியாசரின் புத்திரர் சுகரைப் போன்று ஞானியாக நீயும் திகழ்கின்றாய். (நீயே களங்க மில் புந்தியாலே தீதற அனைத்தும் கண்டாய். தெளிவுறப் பிறிது ஒன்றில்லை—போதமார் சுகனும் நீயும் புந்தியால் ஒப்பீர் அன்றே?)

உலகில் அறிய வேண்டியது எது என்பதை அறிந்தவனுங்கூட உள்ளம் அமைதியாக இருக்கவேண்டும் (விச்ராந்தி) என்று விரும்பு கின்றான். (ज्ञातः ज्ञेयः अपि अन्तः विश्रान्ति मात्रमेव अपेक्षते- ஞாத: ஞேய: அபி அந்த: விச்ராந்தி மாத்ரமேவ அபேக்ஷதே) 'இகலற உணர்வு உற்றோரும் இளைப்பற நயப்பர்'. ஸ்ரீ ராமன் சுகமுனிவருக்குச் சாந்தி எவ்வாறு கிடைத்தது என்று வினவ, முனிவர் சுகருடைய கதையை விவரிக்கின்றார்.

சுகர் கதை: வியாசரின் மைந்தராகிய சுகர் தம்முடைய விவேகத்தின் துணைகொண்டு உல கின் இயல்பைத் தீவிரமாக ஆராய்ந்து, பர வஸ்துவைப் பற்றிய தெளிவைப் பெற்றார். இருப்பினும் அவர் 'இது தான் அந்த மெய்ப் பொருள்' என்ற தன்னம்பிக்கையை அடைய வில்லை. மனதில் அமைதியற்ற நிலையோடு தமது தந்தை வியாசரை அணுகிக் கேட் டார்: "உலகத் தோற்றம் என்னும் இம்மாயை எப்படித் தோன்றியது? இது எவ்வாறு அழி கின்றது? இது எதுவரை இருக்கும்? இந்தத் தோற்றம் எவருடையது? இது எந்தக் காலத் துக்கு உரியது?" வியாச பகவானும் இந்த விஷயத்தில் விளக்க வேண்டிய அனைத்தையும் அவருக்கு விவரமாகக் கூறினார். ஆனால் "இந்த விவரங்கள் அனைத்தையும் நான் முன்பே அறி வேன். இதில் புதியது எதுவும் இல்லையே" என்று அவருடைய திருக்குமாரர் கூறினார். வியாசர் "உறுதியான முறையில் எனக்கு இந்த உண்மை தெரியாது. ஜனகர் இதை உள்ளபடி அறிந்தவர்; அவரிடமிருந்தே அனைத் தையும் நீ அறிவாய்" என்றுரைத்து, அவரை ஜனக மகாராஜனிடம் அனுப்பி வைத்தார்.

சுகர் ஜனகன் அரண்மனையை அடைந்த பொழுது, வாயிற் காப்போன் உடன் அனுமதி தரவில்லை. அவருடைய வரவை அறிந்த ஜன கன் அவரது பக்குவத்தைச் சோதிக்க என் ணியே அனுமதி தரவில்லை. ஏழு நாட்கள் தொடர்ந்து அவரை உதாசீனப்படுத்தினர். எனினும் தான் வந்த நோக்கத்தின் மீது சிரத்தை வைத்திருந்த சுகர் மனதில் சஞ்சலம் இன்றி அந்த ஏழு நாட்களும் அமைதியாகக் காத்திருந்தார். (தூயவன் வரவு கேட்டுச் சோதிப்பான் சுரதி மன்னன் ஏயினன் இல்லை நாள் ஏழு இருந்தனன் விகற்பமில்லோன்.) பக்குவமடைந்த சீடனுக்குத்தான் உபதேசம் சட்டெனப் பலன் அளிக்கும். தக்க அதிகாரி ஆகாதவனுக்குப் பெரிய தத்துவத்தைக் கூறுவ தில் பயனில்லை. எனவே நமது முன்னோர்கள் இத்தகைய சோதனைகளை வைத்தனர். ஸ்ரீ ரா மானுஜரின் மனோதிடத்தைச் சோதிக்கவென்று அவரைப் பதினேழுமுறைகள் மீண்டும் மீண் டும் தம்மை நாடி வருமாறு அவரது குரு பணித் தார். யமதர்மன் மரணத்தைப் பற்றிய வின விற்கு நேரடியாகப் பதில் அளிக்கும் முன்பு நசிகேதனைப் பலவாறு சோதித்தார்.

ஏழு நாட்கள் கழிந்த பின்பு, சுகரை அரண் மனையில் அனுமதித்து அங்கும் ஏழு நாட்கள் தங்கச் செய்து அதன்பின் தன் இருப்பிடத் திற்கு அழைத்துச் சென்றார். அங்கு அழகிற் சிறந்த பணிப்பெண்களால் ராஜ உபசாரம் ஏழு நாட்களுக்கு நடந்தது. ஆயின் சுகருடைய மனமோ எப்போதும் போலத் தூய்மையாக சாந்தமாக இருந்தது. (स्वच्छः सुमना अभवत्— குற்றமுங் குணமும் நாடான் குளிர்நிறை மதியம்

ஒத்தான்) பரிபக்குவம் அடைந்த அவருடைய மனதை உதாசினமோ, போகமோ அலக்கழிக்கவில்லை. மேருவை இளந்தென்றல் அசைக்கவல்லதோ? (இன்னவன் மனதைச் சற்றும் இழத்தில இளம் மென் தென்றல் பொன் அசலத்தின் மிக்க பொருப்பினை இழக்கவற்றே.)

முனிவரின் நிலையைத் தமது சோதனைகளால் நன்கு அறிந்த மன்னர், அவரை வரவேற்று அடிபணிந்தார். "பெரியோய்! உமக்கு நல்வரவு. உலக விவகாரத்தை ஒழித்துப் பெரியபேறுபெற்றவர் தாம். தங்களுடைய வருகைக்குக் காரணம் யாது?" என்று வினவினர்.

"குருவே, மாயை தோன்றியது எப்படி? எவ்வாறு வளர்ச்சி பெற்றது? எப்படி அழியும்? உடனே எனக்கு எடுத்துரைப்பீர்" என்று சுகர் கேட்டுக்கொண்டார்.

மன்னர் ஒரு துறவிக்கு உரிய மரியாதைகளைத் தமக்குச் செய்த போதிலும், ஞானத்தை நாடி வந்த சிடன் என்ற முறைப்படி. 'குருவே' என்று சுகர் அவரை அழைக்கும் பாங்கை எண்ணி வியக்க வேண்டும்.

சுகருடைய கேள்விக்கு மறுமொழி கொடுக்கப்பட்டது. ஆயின் அவரது தந்தை எவ்வாறு விளக்கம் தந்தாரோ அதையே ஜனகரும் தந்தார். "இவை அனைத்தும் நான் முன்பே அறிந்தவை. எனது விவேகத்தாலும், தந்தையின் உரையினுலும் அறிந்த உண்மைகளையே தாங்களும் கூறுகின்றீர்கள். சாஸ்திரங்களில் கூறப்படும் செய்திகளும் இவையே. ஆனல் மனம் எப்படி அமைதியை அடைகின்றது என்பதை உங்களிடமிருந்து அறிய விரும்புகின்றேன்" என்றுர். (कथं चेत: विश्रामम् आप्नेनीति प्रभो वद)

ஜனகர் உபதேசிக்கலானர்: "பிரிவுகளற்ற அகண்ட ஞான வடிவாய் உள்ள பொருள் ஒன்றே; அதற்கு அப்பாற்பட்டு வேறு எதுவும் இங்கில்லை. தன்னுடைய எண்ணங்களால் அது தானே கட்டுப்பட்டுள்ளது. அந்தச் சங்கல்பம் இல்லையென்றல், அதுவே முக்தி அடைகின்றது. (அவ்வறிவு சங்கற்பத்தால் கட்டுண்ணும்—அது விடில் விடுறும்.)

அந்த அறிவைத் தாங்கள் நன்கு அடையப் பெற்றுள்ளீர். முக்தனுகவே விளங்குகின்றீர். உலகக் காட்சியோ, போக இச்சையோ உம்மை எதுவும் செய்ய இயலவில்லை. வீணே கொண்டுள்ள மனமயக்கத்தை உதறித் தள்ளுங்கள்." (प्र.त्तं प्रागतव्यमखिलं मुक्तत्वं भ्रान्तिमुत्सृज) (நிறை மனத்தால் அடையற்பால யாவுமடைந்தாய்...முத்தன் ஆனுய், கருத்திலுறு மயக்கமெனும் கவலை தீர்வாய்).

ஜனகரின் உபதேசம் பெற்றபின், சுகர் மனசாந்தி அடைந்து நிர்விகல்ப சமாதி அனுபவம் அடைந்தார்."

இவ்வாறு சுகர் வரலாறு கூறி, பின்பு விஸ்வாமித்திரர், "ராமா, சுகர் அடைந்த அனுபவம் உனக்கும் கிட்டும். அதற்குத் தடையாக இருக்கும் மலங்களை, உபாதிகளை அகற்ற வேண்டியது ஒன்றே உன்னல் செய்யத் தக்கது" என்றுர்.

(मलमात्रम् अपमार्जनम् नूनं तव अपि अपेक्ष्यते ।)

விஷயப் பொருள்களில் உள்ள தொடர்பால் 'வாசனை' கெட்டிப்படுகின்றது. அதுவே 'பந்தம்' ஆகின்றது. அந்த வாசனை வலி விழுந்து நலிவு அடைவதே (வாசனு-க்ஷயம்) அறிஞர்களால் முக்தி என்று கூறப்படுகிறது.

वासनातानवं राम मोक्ष इत्युच्यते बुधैः ।
पदार्थवासनादाढ्यं बन्ध इत्याभिधीयते ।

(இராகவனே! வாதனையினேர்மை வீடாம்; இகப்பொருளின் வாதனையின் இறுகல் பந்தம்)

யோக வாசிஷ்டம் மிக அற்புதமாக 'பந்தம்-மோக்ஷம்' எவை என வரையறுக்கின்றது.

விஸ்வாமித்திரர் வசிஷ்டரைப் பார்த்துக் கூறினர்: "முனிவரே, தாங்கள் ரகுவம்சத்தின் குலகுரு. ராகவனுடைய சித்த விச்ராந்திக்கு ஏற்ற யுக்தியை உபதேசிப்பீர்." வசிஷ்டரும் அதை ஏற்றுக்கொண்டு "உலக வாழ்வின்மயக்கத்தைப்போக்கும் நெறியைப் பிரம்மா எனக்கு உபதேசித்தார். அதை நினைவிற்கொண்டு உனக்கு உபதேசிக்கின்றேன்" என்றுர்.

நமது பாரதப் பண்பாட்டில் தன்னுடைய அறிவால் மட்டுமே உண்மையை அறிந்து கொண்டதாக எவரும் கூறுவதில்லை. இறைவனுடைய அருள், வாழையடி வாழையென வந்த ஆசாரியர் பரம்பரையின் அனுக்கிரகம் ஆகியவற்றுல் மட்டுமே பெரியநிலை வாய்க்கப்பெற்றது என்றே கருதுவர். அதற்கேற்ப வசிஷ்டரும் தாம் பிரம்மாவிடமிருந்து பெற்ற அறிவை வழங்குகின்றுர்.

தியாகம்

(சகோதரி நிவேதிதையின் ஆங்கிலக்கட்டுரையை யதீஸ்வரி கிருஷ்ணப்ரியா தமிழில் மொழிபெயர்த்தது.)

ஒரு சமுதாயத்தின் வளர்ச்சியில் பல கால கட்டங்கள் இருக்கும். ஒவ்வொரு காலத்திலும் குறிப்பிட்ட ஒரு சில கொள்கைகள் அல்லது மனப்பான்மைகள் முன்னணிக்கு வருகின்றன. ஆனால் அந்தந்தக் காலத்திற்கே உரிய அத்தகைய கொள்கைகள் அனைத்தும் என்றென்றைக்கும் சரியானவைகளாக இருக்கும் என்று சொல்ல முடியாது. சில நேரங்களில் தவறான கொள்கைகளும் மக்கள் மனதில் வேரூன்றலாம். தற்கால மக்கள் மனத்தைப் பற்றிப் பிடித்துள்ள தவறான சில கொள்கைகளில் ஒன்று, எந்த ஒரு செயலையும் அல்லது முயற்சியையும் மேற்கொள்வதற்கு முன் "இதனால் என்ன லாபம்?" என்று கேட்கின்ற மனப்பான்மையாகும். எதிலும் கணக்குப் பார்க்கும் புத்தி உடையவர்கள் இப்படிக்கேட்கும் போது, நம்முடைய பதில் இன்னொரு கேள்வியாக இருக்கவேண்டும். "இதனால் யாருக்கு லாபத்தை எதிர்பார்க்கிறீர்கள்." இந்த இரண்டாவது வினாவிற்குத் தெளிவான விடை கிடைத்த பின்பே மேலே பேச்சைத் தொடர வேண்டும்.

"யாருக்கு?" என்ற கேள்விக்குத் 'தனி மனிதனுக்கு' என்ற பதில்தான் பொதுவாகக் கிடைக்கும். "இந்தக் காரியத்தைச் செய்வதினால் செய்கின்ற எனக்கு என்ன பலன் இருக்கும்? அந்தப் பலனும் விரைவில் கிடைக்குமா? பலன் உண்டு, விரைவில் கிடைக்கும் என்றால் இந்தச் செயலைச் செய்வேன்; இல்லையெனில் செய்ய மாட்டேன்." இப்படித்தான் பெரும்பாலோர் கூறுவார்கள்.

இந்த மனப்பான்மை முற்றிலும் தவறானது என்று ஒதுக்கிவிடுவதற்கில்லை. சமுதாயத்தில் தன் நிலையை உணர்ந்த ஒருவன் இப்படிக் கேட்பது நல்லதே. குடும்பத் தலைவன், ஆலை முதலாளி, பள்ளி ஆசிரியன் என்ற முறையில் "நான் செய்வதும், எனக்கு வருவதும் என்னைச் சார்ந்திருக்கும் பலரைப் பாதிக்கும். எனவே இந்தச் செயலால் என்ன பயன் என்று அறிந்து கொள்ளாமல் இதைச் செய்யமாட்டேன்" என்று ஒருவன் சொல்வானாகில் அவனுடைய மனப்பான்மை பாராட்டத்தக்கதே.

கேடு ஒன்றைச் செய்ய நினைப்பவன் "இதனால் என்ன பயன்"? என்று கேட்டைக் குறித்து வினவுவதனால் அதன் தீயவிளைவுகள் நினைவுக்கு வந்து அச்செயலைத் தவிர்க்கக் காரணமாகலாம்.

ஆனால் கேடு அல்லாத எந்தச் செயலைக் குறித்தும் அதன் பயன்பற்றிச் சிந்திப்பதன் பொருள் என்ன என்பதை மக்கள் புரிந்து கொள்வதில்லை. இதே கேள்வியை உலகை உய்விக்க வரும் உத்தமர்களும், உண்மையை உணர்ந்த வரும் ஆச்சாரியர்களும் கேட்கிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். இயல்பான பேரானந்த நிலையைத் துறந்துவிட்டு உடல் என்னும் கூட்டுக்குள்ளே ஏன் அடைபட வேண்டும் என்று அவர்கள் நினைத்தால் உலகின் கதி என்னாகும்?. "உலகில் அவதரிப்பதால் தங்களுக்குப் பயன் ஒன்றுமில்லை. எனவே தங்கள் யதாஸ்தானத்திலேயே இருங்கள். அவ்வுயர் நிலையிலிருந்து எங்கள்பொருட்டு இறங்கி வர வேண்டாம்" என்று அந்த அவதார புருஷர்களைக் கேட்டுக்கொள்வோமா?. அவ்வாறு அவர்கள் வராவிட்டால் மனிதன் உய்வடையும் நம்பிக்கை தான் இருக்குமா?

பார்க்கப் போனால், மனித சமுதாயத்தின் வரலாற்றில் நிகழ்த்தப்பட்ட ஒவ்வொரு சாதனையும், கண்டு பிடிப்பும், அறிவுத்துறையில் அடைந்த முன்னேற்றமும் சுயநலம் கருதாதவர்களுக்குத்தான்சாத்தியமாகி இருக்கிறது. உலக நலனைக் கருத்தில் கொண்டு தமக்கு வரும் நன்மை தீமைகளைப் பொருட்படுத்தாதவர்கள் தாம் சாதனைகள் புரிவர். ஆனால் இந்தியாவில் சுயநலத்தியாகம் என்பது சந்நியாசிகளுக்கே உரியது என்று நினைத்துவிடுகிறோம். இன்றைய நிலையில் நாம் கற்றுக்கொள்ள வேண்டிய உண்மை ஒன்று உள்ளது. சமுதாய வாழ்விலிருந்து விலகிக் காடு செல்பவர்கள் மட்டுமன்றிச் சமுதாயத்தில் இருந்துகொண்டு அதன் பொருட்டுச் சுயநலத்தியாகம் செய்பவர்களும் சந்நியாசிகளே என்பது தான் அவ்வுண்மை. சமுதாயத்திற்குச் சந்நியாசி என்ன

செய்யவேண்டும் என்பதை இன்று நாம் சிந்திக்கவேண்டும்.

மனிதன் எவ்வளவுதான் சுயநலம் கருதுபவனாக இருந்தாலும், உண்மையில், செய்பவனுக்கு மட்டும் பலனளித்து வேறு எவரையும் பாதிக்காமல் நின்றுவிடக்கூடிய செயல் என்று எதுவும் இல்லை. உதாரணமாகக் கல்வியை எடுத்துக் கொள்வோம். கல்வியை விட அத்தியாவசியமானது சமுதாயத்திற்கு வேறு ஒன்றுமில்லை என்று சொல்லலாம். ஆனால் என்றுமே ஆசிரியர்கள் மற்றவர்களை விடக் குறைவாகவே ஊதியம் பெறுகிறார்கள் என்பது எல்லாரும் அறிந்த உண்மை. ரோமன் கத்தோலிக்கத் துறவிகள் நடத்தும் கல்வி ஸ்தாபனங்கள் கத்தோலிக்கர் அல்லாத நாடுகளிலும் பரவியிருப்பது எதனால்? அந்தச் சங்கங்களைச் சேர்ந்தவர்கள் ஊதியம் பெறாமல் உழைப்பவர்களாக இருப்பதனால்தான். அங்கத்தினனின் தியாகத்தால் அவனுடைய சங்கத்திற்கு வெற்றி ஏற்படுகிறது. இந்தத் துறவியர் ஸ்தாபனங்கள் அளிக்கும் பயிற்சி சமுதாயத்தில் அவர்களுக்கு ஒரு மதிப்பைத் தருகிறது. சுயநலமின்மை அவர்களுடைய வெற்றியை உறுதிப்படுத்துகிறது. இதுதான் கல்வித்துறையின் இன்றைய நிலை.

ஆனால் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு மத்திய ஐரோப்பாவில் கத்தோலிக்கத் துறவிகள் கல்வியல்லாத மற்றத் துறைகளிலும் தொண்டு செய்திருக்கிறார்கள் என்று வரலாற்றில் அறிகிறோம். ஜே. ஆர். கிரீன் (J. R. Green) என்ற வரலாற்று ஆசிரியர், பதின் மூன்றாம் நூற்றாண்டில் இங்கிலாந்திற்கு வந்த **Begging Friars** என்ற பரிவ்ராஜக சந்நியாசிகளைப் பற்றி இப்படி எழுதுகிறார்: "இந்தத் துறவிகளின் பணி மக்களின் உள்ளத்தை மட்டும் அன்றி, உடல் தேவைகளையும் கவனிப்பதாய் இருந்தது. அந்நாளில் மக்கள் தொகைப் பெருக்கத்தால் சுகாதாரக் குறைவும், பிளேக், தொழுநோய் முதலிய கொடுநோய்களும் பரவியிருந்தன. குறிப்பாகப் புறநகர் பகுதிகளில் வாழ்ந்து வந்தவர்கள் சுகாதார வசதிகள் ஏதுமில்லாது நோயை உற்பத்தி பண்ணும் அசுத்தமான சூழலில் வாழ்ந்தார்கள். இந்தச் சேரிகளுக்குத்தான் தம்மைப் பின்பற்றும் சந்நியாசிகளை அஸ்ஸிஸி முனிவர் பிரான்ஸிஸ் (St. Francis of Assissi) அனுப்பிவைத்தார். சாம்பல் நிற உடைஅணிந்திருந்த அந்தச்சந்நியாசிகளும் நகர வாழ்வு நரக வேதனையாகும் பகுதிகளில் தம் இருப்பிடங்களை அமைத்துக்கொண்டார்கள். யாருக்கு இவர்களுடைய தொண்டு தேவையாக இருந்ததோ அந்தத் தொழுநோயாளர்கள், குற்றவாளிகள், சேரி மக்கள் ஆகியோருக்கிடையில் வாழ அத்துறவிகள் தயங்கவில்லை. இவர்களுடைய மடங்கள் சுற்றியிருந்த குடிசைகளைப் போலவே மண்ணாலும், மரத்தாலும் கட்டப்பட்ட எளிய குடில்களாகவே அமைந்திருந்தன.

இந்தப் பொதுநலப் பணி நடந்தது பதின்மூன்றாம் நூற்றாண்டில். ஆனால் பதினோராம் நூற்றாண்டின் இறுதிக்குள் 'சிஸ்டர்சியன்' (cistercian) என்ற கூட்டத்தைச் சேர்ந்த சந்நியாசிகள் பிரான்ஸிலும், ரைன் நதிக் கரையிலும் பரவியிருந்தார்கள். மடங்களையும், கோயில்களையும் கட்டியிருந்தார்கள். சதுப்பு நிலப் பகுதிகளிலிருந்த நீரை வடியச் செய்து, ஊர்ப் பொது நிலத்தைச் சுத்தப்படுத்தி, பெருமளவில் விவசாயத்தைத் தொடங்கி இருந்தார்கள். இந்த சிஸ்டர்சியன் துறவியர்தாம் பிற்காலத்தில் நார்வே என்னும் காடுகள் நிறைந்த நாட்டிற்குச் சென்று அங்குக் கற்கட்டடங்களை எழுப்பினார்கள்; மக்களுக்கு லத்தீன் மொழியைக் கற்றுக்கொடுத்தார்கள். அதனால் நார்வே நாட்டுத் தேசிய காப்பியங்கள் எழுத்து வடிவம் பெறக்காரணமாய் இருந்தார்கள்.

இவ்வாறு மேல் நாடுகளும் — சுயநலமும் விரைவில் வரும் லாபமுமே வாழ்வில் எந்தச் செயலுக்கும் மூலகாரணமாய் இருக்கமுடியும் என்ற நம்பிக்கை உடைய மேல் நாடுகளும் கூட, ஊதியம் பெறாத உழைப்பில்தான் உருவாகியிருக்கின்றன. எந்த ஒரு செயலிலும் முன்னோடிகளாக இருப்பவர்கள் அதன் சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து சோதிக்கு முன்னர் தம் வருமானத்தையும், மற்ற வசதிகளையும் தியாகம் செய்தாக வேண்டும்.

இந்தியாவை ஆண்ட ஆங்கிலேயர், நம் நாட்டின் செல்வத்தைத் தம் வசதிகளுக்காகக் கொள்ளையடித்தல் என்னும் ஒருவிதக் கூட்டுச் சுயநலத்துடன் செயல்பட்டு வந்தார்கள். அவர்

கள் கூட இந்தியாவில் வேரூன்ற ஆரம்பத்தில் காரணமாய் இருந்தது தனி நபர் ஒருவர் தன் சுயநலத்தைத் தியாகம் செய்ததுதான். மொகலாய அரசன் ஒருவனிடம் பணிபுரிந்த டாக்டர் ஹாமில்டன் என்ற ஆங்கிலேய மருத்துவர் தாம் செய்த பணிக்குச் சம்பளம் பெற்றுக் கொள்ள மறுத்துவிட்டார். ஆனால் அதற்குப் பதிலாகத் தம் நாட்டைச் சேர்ந்த வியாபாரிகள் இந்தியாவில் ஒரு தொழிற்சாலை கட்டிக் கொள்வதற்கு அனுமதி பெற்று விட்டார். துறவு மனப்பான்மையைத் தன்னகத்தேகொள்ளாத ஓர் இயக்கத்தைக் கண்டு யாரும் அஞ்ச வேண்டியதில்லை. ஏனெனில் இயக்கத்தை வளர்க்கும் பெரும் சக்தி எதுவும் அங்கு உருவெடுக்காது.

ஒரு சமயத்தின் சக்திகளைப் புதிய முறையில் இணைக்கும் வல்லமை மிக்க கருத்து ஒன்று உருவாகும் போது அச்சமுதாயத்தின் வரலாற்றில் புதிய சகாப்தம் பிறப்பெடுக்கும். இன்று இந்தியாவிற்குச் சக்தியளிக்க வல்ல கருத்து தேசியம்—தேச நலனில் ஒவ்வொரு குடிமகனும் கொள்ளும் அக்கறைதான். இந்தியாவில் தேசிய உணர்வு மக்களுக்கு ஏற்படும் போது பெரிய சாதனைகள் சாதிக்க முடியும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் தேசிய உணர்வு முதலில் மக்கள் மனதில் தெளிவாக உருவெடுக்க வேண்டும். அதைத் தொடர்ந்து சாதனைக்குத் தேவையான சுயநலத் தியாகம் தானேவரும். குடும்பத்தின்பொருட்டும், ஊருக்காகவும், நாட்டு நலன் கருதியும் செய்யப்படும் தியாகம்தான் முடிவில் "வைராக்கியம்" என அழைக்கப்படும் பெரும் தியாகத்தை, உலகப் பற்று அனைத்தையும் முற்றத்துறத்தல் என்னும் தியாகத்தைச் செய்ய ஒருவனைப் பக்குவப் படுத்தும். 'ஊருக்கு உழைத்தல்' என்னும் சந்நியாசத்தை மேற்கொண்டவன்தான் நாட்டுக்குச் சேவைசெய்யத் தகுதி உடையவனாகிறான். சுயநலமற்ற தேசபக்தி என்னும் அக்னியில் புடம் போடப்பட்டு மாசு நீங்கித் தூய்மை அடைந்தவனே ஞானம், பக்தி, கர்மம், யோகம் என்று வடிவெடுக்கும் இறுதியான உயர்ந்த துறவினை மேற்கொள்ளத் தகுதி பெறுகிறான்.

சுயநலத்திலிருந்து விடுதலை பெறுவதற்கு என்னென்ன புதிய சாதனங்களை இன்று மேற்கொள்ளவேண்டியிருக்கிறது! செல்வர்கள் தம் சொந்த லட்சியங்களைத் தியாகம் பண்ண வேண்டும். பெற்றோர் தம் செல்வர்கள் பொருட்டுத் தாம் கொண்டிருக்கும் ஆசைகளை விட்டு விடுதல் என்னும் பெரியதுறவை மேற்கொள்ள வேண்டும். ஆனால் இந்தப் புதிய துறவிகள் காவியணிந்திருக்க மாட்டார்கள். அலுவலகத்திலோ ஆலையிலோ அமர்ந்திருப்பார்கள்; கல்வித்துறையில் இருப்பார்கள். உடன் பணிபுரிவோர் நலத்தின் பொருட்டுத் தொழில் சங்கங்களை உருவாக்குவார்கள். ஏன், தன் வீட்டு நிர்வாகத்தையே, சுயநலமின்றி நாட்டுக்கு நலம் செய்யும் வகையில் நடத்தி வரலாம். இப்படித்தான் இருப்பார்கள் எதிர்கால இந்தியாவை உருவாக்கும் புதிய சந்நியாசிகள்.

'அச்சமும் ஆசையும் அற்றவனே சந்நியாசி' என்கிறது கீதை. இன்று நாட்டுக்குத் தேவையாய் இருப்பவர்கள் உடையால் அன்று, உள்ளத்தால் சந்நியாசிகள்; தன்னலத்தை முன்னிட்டு அச்சமோ எதிர்பார்ப்புக்களோ இல்லாதவர்கள்; பொதுநலத்திற்காகத் தம் குடும்பமே பட்டினி கிடப்பதைக் காண நேர்ந்தாலும் மனம் கலங்காதவர்கள்; தம் தோல்வி பிறருடைய வெற்றிக்கு அடிகோலும் என்றால் தோல்வியை ஏற்கவும் தயங்காதவர்கள்; ஆற்ற வேண்டிய பணியே தம் ஒரே புகலாக, பரநல நாட்டமே தம் ஒரே உடைமையாக, தம்மைத் தியாகம் செய்தாயினும் பிறர் லட்சியம் நிறைவேற உதவுவோம் என்ற எண்ணமே தம் ஒரே நம்பிக்கையாக உடையவர்கள்—இத்தகைய சந்நியாசிகள் தாம் இன்று ஒவ்வொரு துறையிலும் தோன்றவேண்டும். புதிய இந்தியாவின் இப்புதிய துறவிகளுக்கும் அவர்களுடைய பெற்றோர்களுக்கும் அண்டை அயலாருக்கும் நாம் கூறுவது இதுதான்: உங்களுக்குள்ளே பொங்கியெழும் லட்சியங்களை நம்புங்கள். தோல்வியைப்பற்றிய அச்சமில்லாமல் உங்கள் சக்தி அனைத்தையும் லட்சியங்களில் செலுத்துங்கள். உங்களை நம்புங்கள், உங்கள் பின் வருவோரை நம்புங்கள். உங்களுடைய உழைப்பால், தியாகத்தால் நவ பாரதத்தைப் படைக்க முடியும். லட்சியம் நிறைவேறுவதைக் கண்ணால் காணுமுன்னரே நம்பிக்கை கொள்ளும் நீங்கள் பாக்கியவான்களே.

ஆன்மீக நெறிகள்

(ஸ்ரீ இராமகிருஷ்ணரின் நேர் சீடரான சுவாமி சிவானந்தர் அருளியது)

[336 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தேச விடுதலைப் போரில் தீவிரமாக ஈடுபட்ட உத்தமர்களை ஆங்கிலேய அரசு விலங்கு பூட்டிச் சிறையில் தள்ளியது. நாடெங்கும் பதட்டமும் பரபரப்பும் நிலவிய அத்தகைய சூழ்நிலையிலும் திருமடத்தின் அருட்பணி களுக்கு இடையூறு ஏதும் நிகழாதவாறு மஹா புருஷர் தமது கருத்தையும், கவனத்தையும் அவற்றில் செலுத்திவந்தார். இவ்வாறு இருந்து வருகையில் ஒரு திங்கட்கிழமையன்று பரம ஹம்சரின் சன்னிதியில் மாலை வேளைப் பூஜை யும், பிரார்த்தனையும் முடிந்த பிறகு வழக் கம் போல் எங்கணும் அமைதி நிலவியது. சந்நியாசிகளும், பிரம்மச்சாரிகளும் தியா னத்தில் ஈடுபட்டனர். சிவானந்தர் தமது அறையில் மங்கிய விளக்கு வெளிச்சத்தில் தியானத்தில் மூழ்கியிருந்தார். அவருடைய வதனம் சாந்தமும், கம்பீரமும் பொருந்தி ஒளி வீசியது. நெடுநேரத்திற்குப் பின் அவர் தியா னம் கலைந்து பக்தி கீதங்களைப் பாடலானார். சிவபெருமானது செயல்களைப் பற்றிய புஷ்ப தந்தனின் பாடல்களை இசைக்கையில் அவரது உள்ளம் அருள்வெள்ளத்தில்தோய்ந்தது. அப் பொழுது கல்கத்தாவைச் சேர்ந்த பக்தர் ஒருவர்சன்னிதியில்தொழுதுவிட்டு மஹா புருஷ ரின் அறைக்கு வந்தார். அவர் மஹாபுருஷரைத் தாள் பணிந்து வணங்கிவிட்டுத் தரையில் அமர்ந்தார். சிறிது நேரம் கழித்துச் சிவானந்தர் அவரை அன்புடன் அழைத்து "நீங்கள் 'கே' என்பவர் அல்லவா? எப்பொழுது வந்தீர்கள்?" என்று முகமன் கூறினர். பக்தர் மிக்க தாழ்மை யுடன் "மஹராஜ், மாலை வேளைப் பூஜையின் போது வந்தேன்" என்று கூறினர்.

மஹராஜ்: அப்படியானல் இவ்வளவு நேரம் சன்னிதியில்தான் இருந்தீர்களா?

பக்தர்: ஆம் மஹராஜ்.

மஹராஜ்: நீங்கள் ஏன் இப்படித் துக்கத் துடன் காணப்படுகிறீர்கள்? வீட்டில் யாவரும் நலம் தானே?

பக்தர்: ஆம், மஹராஜ். தங்கள் ஆசீர் வாதத்தால் வீட்டில் யாவரும் நலமே. ஆனல் கடந்த சில நாட்களாக ஒரு பிரச்னையைக் குறித்து என் உள்ளம் மிகவும் குழம்பிப் போயிருக்கிறது. அது என் மன அமைதியை மிகவும் பாதித்து என்னைக் கவலைக்குள்ளாக்கி விட்டது. என் பாரத்தைக் கொட்டிவிட வேண்டும் என்றுதான் இங்கே வந்தேன். தாங் கள் அனுமதித்தால் அவ்விதமேசெய்வேன்.

மஹராஜ்: என்ன விஷயம்? சொல்லுங்கள்.

பின்னர் பக்தர் மனம் திறந்து பேசலானர்: "மஹராஜ், இப்பொழுது நம் தேசம் முழுவதும் மஹாத்மா காந்தியடிகளின் ஒத்துழையாமை இயக்கமானது பரவி வருகிறது. எண்ணிலடங் காத ஆண்களும்,பெண்களும் சிறைகளில் வாடு கிருர்கள். தேசபக்தர்கள் பலர் தங்கள் இன்னு யிரையும் இழந்தார்கள். காந்தியடிகளும் கூட இப்பொழுது இந்த ஆபத்தான போராட்டத் தில் இறங்கிவிட்டார். ஆனல், நாடுதழுவிய இந்த அறப் போராட்டத்தில் ராமகிருஷ்ண இயக்கம்மட்டும் ஈடுபாடுகாட்டாமல் இருப்பது எதனுல்? இதன் பொருட்டுத் தங்கள் இயக்கம் எதுவும் செய்ய இயலாதா? ராமகிருஷ்ண மிஷனின் மௌனத்தைக் குறித்துத் தேசமே அதிசயத்தில் மூழ்கியுள்ளது. இந்தப் புனித மான தேசியவிடுதலைப் போராட்டத்தில் நமது மிஷனுக்கு என்று கடமைகள் எதுவுமே இல்லையா?" துக்கம் தோய்ந்த குரலில் அந் தப் பக்தர் மீண்டும் கேட்டார்: "நாட்டைப் பற்றிய எந்த உணர்வும் தங்களுக்கு எழ வில்லையா? நாட்டு விடுதலைக்காக எதைச் செய்யவும் தாங்கள் சக்தியற்றுப் போனீர் களா?"

சுவாமி சிவானந்தரின் சாந்தம் தவழும் முகம் இப்பொழுது மாறுதல் அடைந்தது. சிறிது நாழிகை சென்றபின் மௌனத்தைக் கலைத்துக் கொண்டு அவர் பேசலுற்றுர்: "நல்லது கே. தெய்விகம் நிறைந்த ஓர் அவதாரத்தின் செயல் கள் ஒரு சாதாரணமனிதனின் புத்திக்குஎட்டா தவை. தெய்வத்தின் லீலைகளைநீரோ அல்லது இந்தத் தேசமோ எவ்வாறு புரிந்துகொள்ள இயலும்? கடவுள் மனித உருக்கொண்டு இவ்

வுலகில் தோன்றுவது ஒரு குறிப்பிட்ட இனத்திற்காகவோ அல்லது தேசத்திற்காகவோ அன்று; அகில உலகத்துக்கும் நன்மை செய்யும் பொருட்டே அவர் பிறப்பெடுக்கின்றூர். இக்காலத்தில் வந்து உதித்திருப்பதோ இறைவனின் மிக உன்னதமான சாத்வீக இயல்பேயாகும். தெய்வத்தின் திரு அவதாரமான ஸ்ரீ ராமகிருஷ்ணர் சத்துவத்தின் தூய வடிவம் ஆவார். ஆறு தெய்விக சக்திகளையும் தம்முள் கொண்டிருந்த அவர் சாத்வீக மனநிலையிலேயே உடல் வாழ்க்கை வாழ்ந்தார். கங்கைக் கரையில் உள்ள ஒரு கோயிலின் முற்றத்திலேயே தம் வாழ்நாள் முழுவதையும் கழித்த விதத்தை எண்ணிப் பாருங்கள். இவற்றின் தத்துவார்த்தங்களை நீங்கள் எப்படிப்புரிந்து கொள்வீர்கள் ?

''தம்முடைய சாத்வீக தத்துவ நெறியைப் பரப்புவதற்காகவே ஸ்ரீ ராமகிருஷ்ணர் மாபெரும் சக்தி வாய்ந்த ஆன்மாவான சுவாமி விவேகானந்தரைத் தம்மோடு அழைத்து வந்தார். சுவாமிஜி எண்ணியிருந்தால் தேசத்தில் ஒரு பெரிய அரசியல் புரட்சியை உருவாக்கியிருக்க முடியும். அவரினும் மேலான தேச பக்தர் யார்? அவருடைய இதயத்தைப் போன்று எத்தனை இதயங்கள் நலிந்து போனவர்களுக்காக இரத்தம் கசியும்? சுவாமிஜி புரட்சி எதையும் துவங்கவில்லை. அது இந்தியாவுக்கு நன்மை செய்யும் என்று தெரிந்திருந்தால் அவர் அவ்விதம் செய்திருப்பார்.

''சுவாமி விவேகானந்தரைப் போன்றே எங்களுக்கும் இறைவனின் திருவருளினுல் அத்தகைய சக்தி உண்டு. நாங்கள் எண்ணினுல் தேசத்தில் புரட்சியைத் தோற்றுவிக்க இயலும். ஆனுல் பரமஹம்சர் எங்களை அவ்வாறு செய்ய அனுமதிப்பதில்லை. தமது புனிதப் பணியில் ஈடுபடவே எங்களை அவர் இங்கே அழைத்து வந்தார். நாட்டுக்காகவும், நாட்டு மக்களுக்காகவும் நாங்கள் செய்யும் எல்லா நற்பணிகளிலும் அவர் எங்களைக் கைபிடித்து வழி காட்டி அழைத்துச் செல்கின்றூர். உலகத்தின் நன்மை ஒன்றே எங்கள் குறிக்கோள் என்பதை நீங்கள் ஏற்கத்தான் வேண்டும். மக்களின் துயரங்களைக் கண்டு எங்கள் இதயங்கள் வாடுவதை நான் உங்களுக்கு எப்படிப் புரிய வைப்பேன்? ஒவ்வொரு இதயத்திலும் குடிகொண்டுள்ள இறைவனே இதை உணரவல்லார்.

''தமது திருமேனியை உகுப்பதற்கு முன்னர் பரமஹம்சர் தமது சக்திகள், தமது இயக்கத்தின் பொறுப்புக்கள் அனைத்தையும் சுவாமி விவேகானந்தரிடம் ஒப்படைத்தார். உலகத்தின் எல்லாப் பகுதிகளையும் சுற்றிப் பார்த்துத் தீவிரமாக ஆராய்ந்த பிறகே சுவாமிஜி இந்தத் திருமடத்தையும், இயக்கத்தையும் தோற்றுவித்தார். உலகத்தின் நலனுக்காக, குறிப்பாக இந்தியாவின் முன்னேற்றத்திற்காக, குருமகராஜரின் திருவுள்ளக் குறிப்பின் வண்ணம் இவை உருவாயின. எங்களையும் ஒவ்வொருவராக சுவாமிஜி இப்பணிகளில் ஈடுபடுத்தினுர். நாங்கள் விரும்பியிருந்தால் மலைகளுக்கும், காடுகளுக்கும் சென்று தன்னந்தனிமையில் தவம், தியானத்தில் ஈடுபட்டிருந்திருக்க முடியும். உண்மையைச் சொல்லப் போனுல், எங்களில் பெரும்பாலோர் திருமடத்தில் தங்காமல் வெவ்வேறு இடங்களில் எங்களால் இயன்ற அளவு தியானத்திலும் தவத்திலும் ஈடுபட்டுவந்தோம். சுவாமி விவேகானந்தரே எங்களையெல்லாம் ஒருங்கு திரட்டினுர். அவரே எங்களை இந்த மக்கள் பணிகளில் ஈடுபடுத்தினுர். மக்களுக்குச் சேவை செய்வதே மஹேஸ்வரனுக்கு உரிய சேவை என்பதே அவர் கருத்தாகும். வயது முதிர்ந்து விட்ட போதிலும் இந்தப் பணிகளை நாங்கள் விடாமல் செய்து வருகிறோம்.''

பக்தர்: ''மஹராஜ், அப்படியானுல் மகாத்மா காந்தியடிகளும் மற்றத்தலைவர்களும் பொருத்தமான தேசப்பணிகளில் ஈடுபடவில்லை என்று தாங்கள் கருதுகிறீர்களா ? அவர்களின் தன்னலம் கருதாத சேவை மனப்பான்மை, துன்பத்திலும் உறுதி தளராமை, தியாகம் ஆகியபண்புகளை நாம் மறக்க இயலாது. தேசத்துக்காக அவமானங்களையும், தண்டனைகளையும் அவர்கள் எவ்வளவுஅனுபவித்து வருகிறூர்கள்!''

மஹராஜ்: இல்லை. நான் அவ்வாறு கூறவில்லை. அவர்களின் தியாகம், தளராத உறுதி, தேசசேவை இவையாவும் பாராட்டுதற்குரியவையே. மற்றவர்கள் முன் உதாரணமாகக் கொள்ளவேண்டியவியத்தகு பெருவாழ்வுஅவர்களுடையது ஆகும். தேசத்துக்காக அவர்கள்

செய்ததுமிகப்பெரிது. நாட்டிற்கு நலன் என்று எதைக்கருதுகிருர்களோ அதன்பொருட்டு மிகவும் அந்தரங்க சுத்தியுடன் அவர்கள் பாடுபட்டு வருகிருர்கள். ஆனல் நம்முடைய வேலைத் திட்டங்கள் வேறுபட்டவை. தேசத் தலைவர்களைப்பற்றி நாங்கள் எவ்வாறு கருதுகிறோம் என்பதை நீங்கள் அறிவீர்களா? ஸ்ரீராமகிருஷ்ணர் மற்றும் சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் உன்னதக் கருத்துக்களால் தூண்டப் பெற்றே அவர்கள் இத்தகைய சேவைகளில் ஈடுபட்டுள்ளார்கள். காந்தியடிகள் மாபெரும் சக்தி வாய்க்கப்பெற்றவர் என்பதில் ஐயம் ஏதும் இல்லை. அண்டங்களுக்கெல்லாம் அன்னையான அந்த மகா சக்தியின் தண்ணருளும் அவருக்குப் பரிபூரணமாக உள்ளது. கீதையில் அர்ஜுனனுக்குக் கண்ணன் அருளுவான்:

"யத்யத்விபூதி மத்ஸத்வம் ஸ்ரீமதூர்ஜிதமேவ வா!
தத்ததேவாவகச்சத்வம் மம தேஜோம் ச ஸம்பவம்!!

மஹிமையும் அழகும் வலிவும் உடையது எது எதுவோ, அதெல்லாம் என் பிரபையின் ஒரு பகுதியில் உண்டானது என்று அறிக.

—கீதை அத். 10. சுலோகம் 41.

அதிக சக்தியை வெளிப்படுத்தி மக்களின் பெருமதிப்பிற்கும் போற்றுதலுக்கும் உரியவராக விளங்குபவர் யாவரேயாயினும் அவர்கள் தெய்விகத்தின் புறத்தோற்றத்தில் ஒரு பகுதி என்றே கொள்ளவேண்டும். ஸ்ரீராமகிருஷ்ணரால் உலக நன்மையின் பொருட்டு எழுப்பப் பெற்றவளான அந்த மகாசக்தி தன்னுடைய திட்டங்களைப் பல்வேறு உத்தமர்களின்மூலம் நிறைவேற்றி வருகின்ருள். இந்தியாவின் சுபிட்சத்துக்கு எது அடிப்படை என்பதைச் சுவாமி விவேகானந்தர் தமது உரைகளில் மீண்டும் மீண்டும் குறிப்பிட்டுக் கூறியுள்ளார். தேசத்தின் புனருத்தாரணத்திற்காக இருபத்தைந்து, முப்பது வருடங்களுக்கு முன்பரே அவர் மொழிந்த தீர்வுகள்—தீண்டாமை ஒழிப்பு,தாழ்த்தப்பட்டவர்களின் முன்னேற்றம் பாமர மக்களிடையேயும் கல்வியறிவைப் பரப்புதல் போன்றவை இன்று காந்தியடிகளால் வலியுறுத்தப்பட்டு வருகின்றன.

"நாளேட்டுச் செய்திகள் வாயிலாக எங்கள் கருத்துக்களையும், உணர்ச்சிகளையும் நாங்கள் வெளிப்படுத்தாவிட்டாலும், எங்களுக்கே உரித்தான அரசியல் சிறிதும் கலக்காத வழிமுறைகளில் நாங்கள் வெற்றி கண்டு வருகிறோம். மகாத்மாவும் இந்தக் கருத்துக்களையே அரசியலில் செயல்படுத்தி வருகின்ருர். இந்தியாவின் முன்னேற்றத்தில் ஆர்வம்கொண்டு தாயகத்தில் உழைப்பது போலவே மற்றநாடுகளும், மக்களும் மேன்மையடைதற்பொருட்டு வெளிநாடுகளிலும் நாங்கள் தொண்டுபுரிகிறோம். ஆனல் அந்தந்த இடத்திற்கும், சூழ்நிலைக்கும் ஏற்ப எங்கள் பணிகளிலும் சில மாறுபாடுகள் இருக்கக்கூடும். சுவாமி விவேகானந்தர் ஸ்தாபித்துள்ள திருமடத்தையும், ஸ்ரீராமகிருஷ்ண இயக்கத்தையும் சேர்ந்த ஒவ்வொரு துறவியும் 'தன்னுடைய ஆன்மீக முன்னேற்றம் மற்றும் உலக நலன்' ஆகிய இரண்டு இலட்சியங்களுக்காகவும் தம்மைப் பரிபூரணமாக அர்ப்பணித்துக்கொண்டவராவார். பரமஹம்சரும், விவேகானந்தரும் வகுத்துத் தந்துள்ள வழிமுறைகளிலேயே இப்பணிகளில் அவர்கள் ஈடுபடுவர்."

பக்தர்: "ஆனல் மஹராஜ், தங்களுடைய திருமடமும், ஸ்ரீராமகிருஷ்ண இயக்கமும் ஆதரவு கொடுத்திருந்தால் காந்தியடிகளின் ஒத்துழையாமை இயக்கமும், அதனல் ஏற்பட்ட தேசிய விழிப்புணர்ச்சியும் இன்னும் அதிக உந்துதலைப் பெற்றிருக்கும். இது என்னுடைய அபிப்பிராயம் மட்டும் அன்று; நாட்டில் பெரும்பான்மையான சிந்தனையாளர்களும் இவ்வாறே கருதுகின்றனர். காந்திஜியின் தேச விடுதலைப் போராட்டத்தில் தாங்களும் ஏன் ஒத்துழைக்கலாகாது?"

மஹராஜ்: "எங்கள் நோக்கங்களுக்கு ஏற்ப எங்கள் வழிமுறையில் நாங்கள் பணியாற்றி வருவதைப் பற்றி ஆரம்பத்திலேயே உங்களிடம் குறிப்பிட்டேன். எங்களுடைய இலட்சியங்கள் ஞான திருஷ்டியும், தொலைநோக்கும் படைத்த சுவாமி விவேகானந்தரால் உருவாக்கப்பட்டு எங்களுக்கு அளிக்கப்பட்டவை. அடுத்துவரும் ஆயிரம் வருடங்களுக்கு இந்தியாவும், இந்த அகில உலகமும் என்ன நிலையில் இருக்கும் என்பதை அவர் தமது அகக் காட்சியில் தெளிவாகக் கண்டார். நன்கு ஆராய்ந்த பின்னரே அவர் நாங்கள் பின்பற்ற வேண்டிய பாதையைத் தெளிவாக வகுத்துத் தந்துள்ளார்.

அவர் இருட்டில் குருட்டாம் போக்கில் கற்களை வீசி எறியவில்லை. வருங்காலத்தை உணர்ந்து அறியும் வல்லமை அவர் பெற்றிருந்தார். அவர் ஞானதிருஷ்டி படைத்த தீர்க்க தரிசியாவார்.

"இந்த யுகத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ணரிடத்தில் தோற்றத்துக்கு வந்துள்ள திவ்விய சக்திகள் மிகவும் அலாதியானவை. பல நூற்றாண்டு காலமாக அத்தகைய வெளிப்பாடு எதுவும் தோன்றவேயில்லை. இன்னும் அநேக காலத்திற்கு ஆன்மீக எழுச்சி உலகமெங்கணும் தங்கு தடையின்றி அலை வீசிக்கொண்டிருக்கும். இது ஓர் ஆரம்பமே. இது ஒரு முன்னுரைதான். இந்தியாவின் வானவெளியில் பிரகாசிக்கும் இந்த ஆன்மீகம் என்னும் ஞானபானு தனது மங்காத தூய ஒளிக்கதிர்களால் இந்த உலகத்தையே ஆன்மீக ஒளியில் ஆழ்த்தும். இதன் காரணமாகவே சுவாமிஜியும் 'இம்முறை இந்தியாவே தலைமையகம்' என்று அறுதியிட்டுக் கூறினர். இனி வரும் காலங்களில் ஆன்மீக சக்தி இந்தியாவைத் தலைமைப் பீடமாகக்கொண்டு இயங்கும். இந்தத் தெய்வீக சக்தியின் பேரலைகளை யாரால் தடுத்து நிறுத்த இயலும்? இந்தியா புது வாழ்வு பெறும் என்பதில் யாதொரு ஐயமும் இல்லை. உலகமே கண்டு வியக்கும் அளவுக்குக் கலை, விஞ்ஞானம், தத்துவம், ஆன்மீகம் ஆகிய எல்லாத்துறைகளிலும் இந்நாடு முன்னேற்றமடையும். எதிர்காலத்தில் அது அடையப்போகும் வெற்றிகளின் முன்னே கடந்த காலத்தில் இந்தியா பெற்றுள்ள வெற்றிகள் எம்மாத்திரம்? பரமஹம்சரும், சுவாமிஜியும் தோன்றி இந்தியாவின் நலனுக்காக எத்தகைய அஸ்திவாரத்தை அமைத்துள்ளனர்கள் என்பதை அப்பொழுது நீங்களே புரிந்துகொள்வீர்கள். வரம்புக்கு உட்பட்ட மனிதனின் சிறுமூளையானது இத்தகைய தெய்வீக புருஷர்களின் அருள் செயல்களை எவ்வாறு கணிக்க இயலும்? தேசத்தின் ஆன்மீக சக்தியை அவர்கள் விழித்தெழச் செய்து விட்டார்கள் என்ற பேருண்மையை நீங்கள் இன்னமும் புரிந்து கொள்ளவில்லையா?"

இவ்வாறு மஹாபுருஷர் ராமகிருஷ்ண இயக்கத்தின் தெய்வீக இயல்பினைத் தமது உரையில் வெளிப்படுத்தினர். தேசத்தின் விடுதலைப்போரில் பங்குபெறலாகாதா என்று தொடுக்கப்பட்ட வினவிற்கு அவர் உரைத்த பதில்கள் மிகத் தெளிவாக அமைந்திருந்தன. வெறும் அரசியல் ஈடுபாடுகளால் நிரந்தர நன்மைகளை ஏற்படுத்த இயலாது; உலகத்திற்கு ஒரு நாடு கொடுக்கின்ற ஆன்மீக தானமே எதிர்காலத்தில் அதன் மேன்மைகளுக்கு வழிகோலும். அத்தகைய ஆன்மீகத்தை நெறிவழுவாது பாரெங்கும் இந்தியாவின் சார்பில் வழங்கத் தக்க தூய உள்ளம் கொண்ட துறவிகளையே ஸ்ரீ ராமகிருஷ்ணரின் திருவடிகளைச் சரணடைந்த ஸ்ரீவிவேகானந்தர் தமதுஇயக்கத்தில் உருவாக்குகின்றார் என்பன போன்ற பேருண்மைகளை சுவாமி சிவானந்தர் தமது அருள் வாக்கினில் எடுத்துரைத்தார்.

மற்றொருநாள் சுவாமி சிவானந்தர் பேலூர் திருமடத்தில் தமது அறையில் அமர்ந்திருந்த பொழுது பக்தர்கள் திரளாக வந்து அவரை நமஸ்கரித்தார்கள். அவரது திருவதனத்தில் ஆன்மீகப் பேரொளியும், நயனங்களில் காருண்யமும் திகழ்ந்தன. அறையில் எல்லையில்லா அமைதி குடிகொண்டிருந்தது. அன்று சனிக்கிழமையாதலால் கல்கத்தாவிலிருந்து பக்தர்கள் நிறைய வந்திருந்தனர். அவர்களில் பெரும்பாலோர் அரசு மற்றும் தனியார் அலுவலகங்களில் அதிகாரிகளாக இருந்தனர். விடுமுறைகளில் திருமடத்திற்கு வந்து மஹாபுருஷரைத் தரிசித்து அவரது சொல்லமுதம் பருக வேண்டுமென்று அவர்கள் ஆவல்கொண்டிருந்தார்கள். அவருடைய ஞானமொழிகளைக் கேட்டு அவர்கள் பேரானந்தம் அடைந்தார்கள்.

அப்பொழுது ஓர் அன்பர் கூறியதாவது: "மஹராஜ், ஒரு சில நாட்களில் தியானத்தில் நான் பேரமைதியைப் பெறுகிறேன். வேறு சில நாட்களில் அது இயலுவதில்லை. இதன் காரணம் என்னவோ?" மஹராஜ் அருளியதாவது: "ஆம்! அது அவ்வாறு அமைவது உண்டு. சில நாட்களில் தியானத்தினல் பெருமகிழ்ச்சி உண்டாகும். வேறு சில நாட்கள் அது நிகழ்வதில்லை. ஆரம்ப நிலையில் சாதகர்கள் அனைவரும் இந்த அனுபவத்தையே பெறுகிறார்கள். ஆனல் அதன் காரணமாகச் சாதனையை நிறுத்திவிடக் கூடாது. (தொடரும்)

குறிப்புகள்

சிறுவர், சிறுமியர்களுக்கான அறவுரை

குழந்தைகளே, நீங்கள் எல்லாரும் பள்ளியில் கணக்குப் பாடம் பயில்கின்றீர்கள். கணக்குப் பாடத்திலும் நாம் கடவுளைப்பற்றித் தெரிந்துகொள்ளலாம். கணக்கில் வருகிற பூஜ்யத்தின் மதிப்பு என்ன? ஒன்றும் இல்லை என்றுதான் முதலில் தோன்றும். ஆனால் அதற்கு மதிப்பு என்பதே இல்லை என்று சொல்வது சரியன்று. தனியே அதற்கு மதிப்பு இல்லை என்பதுதான் சரியான மதிப்பீடு. ஒன்று முதல் ஒன்பது வரை உள்ள ஏதாவது ஓர் இலக்கம் அதன் வலப் பக்கத்தில் வருமாயின் உடனே அதற்கு மதிப்புக் கூடிவிடுகிறது. உலகத்தில் எத்தனையோவித சம்பத்துக்களை நாம் காணலாம். கல்வி, செல்வம், அழகு, இளமை என்று உலக சம்பந்தமான பேறுகள் யாவும் தம்மளவில் மதிப்பு வாய்ந்தவை அல்ல. கடவுள் என்ற இலக்கத்தோடு சேரும்போது அவை மதிப்புப் பெறுகின்றன. ஒன்று என்பது என்ன? அது ஓர் எண். பூஜ்யம் என்ற இலக்கத்திற்கு அது மதிப்பைக் கொடுக்கிறது. தன்னளவில் அதற்குஎன்று ஒரு மதிப்பும் உண்டு. அம் மதிப்பைத் தனக்குத்தானே ஏற்படுத்திக் கொள்ள இயலாதது பூஜ்யம். அதுபோலவே கடவுள் என்பவர் தன்னில்தானே பிரகாசிப்பவர்; யாண்டும் நிறைநிலையில் திகழ்பவர். அவரோடு சம்பந்தப்படுத்தாத எந்த வகைப்பேறும் உலகத்திற்கோ தனக்கோ நற்பயன்களை விளைவிக்காது. இறைவன் சக்தி வடிவமாக நம்மிடையே இலங்குகின்றார்.

அத்தகைய இறைவன் எங்கே இருக்கின்றார்? அவரை அறிவது எப்படி என்பது கேள்வி. அவர் தூணிலும் துரும்பிலும் உள்ளார். தவம் செய்வோரிடத்தில் இருக்கின்றார், இந்த அறை முழுவதும் நிறைந்துள்ளார், கடவுள் பக்தி உடையோரிடம் அவர் காணப்படுகின்றார் என்றெல்லாம் வெவ்வேறு பாங்கில் நீங்கள் விடை பகர்கின்றீர்கள். இந்த அறையில் காற்று இருக்கிறதா? ஆம், இருக்கிறது. ஆனால் காற்றை நாம் பார்க்கவில்லையே, அது இருப்பதை எப்படி அறிவது? நாம் சுவாசிக்கும்போது மூக்கின் உள்ளே காற்றுப் புகுந்து மீண்டும் வெளியேறுவதை நாம் நிதரிசனமாக உணர்கிறோம். அது போன்று கடவுளைப் பற்றியும் நாம் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம். கடவுளை நம்மால் பார்க்க முடியவில்லை. ஆனால் உள்ளத்தால் அவரை நாம் உணர முடியும். "நீ இருக்கின்றாயா?" என்ற கேள்விக்கு "ஆம், நான் இருக்கிறேன்" என்று திண்ணமாக நாம் பதில் கூறுகின்றோம். 'இருக்கின்றேன்' என்று எது உணர்கிறதோ அதுதான் கடவுள். குழந்தைப் பருவம் முதல் கிழப்பருவம் வரை பருவந்தோறும் மாறியமைகின்ற உடல் அமைப்பு வேறு, மனநிலை வேறு, அனுபவங்கள் வேறு, விருப்பு வெறுப்புக்கள் வேறு, இலட்சியங்கள் வேறு என்று வருகின்ற பல்வேறு நிலைகளுக்கிடையே 'நான் இருக்கிறேன்' என்ற உணர்வு மட்டும் மாறுவதே இல்லை. அந்த மாறாத உணர்வுதான் கடவுள்.

கடவுள் என்பவர் எப்படி இருப்பார்? நாம் எப்படியெல்லாம் இருக்க விரும்புகிறோமோ அப்படியெல்லாம் அவர் இருக்கின்றார். நாம் சுகமாகச் சந்தோஷமாக இருக்கவே விரும்புகிறோம். எனவே கடவுளும் ஆனந்த மயமாகவே இருக்கின்றார். நாம் ஏன் வாழ்க்கையில் கஷ்டப்படுகிறோம்? நாம் கடவுளை மறப்பதால் நமக்குப் புறம்பாக உள்ள கஷ்டம் நம்மை வந்து சூழ்ந்து கொள்கிறது. நாம் பள்ளிக்கூடத்திற்கு எதற்காகப் போகிறோம்? பாடங்களைப் படிப்பதற்காக, உத்தியோகத்திற்குத் தயார் செய்து கொள்வதற்காக என்று பல விதமான பதில்கள் வரும். ஆனால் உண்மையில் நாம் நம்மில் மறைந்து கிடக்கும் அறிவு என்னும் ஒளியை வெளிக்கொணரவே கல்விக் கூடத்திற்குச் செல்கிறோம். கடவுள் அறிவு சொரூபமாக இருக்கிறார். அறிவை நாடுபவர்கள் கடவுளையே நாடுகிறார்கள்.

> "கற்றதனாலாய பயன் என்கொல் வாலறிவன்
> நற்றாள் தொழாஅர் எனின்"

என்று வள்ளுவரும் கல்வியின் பயன் கடவுளை அடைவதே என வலியுறுத்துகின்றார். இன்பத்தை நாடாத உயிர்கள் இல்லை. இன்பம்

இருக்கும் இடமெல்லாம் இறைவனும் இருக்கின்றார். 'இருக்கிறேன்' என்ற உணர்வு வேறு, இறைவன் வேறு அன்று. ஆனந்தம், அறிவு, அன்பு இவற்றின் சொரூபமாக அழியாப் பெருநிலையில் கடவுள் இருக்கிறார். எனவே ஒருவராலும் அவரைப் புறக்கணிக்க முடியாது.

தானே உயிரை விடுவதற்கோ, பிறர் மூலம் உயிரை இழப்பதற்கோ எந்த ஜீவனும் விரும்புவதில்லை. அழியாப்பொருளான கடவுளோடு யாண்டும் பழகி வரும் காரணத்தால் சகல ஜீவன்களும் இந்த மனநிலையைப் பெற்றுள்ளன. கோழி தன் குஞ்சுகளைக் காக்கப் பருந்தைக்கூட எதிர்க்கும். குஞ்சுகள் இயல்பாகவே தாயின் இறக்கைகளுக்குள்ளே பதுங்கிக் கொள்ளும். தமது உயிரைக் காப்பாற்றிக் கொள்ளவே அவை முயல்கின்றன. அழியாப் பொருளோடு கொண்டுள்ள இணக்கத்தின் காரணமாகவே அவையும் அழியாமல் இருக்க விரும்புகின்றன. உண்மையில் மரணத்திற்குப் பிறகும் நாம் அழிவதில்லை. முட்டை ஓடு என்ற சிறையை உடைத்துக்கொண்டு குஞ்சு வெளிப்படுவது போன்று உடலாகிய கூட்டினின்று நமது உயிர் என்னும் பறவை வெளிப்பட்டுப் பரவெளியில் கலக்கிறது. எனவே அழியாமல் இருக்க விரும்புவதும், தெய்வத்தை நாடுவதும் இரண்டும் ஒன்றே.

'கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்று நமது பெரியோர்கள் சொல்லியிருக்கின்றார்கள். மாட்டின் உடல் முழுவதும் இரத்தம் ஓடுகிறது. ஆனால் அதன் மடியில்தான் இரத்தம் பாலாக மாறுகிறது. அதுபோன்று எங்கும் நிறைந்து காணப்படும் தெய்வத்தின் சாந்நித்தியத்தை நாம் ஆலயத்தில் வெகு எளிதில் உணரலாம். நாம் அதிக அளவில் பணம் செலுத்தினால் வங்கியில் அதிக அளவில் பணம் இருப்பு இருக்கும். பணம் சேராவிட்டால் வங்கியிலிருந்து பணம் எடுக்க முடியாது. அதுபோன்று கோவில்களில் நாம் வழிபாடு செய்து அருள் நிலையை வளர்த்தால் நமக்கும், நம் சந்ததியினருக்கும் நன்மைகள் நிறைய விளையும். கோயிலில் நாம் ஜபம், தியானம், பூஜை ஆகியவற்றில் ஈடுபட வேண்டும். குழந்தைகள் ஒரு குழுவாகச் சேர்ந்து அமைதியாக ஓரிடத்தில் உட்கார்ந்து கொண்டு நாமஜபம் செய்தல், கீதங்கள் இசைத்தல், பிரார்த்தனை செய்தல் ஆகியவற்றில் நாள்தோறும் கருத்துச் செலுத்த வேண்டும். நாம் ஆழ்ந்து வழிபாட்டில் ஈடுபடும் பொழுது தெளிவு ஏற்படும். சைவசமய ஆசாரியர்கள் நால்வரைப் பற்றி நீங்கள் தெரிந்து வைத்திருப்பீர்கள். அவர்களில் திருநாவுக்கரசப் பெருமான் கோயில்களுக்குச் சென்று பாடியதோடு உழவாரப் பணியும் செய்தார்.

நாமும் அந்த மகானைப் போலவே பிறருக்குத் தொண்டு செய்து பழகவேண்டும். கோவில்களுக்கு அடிக்கடி சென்று குப்பை, ஒட்டடை இவற்றை அகற்றுதல், தரையைப் பெருக்கித் தண்ணீர் விட்டுக் கழுவுதல், சுவர்களையும், கோயிலில் கையாளும் பொருள்களையும் தூசு போகத் தட்டிச் சுத்தம் செய்தல், நந்தவனத்தில் வேலை செய்தல், மலர்களைப் பறித்து அழகாகப் பூத்தொடுத்தல், சன்னிதிகளில் கோலமிட்டு விளக்கேற்றுதல் போன்ற பல்வேறு தொண்டுகளில் நம் உடலை ஈடுபடுத்த வேண்டும். உடற்பயிற்சி உடலை உறுதி செய்வது போன்று இத்தகைய தொண்டுகள் உள்ளத்தைப் பண்படுத்தும்.

நாம் நாசியின் மூலம் சுவாசிப்பதுபோன்று மனத்தின்மூலம் எண்ணங்களை எண்ணுகின்றோம். கை, கால் இவற்றைப்போல மனமும் நமக்கு ஒரு கருவியாகும். மனதில் நல்ல எண்ணங்கள் எழுந்தால் வாழ்க்கையும் நல்லவிதமாக அமையும். சுயநலமற்ற பணிகளை மேற்கூறியவாறு செய்து வந்தால் மனம் நாளடைவில் பண்படும். உடலின் உறுப்புக்களில் கோளாறு நேர்ந்தால், வைத்தியர்களிடம் காட்டிச் சிகிச்சை பெறுகிறோம். மனதில் கோளாறு வந்தால் பிரார்த்தனையின்மூலம் அதைச் சரிசெய்ய வேண்டும். கடவுளுக்கு 'வைத்தியநாதன்'என்பது ஒரு பெயர். அவ்வைத்திய நாதனிடம் நாம் சரணடைந்தால் அவர் மனதைச் சுத்தப்படுத்திக் கொடுப்பார். காந்தியடிகள் ''உணவு இன்றிப் பல நாட்கள் இருப்பேன். பிரார்த்தனை இன்றி ஒருவேளையும் இருக்க முடியாது'' என்று கூறுவார்.

நாம் நாள்தோறும் வைகறையில் துயிலெழுந்து தெய்வத்தை வழிபடவேண்டும். காலை நான்கு மணிக்குப் பிராம்ம முகூர்த்தம்

தொடங்குகிறது. உத்தமன் அந்த நேரத்தில் விழித்தெழுந்து புனிதமான பணிகளில் ஈடுபடுவான். அதமர்களோ ஆறுமணி ஆன பின்னரும் சோம்பலுடன் படுக்கையில் விழுந்து கிடப்பார்கள். எழுந்தவுடன் பல் துலக்கி முகம் அலம்பி ஓரிடத்தில் உட்கார்ந்து திருவாசகம், திருவாய்மொழி போன்ற நூல்களை ஓதிப் பிரார்த்தனையும், நாமஜபமும் செய்யவேண்டும். பிறகு வீட்டுக் காரியங்களைச் செய்யவேண்டும். மாட்டுக்குப் புல் போடுதல், செடிக்கு நீர் வார்த்தல் என்று எந்த வேலையையும் சிரத்தையுடன் செய்து பழக வேண்டும். வீட்டுப்பாடங்களைப் படித்து, உணவு உண்டு பள்ளிக்குச் செல்வதிலும் ஓர் ஒழுங்குப்பாடு இருக்கவேண்டும். மாலையில் மீண்டும் விளையாட்டு, பிரார்த்தனை, படிப்பு என்று பழக்கப்படுத்திக்கொள்ள வேண்டும். சுற்றுப்புறங்களைச் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும்.

"இயல்வது கரவேல்" என்பது முதுமொழி. நமது திறமைகளைநாம் உலகுக்குப் பயன்படுத்த வேண்டும். நம்மால் கொடுக்க முடிந்ததை வஞ்சகம் பண்ணக்கூடாது. ஊற்றுப் பறித்தால் ஆற்றில் நீர் ஊறும். அது போன்று நமது திறமையை நாம் நாளும் உலகுக்காகப் பயன்படுத்தினால் அது வளரும். பெற்றோர்கள், ஆசிரியர்களிடத்தில் பக்தி, பிறரிடத்தில் அன்பு, கடமைகளில் பொறுப்புணர்ச்சி, தெய்வ வழிபாட்டில் ஆர்வம் ஆகியன மிக நல்ல பண்புகள். இப்பண்புகளைச் சிறுவர், சிறுமிகளாகிய நீங்கள் நன்கு வளர்க்கவேண்டும்.

இமயமலைக் காட்டில் ஒரு நிகழ்ச்சி. ஒரு முனிவர் நிஷ்டையில் இருந்தார். அவர் 'சிவோஹம்—நான் சிவமே' என்று ஜபித்துக் கொண்டிருந்தார். அப்பொழுது பசித்த புலி ஒன்று அவர் உடலைத் தூக்கிக்கொண்டு விரைந்தது. அந்நிலையிலும் அவர் 'சிவோஹம், சிவோஹம்' என்று தொடர்ந்து ஜபிக்கலானார். அவருடைய மனமானது சிவசொரூபத்தில் ஐக்கியமாகிவிட்டது. 'நா' சிவ நாமத்தை ஓதிக்கொண்டிருக்க அவர் உடல் புலிக்கு உணவாகிக்கொண்டிருந்தது. அவர் ஆனந்தத்தில் திளைத்தார். இது மிகப்பெரிய நிலை. பெறுகின்ற பேறுகளுள் சிறந்த பேறு இதுதான். நம்மைப் பண்படுத்தும் பொழுது நாம் கடவுள் சொரூபமாகின்றோம். அழியாப் பெருநிலை அடையப் பெறத் தெய்வ சொரூபங்களாக மாறியமைய முயல்வோமாக. எல்லாம் வல்ல இறைவன் நமக்கு உறுதுணையாக இருப்பாராக!

செய்திகள்

நிகழ்பவை:

திருவண்ணாமலை கார்த்திகை தீபத்தன்று பரணி தீபம் ஏற்றியான பிறகு திருவண்ணாமலை கோவில் கம்பத்திளையனர் சன்னிதியிலிருந்து காலை 6 மணிக்குத் திருப்பராய்த்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவன சந்நியாசிகள் நாம பஜனையுடன் கிரிபிரதட்சணம் செய்வார்கள். வழியில் வசதியான இடத்தில் சிறு அந்தர் யோக நிகழ்ச்சியும் நிகழும். அன்பர்களும் தாய்மார்களும் கிரிபிரதட்சணத்திலும் அந்தர்யோக நிகழ்ச்சியிலும் கலந்துகொள்ளலாம்.

திரு. S. விஸ்வநாதன் சத் கைங்கரிய நிதியிலிருந்து ஆண்டுதோறும் பழனியில் ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமிக்கு அபிஷேக ஆராதனையும், பக்தர்களுக்குச் சமாராதனையும் தபோவனம் செய்து வருகின்றது. இவ்வாண்டு நவம்பர் மாதம் 30ஆம் தேதி சனிக்கிழமையன்று திருப்பராய்த்துறை ஸ்ரீவிவேகானந்த குருகுலப்பள்ளி எட்டாம் வகுப்பு மாணவர்களையும் தபோவனம் நடத்தும் திருச்சி கைலாசபுரத்திலுள்ள பாய்லர் பிளாண்டு மேல்நிலைப்பள்ளி ஆசிரியர்களையும் மாணவர்களையும், திருவேடகம் விவேகனந்த மேல்நிலைப்பள்ளி மாணவர்களையும் பழனிக்கு அழைத்துச் சென்று ஸ்ரீ தண்டாயுதபாணி சன்னிதி முன் ஐக்கிய வழிபாடு செய்ய ஏற்பாகாகியுள்ளது. வழிபாடு முடிந்து சுவாமி தரிசனம் செய்தபின் பழனி அடிவாரத்திலுள்ள சங்கரண்டாம்பாளையம் பட்டக்காரர் மடத்தில் பக்தர்களுக்கு நண்பகல் உணவு வழங்கப்படும். அன்று நிகழும் ஐக்கிய வழிபாட்டிலும், சமாராதனையிலும் கலந்துகொள்ளுமாறு அன்பர்களும், தாய்மார்களும் அன்புடன் அழைக்கப்படுகிறார்கள். அன்று காலை 9 மணிக்குக் கந்தர் அனுபூதி ஓதிக்கொண்டு மாணவர்களும், அன்பர்களும், தாய்மார்களும் மலைமீது ஏறுவார்கள். மலையேறிய பின் பழனியாண்டவர் சன்னிதியில் ஐக்கியவழிபாடு நிகழும்.

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்
இயற்றிய நூல்கள்

ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம் தமிழ் வியாக்கியானம்	ரூ.	25-00
ஸ்ரீமத் பகவத்கீதை 15-ம் பதிப்பு	,, ...	21-00
மஹாபாரதம்	,, ...	10-00
இராமாயணம்	,, ...	7-00
ஸ்ரீ தாயுமானசுவாமி பாடல்கள்	,, ...	6-00
ஸ்ரீராமகிருஷ்ணர் உபதேச மஞ்ஜரி	,, ...	6-50
தினசரி தியானம்	,, ...	5-00
ஞானயோக விளக்கம்	...	15-00
ராஜயோக விளக்கம்	...	12-00
கர்மயோக விளக்கம்	...	10-00
பக்தியோக விளக்கம்	...	9-00
விவேகானந்த விவரணம்	...	7-50
விவேகானந்த உபநிஷதம்	...	7-00
கடவுளின் வடிவங்கள்	...	6-00
ஸ்ரீ விவேகானந்தர் ஜீவிதம்	...	6-00
சந்தேகம் தெளிதல் பாகம்—1	...	5-50
சந்தேகம் தெளிதல் பாகம்—2	...	5-50
மாணவருக்கு ஒரு சொல்	...	4-50
அம்பிகையின் ஆயிரம் திருநாமங்கள்	...	4-50
சகோதரி நிவேதிதை	...	3-75
சுவாமி விவேகானந்தர்	...	3-50
பஜனைப்பாடல்கள்	...	3-50
ஸ்ரீ சாரதாதேவியார் சரிதம்	...	3-00
அநுஷ்டான வேதாந்தம்	...	3-00
தேவரகசியம் (முதலிய கதைகள்)	...	3-00
தாயுமானவர் இயற்றிய		
கருணாகரக் கடவுள் விரிவுரை	...	3-50
பரிபூரணானந்தம் டி	...	3-00
சின்மயானந்த குரு டி	...	3-00
ஆனந்தமானபரம் டி	...	3-00
சுகவாரி டி	...	3-00
மௌனகுரு வணக்கம் டி	...	3-00
எங்கும் நிறைகின்றபொருள் டி	...	2-50
பரசிவ வணக்கம் டி	...	2-00
மலைவளர் காதலி டி	...	1-50
கண்ணன் என்னும் கடவுள்	...	2-50
அறம் வளர்த்த நம்பி	...	2-50
சந்நியாசி	...	2-50
விரதவீரர் பீஷ்மர் (நாடகம்)	...	2-50
ஏகலைவ்யனின் குருபக்தி (நாடகம்)	...	2-50
ஹரிச்சந்திரன் டி	...	2-00
தவப்புதல்வர்கள் டி	...	2-00
வாலி மோட்சம் டி	...	2-00
பாதுகாபட்டாபிஷேகம் டி	...	1-75
நன்மக்களைப் பெறுதல்	...	1-75
விபீஷணன் சரணாகதி (நாடகம்)	...	1-50
பரமஹம்சர் பாமாலை	...	1-50
காயத்ரி	...	1-50
இறைவணக்கம்	...	1-50
மாணாக்கன்	...	1-25
செத்தவர்கள் நம்மோடு பேசுகிறார்களா?	...	1-25
சைவன் யார்?	...	1-25
*ஆலய வழிபாடு	...	1-25
*ஆத்ம சக்தி	...	1-25
*மனிதனது நிஜசொருபம்	...	1-25
*சிவதத்துவம்	...	1-25
குழந்தைகளின் களிக்கூடம்	...	1-00
இராவண தத்துவம்	...	1-00
தபோபலன் (நாடகம்)	...	1-00
பார்வதி, லக்ஷ்மி, சரஸ்வதி கர்வபங்கம்	,, ...	1-00
இந்துமதமும் கிறிஸ்துவமதமும்	...	1-00
நோய்க்கு இடம் கொடேல்	...	1-00
*கணபதி	...	1-00
*சக்தி தத்துவம்	...	0-90
நன்னெறிகளும் அருள் வாக்குகளும்	...	0-80
*சூரியநாராயணன்	...	0-75
தெய்வீக மகிமைகள்	...	0-75
*முருகக்கடவுள்	...	0-75
வர்ணாச்ரம தர்மம்	...	0-70
தாயுமானவர் ஆலயத்தில் தத்துவ அமைப்பு	...	0-60
*விஷ்ணு தத்துவம்	...	0-50
கர்மகாண்டம் எது? ஞானகாண்டம் எது?		0-50
அருள் விருந்து (பௌண்ட் செட்)	...	10-00
விவேகானந்தரின் வீர கர்ஜனை	...	0-40
அருள் விருந்து 1 to 25 ஒவ்வொன்றும்	...	0-30
கந்தர் அநுபூதி	...	0-30
The Bhagavad Gita (12th Imp.)	...	30-00
Sri Lalithambika Sahasranama Stotram		15-00
The Indian National Education	...	10-00
Tirukkural (with plastic cover)	...	9-00
Facets of Brahman or The Hindu Gods	...	9-00
Ramakrishna lives Vedanta	...	8-00
Man Making Message	...	7-00
Siva Sahasranama Stotram	...	7-00
Ramayana (with plastic cover)	...	7-00
Mahabharata ,,	...	6-00
The Bhagavad Gita (Small Size)	...	6-00
Sri Krishna-The Manifest Divinity ,,	...	6-00
Daily Divine Digest (DELUXE)	...	6-00
Daily Divine Digest (Ordinary)	...	4-00
Sri Vishnu Sahasranama Stotram	...	4-00
Thus Speaks Tayumana Swamigal	...	3-50
Holy Bible—In the Light of Vedanta	...	2-50
*Introducing The Gita	...	2-00
The Student	...	2-00
Reminiscences of Master Mahashaya	...	1-50
The Nursery School	...	1-50
The Garland of Paraaparam	...	1-50
*Key to Higher Life	...	1-25

அன்பர்களுக்கு வேண்டுகோள்

தபோவனம் கல்வி, பண்பாடு, ஆன்மீகம் ஆகிய மூன்றையும் தன் லக்ஷியமாகக் கொண்டுள்ளது. நல்ல கல்வியின் மூலம் பண்பாடு வளர்கிறது. பண்பாட்டில் மேலே போகப்போக அது ஆத்மார்த்தமாக வடிவெடுக்கிறது. ஆத்மார்த்தத்தில் மானுட வாழ்வு நிறைவு பெறுகிறது. இக்காரியங்களைத் தபோவனம் இயன்ற அளவு நல்ல முறையில் செய்து வருகிறது. அதன் கல்வி ஸ்தாபனங்களில் பதினைந்தாயிரம் பிள்ளைகள் கல்வி பெறுகின்றனர். அந்தர்யோகங்கள் மூலம் நல்ல ஆத்ம சாதகர்கள் ஆத்மீகத்தில் நற்பயன் அடைகின்றனர். தபோவன வெளியீடுகளும், தர்ம சக்கரமும் நல்ல கருத்துக்களைப் பரப்பி மக்களை நல்வழிப் படுத்துகின்றன. இதன் சேவையை நன்குபுரிந்து கொண்டு அன்பர்கள் அவ்வப்போது இதற்கு பொருள் உதவி செய்து வந்துள்ளார்கள்.

இப்போது தபோவனம் ஏற்றுக்கொண்ட புதிய திட்டங்களுக்குப் பொருளுதவி தேவைப்படுகிறது. திருநெல்வேலியிலும், மதுரையிலும் இரண்டு பெண்கள் ஸ்தாபனம் ஆரம்பிக்கத் திட்டமிட்டு அதற்குரிய காரியங்கள் நடந்து வருகின்றன. மதுரையில் தபோவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ள திரு. ரத்தினசபாபதிசெட்டியார் தர்ம டிரஸ்ட்டின் இடத்தில் பெண்களுக்கு உயர்நிலைப்பள்ளி நடத்தக் கட்டடங்கள் கட்டத் திட்டமிட்டுள்ளோம்.

திருநெல்வேலியில் உருவாக இருக்கும் ஸ்தாபனமும், மதுரையில் உருவாக இருக்கும் ஸ்தாபனமும் பெண்களின் கல்வி வளர்ச்சிக்கும், பண்பாட்டு வளர்ச்சிக்கும் செயல்பட்டு வரும். திருப்பராய்த்துறையில் மாணவர்களுக்கு ஓர் இலட்சியக் குருகுல உயர்நிலைப்பள்ளியும், மதுரை ஜில்லா திருவேடகத்தில் மாணவர்களுக்கு ஓர் இலட்சியக் குருகுலக் கல்லூரியும் அமைந்திருப்பது போன்று, திருநெல்வேலியில் பெண்களுக்கு ஓர் இலட்சியக் கல்லூரி அமைக்கும் திட்டத்தைத் தபோவனம் மேற்கொண்டுள்ளது. மதுரையிலும் பெண்களுடைய பண்பாட்டு வளர்ச்சிக்கு ஓர் இலட்சிய உயர்நிலைப் பள்ளி அமைக்கத் தபோவனம் திட்டமிட்டுள்ளது. திருநெல்வேலியில் அதற்கான கட்டடங்கள் உருவாகிக்கொண்டிருக்கின்றன. மதுரையில் கட்டடவேலை துவங்க வேண்டும். இவ்விரண்டு ஸ்தாபனங்களுக்கும் செய்கின்ற பொருளுதவி தபோவனம் நிறைவேற்றவிருக்கும் சீரிய பணிகளுக்குப் பயன்படும். இதற்கு நன்கொடையாகத் தரப்படுகின்ற தொகைக்கு 80G விதிப்படி வருமானவரி விலக்கு உண்டு.

திருப்பராய்த்துறையில் உள்ளூர் குழந்தைகளுக்காக ஒரு மேல்நிலைப்பள்ளி நடைபெற்றுவருகிறது. அதில் ஆயிரம் பிள்ளைகள் படிக்கிறார்கள். இது பழங்கால வேதபாட சாலை, சத்திரம் ஆகிய பழைய கட்டடங்களில் நடந்து வந்தது. இதற்குப் பொருத்தமான கட்டடங்கள் இப்போது கட்டிக்கொண்டுள்ளோம். இப்போது புதிய பள்ளிக் கட்டடங்களுக்குச் சர்க்கார் மானியம் ஏதும் தரும் திட்டம் இல்லை. இதற்குக் கிராம முன்னேற்றத் திட்டத்தின் கீழ் 35CCA என்கிற 100 சதவிகிதம் வருமான வரிவிலக்கு உள்ள வரிவிலக்குப் பெற்றுள்ளோம். இந்த வரிவிலக்கு 31—12—85 முடிய தரப் பெற்றுள்ளது. எனவே அன்பர்கள் மனமுவந்து நன்கொடை அளிக்கவேண்டுகின்றோம். யார் யார் எந்த எந்தத் திட்டத்திற்கு என்று நன்கொடை அளிக்கிறார்களோ அந்தத் திட்டத்திற்கே அது செலவு செய்யப்படும்.

இங்ஙனம்
சித்பவானந்த

Edited by SWAMI NITHYANANDA,
Printed & Published by Swami Sankarananda at Tapovanam Printing School, Tirupparaitturai Tiruchi Dt.,